அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 38 | ஜூலை 2024 | திருவள்ளுவர் ஆண்டு 2055

## இருவழியில் தமிழ்த் தேசியம்



## ரணிலின் மாஸ்டர் பிளான்

## முகத்திலறையும் உண்மைகள்

தேர்தல் நெருங்கிவிட்டது; தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?



## வாழ்க்கை கற்றுக்கொடுக்கும் பாடம்



# மனிதம் வெற்றிபெறுமா?

அர்ச்சனா என்றொரு வீரம்!
மனிதம் கலந்த  மானிடம்!
மருத்துவ மாபியாக்களின் போலி
முகத்திரை கிழித்தவன் இவன்.

ஆ..! இது நம் நாட்டிலா!
நம்ப முடியாத பேருண்மை.
மனிதம் நேசிக்க வேண்டிய
மருத்துவர்கள்
பணத்தின் அடிமையா?

தேசவிடிவிற்காய் தம்
உயிர்களைத் தந்த
மாவீரத் தெய்வங்கள்
வாழ்ந்த மண்ணிலா
இத்தனைக் கொடுமையும் நடந்தது?

பொறுக்க முடியாதுஎன
பொங்கியவன் அர்ச்சனா நீ!
புலிக்குப் பிறந்தவன்
எப்படி பூனையாக முடியும்?

நீ தூவிய சிறு விதை
இன்று
அரசையே ஆட்டம் காண
வைக்கிறது.
அதிகார திமிர் பிடித்த
மனித  நேயமில்லா
மருத்துவர் குழாம்
வாயடைத்து நிற்கிறது.

காலங்கள் கடந்தாலும்
தர்மம் நிச்சயம் வெல்லும்!
அதற்கு சான்றாய்
மீண்டும் நீ
உன்னிடத்திற்கு
வந்து விட்டாய்.

மருத்துவ மாபியாக்கள்
ஒரு வலைப்பின்னல்!
சூழ்ச்சிகளின் சூத்திரமறிந்து
அஞ்சாமல் துணிவுடன்
இயம்பிய உன் வீரம் கண்டு
மெய் சிலிர்த்து போனோம்.

ஒவ்வொரு துறையிலும்
ஒளிந்திருக்கும் மாபியாக்களை
வெளிக் கொணர
அர்ச்சுனாக்கள்
தோன்ற வேண்டும்

தமிழீழம் மலர
தலைவன் வழியில்
அணி வகுத்தது போல
ஊழல் மாபியாக்களை
ஒழிக்க
ஒவ்வொருவரும்
உண்மை உணர்வுடன்
போராட வேண்டும்.

காலங்கள் கடந்தாலும்
வெற்றி எமக்கானதே

கலை

எழுநிலம்
EZHUNILAM
மாத இதழ் | மணம்: 38
ஜூலை
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


- ஆசிரியர் கருத்து... 05
- தேர்தல் நெருங்கிவிட்டது... 06
- ஆண்டகை... 08
- ரணிலின் மாஸ்டர் பிளான்... 09
- இருவழியில்.... 12
- நசுக்கப்படும் உரிமைகள்... 16
- காற்றிலே (கவிதை).... 19
- வெலிக்கடை படுகொலையும்... 20
- விலைமாது (கவிதை)... 23
- வட்டுவாகல் பாலம்... 25
- வாழ்க்கை...... 27
- காற்றாலையும்.... 28
- செல்லாக் காசும்... 32
- இரணைமடுக்குள..... 34
- கே.எம்.பஞ்சாபிகேசன்... 38
- பழந்தமிழர்களும்.... 41
- இடப்பெயர்வும் நானும் (பாகம்; 06)... 42
- தாய்மையும்... 45
- ஈரானின் புதிய... 47
- வலை (நெடுங்கதை)... 51




## திருக்குறள்

**குறள் 022:**

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று"

**விளக்க உரை:**

பிறர் நலம் காக்க தமது சுகங்களைத் துறந்தவர்களின் பெருமையை அளந்து கூறுதல், உலகத்தில் இதுவரை பிறந்து இறந்தவர்களை கணக்கிடுவதைப் போன்றது.














# அகவை 4 இல் காற் தடம் பதிக்கும்

அரசியல், சமூக, பொருளாதார இதழ்
எழுநிலம்




நீங்கள் எழுதிய ஆசிரியர் பக்கம் மனதைத் தொட்டது. எனக்குள்ளும் இதே கேள்விதான். பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி வாக்குகளை நாங்கள் எடுத்துக்கொண்டோம் என்றே வைத்துக் கொள்வோம்.

அடுத்தது என்ன? ஏதாவது உருப்படியான திட்டம் இருக்கிறதா? வருடாவருடம் புதிது புதிதாக உருட்டல்கள்தான் வருகின்றன. சுமந்திரனைப் பற்றிய கட்டுரையில் சிறிது உண்மை இருந்தாலும் அவர் தலைமைக்கு கொஞ்சமும் தகுதியற்றவர். புரிகிறது. கட்டுரை, எழுதியவரின் மனநிலையைத்தான் பிரதிபலிக்கிறது.

**-பார்த்திபன் சுவாமிநாதன்.**
**இலண்டன்.**

'பொது வேட்பாளர் என்கிற மாயமான்' என்ற கட்டுரை பிரச்சனையை ஓரளவு அலசியிருக்கிறது.

'பொது வேட்பாளர்' என்ற பதத்தை வைத்தே இன்னுமொரு பத்து வருடங்களை ஓட்டி விடுவார்கள். மன்னார் பற்றிய கட்டுரை அதிர்ச்சிகரமாக இருக்கிறது.

இங்கே இருக்கும் எங்களுக்கு இவ்வளவு உண்மையும் தெரியாமல் இருந்திருக்கிறோம். கதை, கவிதைகள் நன்று. இன்னும் கதைகளை அதிகப்படுத்துங்கள். பல பிரச்சனைகளை கதை மூலமாக இலகுவாக மக்களுக்கு கடத்த முடியும் என்று நான் நம்புகிறேன்.

**-மனித நேயன்,**
**திருமலை, தாயகம்.**

'வலை' நெடுங்கதை அங்கம் 21 ஐக் கடந்து விட்டது என்று நம்ப முடியவில்லை. அற்புதமாகச் செல்கிறது. எளிய நடையில், ஒரு தளபதியாகவிருந்து சாமானியனாக வாழும் ஒருத்தனின் கண்களுக்கூடாக சமுதாயத்தைப் பார்ப்பது சிறப்பு. வாழ்க. இடப்பெயர்வு அவலம் அத்தனை துயரங்களையும் திரும்பக் கண்முன்னே கொண்டு வருகிறது. கவிதைகள் குறைந்துவிட்டன. பார்த்துக் கொள்ளுங்கள்.

**-அபிஷா சிவசாந்தகுமார்**
**பிலடெல்பியா, அமெரிக்கா**

மணம் 37 அட்டைப்படம் பார்க்க அழகாக இருந்தாலும் கருத்தாழம் குறைவுதான்.

'எங்கள் மண்' ஈழத்து மக்கள் பட்டு வந்த துயரங்களையும் அதனால் அவர்களுள் ஆழப் பதிந்திருக்கும் ஒரு நியாயமான கோபத்தையும் புலப்படுத்துகிறது. அதேசமயம் நாங்கள் மறந்துபோன எங்கள் கிராமத்து மணத்தையும் நினைவுபடுத்துகிறது. 'எழுநிலம்' ஒரு அருமையான படைப்பு. வாழ்த்துகள்.

**ஸ்ரீநிவாசன் திருவேங்கடம்**
**கோவை, இந்தியா.**

ஆசிரியர் பக்கம் ஆயிரம் கேள்விகளை எமக்குள் கொண்டு வருகிறது. மக்கள் ரணிலுக்கு எதிராக இருக்கிறார்கள் என்று நாம் சந்தோஷப்படுகிறோம்.

இறுதியில் தகுதியற்றவர்கள் தலைமையில் உட்கார்ந்து எங்கள் வாழ்க்கையை நாசம் செய்கிறார்கள். எழுநிலத்தில் கட்டுரைகள் நன்று.

'வலை' நெடுங்கதை சூப்பராகப் போகிறது. எங்களைச் சுற்றி நடக்கும் யதார்த்த வாழ்க்கையை நேரே பார்ப்பது போலவும் அதில் ஒரு கதாபாத்திரமாக நாமே வாழ்வது போலவும் எழுத்தாளரின் படைப்பு அற்புதமாகப் போகிறது. 'இடப்பெயர்வு' கட்டுரையின் வலி மனதைப் பிசைகிறது.

**-மேகலா இசைவாணன்.**
**ரொறன்ரோ, கனடா.**

'இடப்பெயர்வும் நானும்' தொடர் என்னை மிகவும் பாதித்தது. சில இடங்கள் பதைபதைக்கவும், சில நிகழ்வுகள் கண்களை ஈரமாக்கவும், சில வரிகள் சிங்களவன் மீது ஆறாத சினம் கொள்ளவும் செய்தன. தமிழக மக்கள் ஈழ மக்களின் வரலாற்று வடு துயரைத் தெரிந்துகொள்ள வேண்டும். அது நமது கடமையும்கூட. தங்கள் அனுமதியோடு இத்தொடரை எனது இலக்கியப் பதிப்பகத்தால் வெளியிட விரும்புகிறேன்.

**-வின்சன் இராஜேந்திரன்.**
**சென்னை, இந்தியா.**

இஸ்ரேல் பிரதமருக்கு பிடியாணை வருவது இருக்கட்டும், இங்குள்ள துரோகிகளுக்கு எப்போது இப்படியொரு பிடியாணை வரும்? முல்லையின் கவிதைகளில் வாழ்க்கையின் முதிர்ச்சி தெரிகிறது. கதிர்காம பயணக் கட்டுரை நன்று. கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள் பக்கம் தட்டிக் கேட்பவர்கள் கொல்லப்படுவார்கள் என்பதை தெளிவாக்குகிறது. எங்களின் விளையாட்டு வீராங்கனைகளுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

**-சர்வேஸ்வரி பரந்தாமன்.**
**பொன், ஜேர்மனி.**

இலங்கைத் தேர்தலைப் பற்றியே எழுதி கழுத்தை அறுக்காதீர்கள். ஆனால் 'பொது வேட்பாளர்' பற்றிய ஆசிரியர் பக்கம், அலசல் நன்று. மன்னார் பற்றி, காலமான டாக்டர் பற்றி எழுதியது நன்று. வழமைபோல ஐங்கரன் விக்கினேஸ்வரா கலக்குகிறார். மனுஷனுக்கு எப்படித்தான் நேரம் கிடைக்கிறதோ தெரியவில்லை. மொத்தத்தில் வழமை போல எழுநிலம் அருமை. மேலும் வளர வாழ்த்துகிறோம்.

**-டானியல் ஃபங்குரஸ்**
**மெல்போர்ண்,**
**அவுஸ்திரேலியா.**




எழுநிலம் சஞ்சிகையின் கடந்த மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின் இணையத்தளத்தில் இதழ்கள் பிரிவில் பார்வையிடலாம்...
https://www.noolaham.org

## ஆசிரியர் பக்கம்

# முகத்திலறையும் உண்மைகள்

**விரும்பியோ** விரும்பாமலோ தாமும் போராட்டத்திற்கு பங்களிப்பு செய்ய நேர்ந்துவிடும் என்று அதை எதிர்த்தவர்களும் இருக்கிறார்கள். இன்று, அவர்களே அப்படியொரு பொற்காலம் வந்துவிடாதா என்று ஏங்குமளவுக்கு தாயகத்தில் குற்றங்கள் பெருகிக் கிடக்கின்றன,

அண்மைக் காலத்தில் பேசுபொருளாகியிருப்பது ‘மருத்துவ மாஃபியா’, ‘மருந்து மாஃபியா’ போன்ற சொற்பதங்கள். ஒரு நேர்மையான வைத்திய அதிகாரி வெளியிட்ட தகவல்கள் அவரை ஒரு ‘ஹீரோ’ வாக உயர்த்தியிருக்கின்றன.

போர் மௌனிக்கப்பட்ட பின்னர் வெளிப்படையாகத் தெரியும் வைத்திய நிர்வாகங்களின் குழறுபடிகள் பற்றி மக்கள் குறைப்பட்டுக் கொண்டாலும், சில சமயங்களில் முறையிட்டாலும் அதற்கு எந்தப் பலனும் இதுவரை இருந்திருக்கவில்லை. அவர்களிடம் போதுமான சாட்சியங்களும் இருக்கவில்லை, அல்லது சாட்சியங்கள் மூடி மறைக்கப்பட்டன. இப்போது, வைத்திய அதிகாரி ஒருவரே உள்ளே நடைபெறும் முறைகேடுகள் பற்றி சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருப்பதும், பொதுவெளியில் பேசுவதும் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

‘வைத்தியர் சுகாதார அமைச்சின் கீழ் வேலை செய்பவர். அவர் நிர்வாக பிரமாணங்களின்படி தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். அதை விடுத்து பிரச்சனையை பொதுவெளிக்கு எடுத்து வந்தது தவறு’ என்று விமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள். கைதுகளும் காணாமல் ஆக்கப்படுதலுமே சட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் ஒரு நாட்டில் தன்னந்தனியனாக ஒருவன் ஒரு பிரச்சனையைச் சுட்டிக் காட்டியிருந்தாலே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருப்பான்.

மக்களின் கிளர்ச்சியை தடுத்து நிறுத்தும் நோக்கில், கடற்தொழில் அமைச்சர் ஐயா டக்ளஸ் தேவானந்தா சாவகச்சேரி மருத்துவ மாஃபியாவை சரிசெய்வேன் என்ற போர்வையில் உடனே களமிறங்கி விட்டார். அமைச்சரவையில் தான் இதுபற்றி பேசியதாகவும் மக்களிடம் சொல்லியிருக்கிறார். ஆனால், இன்றுவரை அவர் அமைச்சரவையில் பேசியதற்கான எந்தத் தரவுகளும் இல்லை. ஹெகலிய ரம்புக்வெல்லவின் 130 மில்லியன் மருந்து மோசடிக்கு துணைபோனவர் டக்ளஸ். இவர் வடக்கில் மருத்துவ மாஃபியாவை அழிப்பார் என்று எந்த முகாந்தரத்தை வைத்து நம்ப முடியும்?

அப்படியே அவர் ஆசைப்பட்டாலும் GMOA எனப்படுகின்ற பலம்பொருந்திய வைத்தியர்களின் தொழிற்சங்கத்தின் பலத்தோடு அவரால் பொருத முடியவில்லை என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. உண்மையை வெளிக்கொணர்ந்த வைத்தியர்மீது நீதித்துறை, சுகாதாரத்துறை என்று பல துறைகள் ஒன்றாகப் பாய்ந்து பலகுற்றங்களை அடுக்கியுள்ளன. மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை ஊழலும் குற்றங்களும் நிறைந்திருப்பதைத்தான் இவை புலப்படுத்துகின்றன.

வைத்தியசாலை பற்றி அந்த வைத்தியர் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் இப்போது இருந்த இடம் தெரியாமல் மறைக்கப்பட்டிருக்கும். ஆனால், தம்மிடமுள்ள ஆதாரங்களை பொதுமக்கள் திரட்டி எடுத்து இந்தப் பிரச்சனைகள் மூடி மறைக்கப்படாமல் செய்ய முடியும்.

இங்கே தோண்டத் தோண்ட குற்றங்கள் மேலே வந்தவண்ணம் இருக்கின்றன. கருக்கலைப்புகள், பிணத்தை எடுக்க வரும் உரியவர்களிடம் பணம் அறவிடப்படுவது, அரச மருத்துவமனை உபகரணங்கள் பாவிக்கப்படாது துருப்பிடிக்க வைக்கப்படுவது, வெளிநாடுகளிலிருந்து இலவசமாகக் கிடைத்த மருந்துகள் மக்களுக்கு விநியோகிக்கப்படாமை, அரச ஊதியம் பெறும் வைத்தியர்கள் கையெழுத்து மட்டும் போட வருவது, மக்களை தமது தனியார் மருத்துவமனைகளுக்கு வருமாறு அழைத்து கொள்ளை பணமீட்டுவது, அவர்களே மருந்துச்சாலைகள் நடத்துவது, அரச மருந்துகளை தனியார் மருந்துச்சாலைகளில் பணத்துக்கு விற்பது என்று குற்றப்பட்டியல் நீள்கிறது.

இவ்வளவும் வடக்கில் பணிபுரிந்த வைத்தியர்கள் பேசும்போது இடையிடை கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள். தட்டிக் கேட்ட சில நேர்மையான வைத்திய அதிகாரிகள் உயிர்ப் பயம் காட்டப்பட்டு ஊரைவிட்டு விரட்டியடிக்கப் பட்டிருக்கிறார்கள். மனநோய் என்று முத்திரை குத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் சம்பளப் பணம்கூட மறுக்கப்பட்டிருக்கிறது.

‘இது என்ன பெரிது? இதைவிட சிறுநீரக மாஃபியா, ஓகன் மாஃபியா என்று’ என்று தொடங்கிய வைத்தியர் ஒருவர் தனக்கு உயிராபத்து வந்துவிடும் என்ற அச்சத்தில் மிகுதியைச் சொல்ல மறுத்து விட்டார். ‘மெர்சல்’ பட பாணியில் நடைபெறும் இந்தக் குற்றங்கள் இந்தியாவில் இல்லை. எமது தாயகத்தில், போருக்குப் பின்னான வடக்கில்தான் என்பது வேதனையிலும் வேதனை.

பாராளுமன்றில் புலி முழக்கமிடும் தமிழ் அரசியல்வாதிகளின் சாயமும் வெளுத்திருக்கிறது. சாவகச்சேரி ஊழலின் வெளிப்பாடு எங்கள் இன்னுமொரு ‘அரகலய’வை உருவாக்கிவிடுமோ என்று பயந்து ஓடிவந்த சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவை யாழில் மறித்து ‘சாவகச்சேரிப் பிரச்சனை பெரிதல்ல’ என்று சிறிதரனும், ‘மக்கள் இல்லாத ஒன்றை ஊதிப் பெருப்பித்து விட்டார்கள்’ என்று இதுவரை எதுவுமே செய்யாத சோம்பேறி தர்மலிங்கம் சித்தார்த்தனும், அவர்களோடு அங்கஜன் இராமநாதனும் தடுத்ததால் சுகாதார அமைச்சரின் சாவகச்சேரி வருகை யாழோடு நிறுத்தப் பட்டிருக்கிறது.

சட்டம் துணைபோகாத இடத்தில் மக்களின் எழுச்சி மட்டுமே குற்றவாளிகளை பொறுப்புக்கூற வைக்கும். மக்கள் எழுச்சிதான் நேர்மையான அதிகாரிகளை கவசமாகக் காக்கும். இப்போது விழுந்திருப்பது ஒரு சிறிய பொறி மட்டுமே. எல்லாத் துறைகளிலும் இப்படியான ஊழல்கள் மலிந்திருக்கின்றன. மக்கள் அனைத்தையும் இனம் கண்டுகொள்ள வேண்டும். எழுச்சியுடன் தட்டிக் கேட்க வேண்டும். ஊடகங்களின் துணையுடன் உண்மையை பரப்ப வேண்டும். மக்கள் ஒன்றுபட்டு பொங்கி எழுந்தால் மட்டுமே மாற்றம் சாத்தியமாகும்.

# தேர்தல் நெருங்கிவிட்டது



சு.நிஷாந்தன்

# தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

இலங்கைத் தீவில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவித்திருந்தது.

எதிர்வரும் 14ஆம் திகதிவரை வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தை செலுத்த முடியும். 15ஆம் திகதி காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தலுக்கான நாட்கள் நெருங்கி வருவதால் தென்னிலங்கையில் பெரும் அரசியல் அதிர்வலைகள் உருவாகியுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடந்த இரண்டு வருடங்களாக ஆதரவளித்து ஆளுங்கட்சியாகவும் செயல்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அக்கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை களமிறக்கும் முடிவை இன்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

ஆனால், பொதுஜன பெரமுனவில் சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என அனைவரும் சுயாதீன வேட்பாளராக போட்டியிட உள்ளதாக கூறும் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள சிலரை இணைத்து பரந்துபட்ட கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் ரணில் ஈடுபட்டுள்ளதுடன், விரைவில் கூட்டணிக்கான ஒப்பந்தங்களையும் கைச்சாத்திட உள்ளார்.

அதேபோன்று பொதுஜன பெரமுன எடுத்துள்ள தீர்மானத்தின் பிரகாரம் வர்த்தகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேராவை வேட்பாளராக களமிறக்க உத்தேசித்துள்ளது. பிரதமர் வேட்பாளராக நாமல் ராஜபக்ச களமிறக்கப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச,



அனுரகுமார திஸாநாயக்க என மூன்று பிரதான வேட்பாளர்கள் தெற்கில் தேர்தலில் களங்கண்டுள்ள சூழலில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு தொடர்பிலான மக்களின் எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்திக்கான ஆதரவை அறிவித்துவிட்டது. என்றாலும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அக்கட்சியின் உயர்பீடம் தாருசலாமில் கூடி உத்தியோகப்பூர்வமான அறிவிப்பை வெளியிட உள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எதிர்வரும் 5ஆம் திகதி தமது இறுதி தீர்மானத்தை அறிவிக்க உள்ளதாக அக்கட்சியின் தலைவர் ரிசாத் பதியூதீன் தெரிவித்துள்ளார். கடந்தகாலத்தில் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயல்பட்ட ஏ.எச்.எம்.அதாவுல்லா ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சி தமது ஆதரவு யாருக்கென முடிவெடுக்க எதிர்வரும் 10,11ஆம் திகதிகளில் கூட உள்ளது.

வடக்கில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் 45 சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எவருக்கும் ஆதரவு இல்லை என அறிவித்துள்ளதுடன், வடக்கு, கிழக்கு மக்கள் தேர்தலை புறக்கணிக்க வேண்டுமெனவும் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, மலையகத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சஜித் பிரேமதாசவுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றையும் கைச்சாத்திட்டுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் உயர்பீடம் கூடி மேற்கொள்ளப்படும் உடன்படிக்கை தொடர்பில் கலந்துரையாடல் நடத்த உள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவும் உள்ளது.

மலையகத்தின் மற்றுமொரு பிரதான கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. என்றாலும், அதன் உயர்பீடம் அடுத்தவாரம் கூடி உத்தியோகபூர்வ தீர்மானத்தை வெளியிட உள்ளது.

எவ்வாறாயினும் இம்முறை வரலாறு காணாத வகையில் விஜேதாச ராஜபக்ச, சரத் பொன்சேகா, திலித் ஜயவீர என பிரபல்யமான வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை எந்தவொரு வேட்பாளராலும் பெற முடியாதென கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

வெரிடேர்ச் ரிசர்ஸ் நிறுவனம் அண்மையில் நடத்தியுள்ள கருத்துக்கணிப்பில் சஜித் மற்றும் அனுரவுக்கு சம அளவான ஆதரவு மக்கள் மத்தியில் இருப்பதாக கூறியுள்ளது. ரணில் விக்ரமசிங்கவுக்கான ஆதரவு குறைவாகவே இருப்பதாகவும் குறித்த கருத்துக்கணிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பின்புலத்தில் அடுத்த இரண்டு வாரங்கள் இலங்கை அரசியலில் தீர்மானமிக்க மற்றும் அரசியல் புரட்சிகள் இடம்பெற போகும் வாரங்களாக இருக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியிருந்தாலும் வரலாற்றில் இதற்கு முன்பிருந்தது போன்று ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடைபெறும் என்ற நம்பிக்கை இன்னமும் மக்கள் மத்தியில் எழவில்லை.

அதற்கு பிரதான காரணம் அரசியலமைப்பை கரைத்துக் குடித்தவராக உள்ள ரணில் விக்ரமவிங்க எந்தநேரத்தில் எதை செய்வார் என அவருக்கு அருகில் உள்ளவர்களால்கூட அனுமானிக்க முடியாது.

பொலிஸ்மா அதிபரின் நியமனம் தவறானதென உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்மானம் தவறானதென வெளியாகியுள்ள அரசாங்கத்தின் அறிவிப்பானது, நாட்டின் நீதித்துறைக்கு விடுக்கப்பட்டுள்ள பெரிய சவாலாகும்.

கடந்த காலத்தில் ஜனநாயகம், நீதித்துறையின் சுயாதீனம் பற்றி பேசிய ரணில் விக்ரமசிங்க இன்று நீதித்துறையின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தியுள்ளார். இந்த காரணிகள்தான் தேர்தல் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மையை மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.

> வடக்கில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேம சந்திரன் மற்றும் 45 சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.









# ஆண்டகை

இந்தியா சென்னையிலிருந்து தேசியத் தலைவரின் வரலாற்றை இணையத் திரைத் தொடராக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் திரு வின்சன் இராசேந்திரன். அதன் முதற் கட்டமாக ஜூலை 25 அன்று 'ஆண்டகை' என்ற தலைப்புடன் புத்தகம் வெளிவரவுள்ளது. இதற்கு கவிஞர் காசி ஆனந்தன் ஐயா அவர்களின் அணிந்துரையுடன் வெளிவரும் இந்தத் திரை இலக்கியம் மக்கள் மனதைக் கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

## அணிந்துரை: காசி ஆனந்தன்

வின்சன் இராசேந்திரன் அவர்களின் 'ஆண்டகை' தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் விறுவிறுப்பான ஒரு காலப் பகுதியைத் திரை இலக்கியம் ஆக்கியிருக்கிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் பிறந்த 1954 ஆம் ஆண்டுக்கும் இலங்கையின் தலைமை அமைச்சராக இருந்த இனவெறியன் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா கொலையுண்ட 1959 ஆம் ஆண்டுக்கும் இடையில் தமிழீழம் நெருப்பில் குளித்த கதை.

புத்த சிங்கள இனவெறியரால் தமிழர்கள் கொலையுண்ட காலம்.புலிகளின் தலைவர் பிரபாகரன் வரவால் புதியதோர் வரலாறு முளை கொண்ட காலம்.

*'புத்தம் சரணம் கச்சாமி*
*தம்மம் சரணம் கச்சாமி*
*சங்கம் சரணம் கச்சாமி'*

என்னும் புத்த மதத்தின் மூல மந்திரம் இந்நூலின் தொடக்கம் முதல் முடிவுவரை புயலாய் உறுமுகிறது.

தம்மம் என்பது புத்த மதத்தில் உயிர்களைக் காப்பது.தம்மம் என்பது சிறிலங்காவில் உயிர்களை அழிப்பது.இதுதான் வின்சன் படைத்துள்ள திரை இலக்கியம்.

இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன் எல்லாளனின் மறுபிறப்பாய் இந்நூலில் பிரபாகரன் இடம் பெறுகிறார்.

பழைய தமிழீழ மண்ணின் வரலாற்றோடு புதிய தமிழீழ மண்ணின் வரலாற்றை இணைக்கும் பதிவு.

இனவெறிச் சிங்களவனின் புத்த மதத் திமிரே தமிழீழ மண்ணில் வெடித்த இன விடுதலைப் போரின் மூலவேர் என்பதை வின்சன் இராசேந்திரன் இந்நூலில் நிறுவியிருக்கிறார்.

வீறு கொண்ட விடுதலை மூச்சு நூல் நெடுகிலும் விசை நூறு கொண்ட புயலாய் வீசுகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தன்னிகரற்ற ஒரு திரை இலக்கியமாய் வின்சன் இராசேந்திரன் அவர்களின் 'ஆண்டகை' தனி இடம் பெறும்.

வானின் கோடை கால மின்னலையும் இடியையும் இலக்கியமாய் வார்த்தெடுக்கும் வின்சன் இராசேந்திரன் அவர்களின் எழுது கோலை வாழ்த்துகிறேன்.

**காசி ஆனந்தன்**



ஒருவன்

# ரணிலின் மாஸ்டர் பிளான்





## பொன்சேகா, விஜயதாச களமிறங்குவதன் நோக்கம் என்ன?

இலங்கைத் தீவின் அரசியல் களம் மிகவும் தீர்மான மிக்க ஒரு கட்டத்தை எட்டியுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டது முதல் அரசியல் பேரம் பேசல்கள் தீவிரமடைந்துள்ளன.

பலர் கட்சித் தாவல்களுக்கு தயாராகிவிட்டனர். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சிலர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மேடையில் ஏறவுள்ளனர். முதல் வேட்பாளராக கட்டுப்பணத்தை செலுத்தினார் ரணில். ஆளுங்கட்சியில் இருந்து ஒருசிலர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பக்கம் தாவவும் உள்ளனர்.

இதற்கு மத்தியில் பிரதான ஆளுங் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தமது ஆதரவு யாருக்கு என்பதை எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்க உள்ளது.ரணில் விக்ரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன ஆதரவளிக்க வேண்டும் என்பதற்காகவும் அவருக்கு ஆதரவாக பரந்துபட்ட கூட்டணியொன்று உருவாக வேண்டும் என்பதற்காகவும் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும் முதல் வேட்பாளராக ரணில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

பொது வேட்பாளர் என்ற விம்பத்தை பயன்படுத்தியே தென்னிலங்கையில் போர் வெற்றி நாயகனாகவும் எவராலும் வீழ்த்த முடியாத பலம் பொருந்திய தலைவராகவும் வர்ணிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவை ரணில் விக்ரமசிங்க வீழ்த்தியிருந்தார்.



ரணில் தமது வெற்றியை உறுதி செய்வதற்கான வேலைத்திட்டத்தை கடந்த பல மாதங்களுக்கு முன்னதாகவே தயாரித்து விட்டதாக கூறும் அரசியல் ஆய்வாளர்கள், அவரின் நிகழ்ச்சி நிரலின் கீழ்தான் விஜேதாச ராஜபக்ச, சரத் பொன்சேகா போன்றோரும் தமிழ் பொது வேட்பாளரும் உருவாகியுள்ளதாகவும் கூறுகின்றனர்.

### உருவாகும் அரசியல் கூட்டணி

அதே நிலைப்பாட்டை சற்று மாறுதலாக இம்முறை ரணில் கையில் எடுத்துள்ளார். அவரை அவரே பொது வேட்பாளராக அறிவித்துக்கொண்டு அவருக்கு ஆதரவான ஒரு வட்டாரத்தை உருவாக்கி வருகிறார். அமைச்சரவையில் உள்ள பொதுஜன பெரமுனவின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணிலுடன் கைகோர்த்து விட்டனர். கட்சியில் எஞ்சியுள்ளவர்களை மாத்திரமே அவர் தமது கூட்டணியில் இணைக்க வேண்டியுள்ளது.

பொதுஜன பெரமுனவை கட்டாயப்படுத்தி தம்மை ஆதரிக்கும் நிலைப்பாட்டுக்கு ரணில் வந்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தத் தேர்தலில் உருவாகும் அரசியல் கூட்டணி வெற்றிபெற்றால் அதே கூட்டணியே மீண்டும் பொதுத் தேர்தலிலும் போட்டியிடும்.

### தமிழ் பொது வேட்பாளரின் பின்புலம்

அதனால் பொதுஜன பெரமுன என்ற கட்சி காணாமல் போய் விடும் என பசில், மகிந்த, நாமல் உள்ளிட்டவர்கள் அச்சமடைந்து உள்ளமையாலேயே ரணிலுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்த தயங்கி வருகின்றனர்.

ரணில் தமது வெற்றியை உறுதி செய்வதற்கான வேலைத்திட்டத்தை கடந்த பல மாதங்களுக்கு முன்னதாகவே தயாரித்து விட்டதாக கூறும் அரசியல் ஆய்வாளர்கள், அவரின் நிகழ்ச்சி நிரலின் கீழ்தான் விஜேதாச ராஜபக்ச, சரத் பொன்சேகா போன்றோரும் தமிழ் பொது வேட்பாளரும் உருவாகியுள்ளதாகவும் கூறுகின்றனர்.

அதேநேரம் தமிழ்ப் பொதுவேட்பாளர் பின்னணியில் இந்தியா என்ற கதைகளும் இல்லாமலில்லை.

தென்னிலங்கை கடும்போக்குவாத வாக்குகளை இதுவரை ரணில் விக்ரமசிங்க பெற்றதில்லை. அதுதான் அவர் 1994ஆம் ஆண்டு முதல் 22 தேர்தல்களில் தோல்வியடைய பிரதான காரணமாகவும் இருந்துள்ளது.

### பல்வேறு ரகசிய பேச்சுகள்

இம்முறை விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்ற பேரினவாத கடும்போக்குவாதிகள் கடும்போக்குவாத வாக்குகளை சிதறடிக்க கூடும் என்பதாலேயே அவர்களை இணைத்துக் கொள்வதில் ரணில் ஆர்வம் காட்டவில்லை.

ராஜபக்சர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டுள்ள தமிழ் மக்கள் மாற்று வேட்பாளர்களில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் உருவானால் சஜித்துக்கு செல்லும் குறிப்பிடத்தக்களவான வாக்குகளை சிதறடிக்க முடியும் என்பது ரணிலின் கணிப்பு.

சி.வி.விக்னேஸ்வரன் போன்றோர் கடந்த காலத்தில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவான கருத்துகளை வெளியிட்டு வந்த பின்புலத்தில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டுக்கு வர பல்வேறு ரகசிய பேச்சுகள் இடம்பெற்றிருக்கக் கூடும் என்பது அரசியல் ஆய்வாளர்களது கருத்து.

### ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும்

அண்மையில் நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட செல்வராசா கஜேந்திரன் எம்.பி, தமிழ் பொது வேட்பாளர் பின்புலத்தில் அரசாங்கமே இருப்பதாகவும் அரசாங்கத்துடன் உறவாடியவர்களே இந்த விடயத்தை முன்னெடுப்பதாகவும் பகிரங்க குற்றச்சாட்டை முன் வைத்திருந்ததுடன், வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார். அதேபோன்று அமைச்சரவைக்குள் இருந்து கொண்டு வேட்பாளராக போட்டியிட போவதாக கூறும் விஜேதாச ராஜபக்ச மீது எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்காது அல்லது அவருக்கு எதிராக எவ்வித கருத்துகளையும் முன் வைக்காதிருக்கும் காரணமும் அவரது பின்புலத்தில் ரணில் விக்ரமசிங்க இருக்க கூடும் என்பதே எனத் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த மதப்பீடங்கள் மத்தியில் விஜேதாச ராஜபக்சவுக்கு ஓரளவு செல்வாக்கு உள்ளது. அதனால் பௌத்த சித்தாந்தங்களை அதிகமாக பேசும் தரப்பினர் விஜேதாசவை ஆதரிக்கக் கூடும்.

சஜித் பிரேமதாசவும் பௌத்த சித்தாந்தங்கள் மீது அதிக அக்கறை கொண்டவர் என்பதுடன், தன்னை ஒரு பௌத்தராகவும்





> பொது வேட்பாளர் என்ற விம்பத்தை பயன்படுத்தியே தென்னிலங்கையில் போர் வெற்றி நாயகனாகவும் எவராலும் வீழ்த்த முடியாத பலம் பொருந்திய தலைவராகவும் வர்ணிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவை ரணில் விக்ரமசிங்க வீழ்த்தியிருந்தார்.

கடும் போக்கற்றவராகவும் காட்டிக்கொள்கிறார். விஜேதாசவின் நகர்வுகள் சஜித்துக்கு செல்லும் இந்த வாக்குளை சிதறடிக்க கூடும்.

**சஜித் பிரேமதாசவின் வாக்கு சதவீதம் வீழ்ச்சியடையும்**

பல வேட்பாளர்களை போட்டியிட வைப்பதன் மூலம் இந்த நாட்டின் செல்வந்த வர்க்கத்தின் 20 சதவீதமான வாக்குகளையும் முதலாளித்துவ சித்தாந்தங்களை பேசுபவர்களினதும் ஏனைய சில பொதுவான நிலைப்பாட்டை கொண்டுள்ள தரப்பினரது ஆதரவையும் பெற்று 30 முதல் 35 சதவீதமான வாக்குளை பெறுவது ரணில் விக்ரமசிங்கவின் இலக்காக இருக்க கூடும் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ரணில் - சஜித் தரப்புக்கு எதிரான நிலைப்பாட்டில் பயணிக்கும் தேசிய மக்கள் சக்திக்கு தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் கிடைப்பது கடினமான ஒரு விடயமாக இருப்பதால் அவர்கள் குறிப்பிடத்தக்களவான வாக்குகளை பெற்றால் ரணிலின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நாட்டின் பிரதான வேட்பாளராக உள்ள சஜித் பிரேமதாசவின் வாக்கு சதவீதம் கடுமையாக வீழ்ச்சியடையும் என்பது ரணில் மற்றும் அரசாங்கத்தின் கணிப்பு.

அந்தப் பின்புலத்தில்தான் கடந்த பல மாதங்களாக அரசியல் காய் நகர்வுகள் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகிறது.





# கலியுகம்

*மனிதனாய் பிறக்கின்றோம்.*
*மனிதனாய் இறக்கின்றோமா?*
*உயிருக்கு*
*விலை இல்லை என*
*யாரும்*
*கூறி விட முடியாது!*

*ஏனென்றால்*
*தலைக்கு*
*ஒரு கோடி*
*பேரம் பேசுவார்கள்.*
*பழிக்குப் பழி*
*ரத்தத்திற்கு ரத்தம்*

*ஏன் இந்த வன்மம்?*
*பிஞ்சுக் குழந்தைகளையும்*
*விடுவதில்லை இந்த*
*காமப் பிசாசுக்கள்.*
*கல்வியையும்*
*களவாடி விட்டார்கள்!*

*அதில் தான்*
*எத்தனை எத்தனை*
*முறை கேடுகள்?*

*பொன்னையும் பொருளையும்*
*களவாடி*
*பார்த்திருக்கின்றோம்.*
*ஆனால் இப்பொழுது*
*மனித உறுப்புகளை கூட*
*விட்டு வைப்பதில்லை!*

*இவற்றையெல்லாம்*
*பார்த்துக் கொண்டிருக்கிற*
*பூமித்தாய்*
*மூச்சு முட்டி*
*வாய் பிளந்து*
*எல்லாரையும்*
*விழுங்கப் போகிறாள்!!*
*மனிதர்களே.!*
*நீங்கள் மகனாக வேண்டாம்*
*மனிதனாக வாழுங்கள்!!*

**அன்புடன் முல்லை பாஸ்கர்**



கருணாகரன்

# இருவழியில் தமிழ்த் தேசியம்

தமிழ்த் தேசிய அரசியல் இரண்டு முகாம்களாகப் பிரிந்துள்ளது. ஒன்று, தீவிரத் தேசியவாதத்தை அடிப் படையாகக் கொண்டது. அதாவது முற்றுமுழுதாகவே கற்பனையில் சமராடுவது. கடுமையான அரச எதிர்ப்பு, பிற இன, மத வெறுப்பைக் காட்டுவதெல்லாம் இந்தத் கற்ப னைத் தீவிரத் தன்மையின் வெளிப்பாடுகளே. (குரைக்கிற நாய் கடிக்காது).

மற்றது, மென் தேசியவாத நிலைப்பாடுடையது. யதார்த் தம், நடைமுறை போன்றவற்றின் அடிப்படையில் சிந்தித்துச் செயலாற்ற விளைவது. முடிந்தளவுக்கு மக்களின் நலன்,



மக்களுடைய தேவைகள், மக்களுடைய பிரச்சினைகளுக் காக அரசுடன் இணையக் கூடிய புள்ளிகளில் இணைந்தும் எதிர்க்க வேண்டியவற்றை எதிர்த்தும் செயற்படுவது. பிற இன, மதப் பிரிவினரோடு புரிந்துணர்வின் அடிப்படையில் இணங்கியிருக்கவும் கூடியது.

முதலாவது பிரிவில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவஞா னம் சிறிதரன், அரியநேத்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம், என். ஸ்ரீகாந்தா போன்றோருள்ளனர். இதில் சுரேஸ் பிரேமச்சந்திர னைத் தவிர, ஏனையோர் விடுதலைப் புலிகளையும் தலைவர் பிரபாகரனையும் நிபந்தனையின்றி ஏற்றுக் கொண்டவர்கள்.

அதனால் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டுத் தீவிரத்தை இவர்களிடத்தில் காண முடியும். சுரேஸ் பிரேமச்சந்திரன், புலிகளுக்கு வெளியே நிற்கும் தீவிரத் தமிழ்த்தேசிய நிலைப் பாட்டாளராக இருக்கிறார். ஆனாலும் அதைக் காட்டிக் கொள்வதில்லை. இதற்குக் காரணங்கள் உண்டு. அவை பற்றி இன்னொரு கட்டுரையில் விரிவாகப் பார்க்கலாம்.

இரண்டாவது தரப்பில், இரா. சம்பந்தன், ஆபிரகாம் சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்க லநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், துரைரத்தினம், சி.வி.கே சிவஞானம், சத்தியலிங்கம், சயந்தன் போன்றோருள்ளனர். இவர்கள் புலிகளின் நிழலில் அரசியல் செய்வதைப் பெரும்பாலும் விரும்புவதில்லை. அதற்குப் பிறகான அரசியலைச் செய்ய




வேண்டும் என்ற புரிதல் உள்ளவர்கள். இதில் சிலர் இடையிடையே புலிகளை விமர்சித்தும் புலிகளுக்கு அப்பாலான முறைகளைத் தொட்டும் தமது அரசியலை முன்னெடுக்கின்றனர்.

இவை இரண்டுக்கும் இடையில், சிலபோது தீவிரத் தேசியவாதிகளாக மேலுயர்ந்தும் சட்டெனக் கீழிறங்கி அரசு தரப்புடன் சமரசம் செய்வோராகவும் இங்குமங்குமாகத் தளம்பிக் கொண்டும் சிலர் உள்ளனர். இந்தப் போக்கில் மாவை சேனாதிராஜா, சி.விக்னேஸ்வரன், சரவணபவன் போன்றோர் முக்கியமானவர்கள். அடிப்படையில் இவர்கள் மக்கள் நலனை விட்டுத் தூர விலகித் தனித்திருப்போர். ஆனால், அங்குமிங்குமாகச் சரிந்தாடித் தமது தனிப்பட்ட அரசியல் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதில் வல்லவர்கள்.

இந்தப் பிரிவு அல்லது பிளவு வெளிப்படையாகத் தெரியாது விட்டாலும் கூர்மையாக அவதானிப்போருக்கு நன்றாக விளங்கும். தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் நடந்து கொண்டிருக்கிற ஆதரவு - எதிர்ப்பு என்பதிலும் இதுவே தொழிற்படுகிறது. செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சிவசக்தி ஆனந்தன், துரைரத்தினம் போன்றோர் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாகச் சொன்னாலும் மெய்யான ஈடுபாட்டோடும் உண்மையான தெளிவோடும் இதனை ஏற்கவில்லை என்பது பகிரங்கமான விடயம்.

இருந்தாலும் தாம் சார்ந்திருக்கும் கூட்டணி, கட்சி போன்றவற்றின் நலன், கட்டுப்பாடு போன்றவற்றுக்காக மெல்ல அசைந்து கொடுத்திருக்கின்றனர். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து நிற்கின்ற ஒரே காரணத்துக்காகவே ரெலோவும் புளொட்டும் பொதுவேட்பாளரை ஆதரிக்கின்றன. அதுவும் நீண்ட இழுபறிகளுக்குப் பிறகு அரை மனதோடு வெளியிடப்பட்ட ஆதரவுக் கருத்தாகும்.

இவர்களுக்கு களச்சூழலும் நிலைமையும் புரியும். இதற்குப் பிரதான காரணம், இவர்கள் யாழ்ப்பாணச் சூழலுக்கு வெளியே தமது அரசியல் இருப்பையும் மனதையும் கொண்டிருக்கின்றனர்.

அதனால் யாழ்ப்பாணச் சூழலை மனதிற் கொண்டு தீர்மானங்களை எடுப்பதில்லை. தாங்கள் செயற்படும் யாழ்ப்பாணத்துக்கு வெளியேயான நிலைமைகளைக் கவனத்திற் கொண்டே தீர்மானங்களை எடுக்கின்றனர் அல்லது இவர்கள் எடுக்கும் தீர்மானங்களில் யாழ்ப்பாணத்துக்கு வெளியேயான வன்னி மற்றும் கிழக்கு மாகாண நிலவரங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

எனினும், நிலைமைகளின் போக்கில் இவர்களுடைய பொதுவேட்பாளர் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியங்களே அதிகமுண்டு. காரணம், இவர்கள் யதார்த்தத்தின் வழியில், நடைமுறைச் சாத்தியங்களைக் குறித்து விடயங்களை அணுகும் தன்மையைக் கொண்டவர்கள் என்பதேயாகும்.

முதலாவது தரப்பு புலிகளின் தொடர்ச்சியாகத் தம்மைக் காட்டிக் கொள்ள முற்படுவது. ஆனால், அது புலிகளின் தொடர்ச்சிக்குரியதோ அடையாளத்துக்குரியதோ அல்ல. தம்மைத் தாமே அவ்வாறு உருவகித்துக் கொள்வது. கவனிக்கவும் அப்படி உருவாக்கிக் கொள்வதல்ல; உருவகித்துக் கொள்ளல் என்பதை. மற்றும்படி புலிகளுடைய செயற்பாட்டுப் பாரம்பரியத்தைப் பின்பற்றுவதல்ல.

இரண்டாவது தரப்பு புலிகளிடமிருந்து, அவர்களுடைய அரசியற் தொடர்ச்சியிலிருந்து நீங்கிச் செல்ல முயற்சிப்பது. புலிகளின் அரசியலுக்கு ஒரு காலகட்டம் உண்டு. அது வேறு. இப்பொழுது வேறு காலகட்டம். எனவே இதற்குரிய அரசியலை முன்னெடுக்க வேண்டும் எனச் சிந்திப்பது.

அதனால் தமிழ் மக்களுடைய அரசியல் நலனைப் பற்றி ஓரளவுக்கு யதார்த்தமாகச் சிந்திக்க முடிகிறது. அடிப்படையில் மற்றத் தரப்பிலிருந்து இதனுடைய வேறுபாடு இங்கேதான் நிகழ்கிறது. தங்களுடைய வழியில் முடிந்தளவுக்கான செயற்பாட்டு விளைவுகளை உருவாக்க இது முயற்சிக்கிறது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்துக்கு அப்பாலான அரசியல் தீர்மானங்களிலும் செயற்பாடுகளிலும் மேற்சொன்ன இருவகை நிலைப்பாடே இனி வரும் காலத்திலும் செல்வாக்குச் செலுத்தப் போகிறது. இந்தப் போக்கு வரவரத் தீவிரமடையும். இது தவிர்க்க முடியாத அடிப்படையான குணாம்ச வேறுபாடாகும். இதற்குள் சில உப பிரிவுகள் - சிறு கட்சிகள், தனியாளுமைகள் உண்டு. அவை இந்த இரண்டு பெரும் போக்குகளுக்குள்ளும் அடங்கக் கூடியன.

இந்த அடிப்படை வேறுபாட்டிலேயே தமிழ்த் தேசியவாதச் சக்திகள் பிளவுண்டு, உடைந்து, புதுப்புது அணிகளாகவும் கட்சிகளாகவும் சிதறிக் கொண்டிருக்கின்றன. இது தவிர்க்கவே முடியாத விளைவு. இதனைக் கட்டுப்படுத்துவது கடினம். அப்படிக் கட்டுப்படுத்தி, ஒருங்கிணைவுக்குக் கொண்டுவர வேண்டுமானால், ஆளையாள் பழித்துரைப்பதை விட, யதார்த்த நிலைமை எப்படியுள்ளது என்ற தெளிவோடு வெளிவெளியாக உரையாட வேண்டும்.

அந்த உரையாடல் கற்பனைக்கும் - நடைமுறைக்குமிடையிலான மோதலாகவே நிகழும். அதில் ஈடுபடுவோரின் அரசியல் முதிர்ச்சியும் மக்கள் நலனில் உள்ள அக்கறையும் அந்த மோதலைத் தணித்து, மெல்ல மெல்ல ஒரு புதிய விஞ்ஞான பூர்வமாக அரசியலின்





பக்கமாகக் கொண்டுவரக் கூடிய தாக இருக்கும்.

ஆனால், தீவிர நிலைப்பாட்டை உடையோர் எப்போதும் கற்பனையிலும் தம்மைப் புனிதர்களாகக் கட்டமைத்துக் கொள்ளும் பாவனை செய்தலிலும் (உருவகித்தலிலும்) பிடிவாதமாக இருப்பதால் எளிதில் மாற்றங்கள் நிகழ்வதற்கான சாத்தியங்கள் குறைவு. காலம் கரையுமே தவிர, உருப்படியாக எந்தக் காரியங்களும் நிகழாது. இது மேலும் பின்னடைவுகளையே சமூகத்திற்கு அளித்து நிற்கும். மறுதரப்பை இவர்கள் கடுமையாக எதிர்த்துக் குற்றம் சாட்டுவர். தேவையெனில் கடுமையாக விரோதிக்கவும் கூடும்.

இந்த அடிப்படையைப் புரிந்து கொள்ளத் தவறி, தமிழ்த் தேசியச் சக்திகளுக்கிடையே ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் கொண்டு வரப்போகிறோம் என்றால் அதை விட அறியாமை வேறில்லை.

சரி, இந்தப் பிரிவு - பிளவு எப்படி உண்டானது? ஏன் உருவாகியது?

வரலாற்றுச் சூழலே எதையும் தீர்மானிப்பதுண்டு. ஆயுதப் போராட்டத்துக்கு முன்பான அரசியற் போராட்டங்களை மேற்கொள்ள வைத்தது ஒரு வரலாற்றுச் சூழல். அதற்கடுத்து ஆயுதப் போராட்டத்தை உருவாக்கியது இன்னொரு வரலாற்றுச் சூழல். அது முடிவுக்கு வந்தது அல்லது முடிவுறுத்தப் பட்டது இன்னொரு வரலாற்றுச் சூழல். இதில் உள்நாட்டு நிலவரங்களும் பிராந்திய, சர்வதேசப் போக்குகளும் செல்வாக்குச் செலுத்தியதையும் நாம் கவனிப்பது அவசியம்.

அதைப் போன்றதே ஆயுதப் போராட்டத்துக்குப் பிறகான இன்றைய நிலவரம். இது இன்னொரு வரலாற்றுச் சூழல். இந்தச் சூழல் எதையெல்லாம் கோரி நிற்கிறதோ அதை நிறைவேற்ற வேண்டியது அரசியலாளர்களின் பொறுப்பு - கடமை.

முக்கியமாக யுத்தத்திற்குப் பிறகு, யுத்தத்தினால் அழிவடைந்த (அழிக்கப்பட்ட) பிரதேசங்களையும் மக்களையும் (சமூகத்தையும்) மீள் நிலைப்படுத்த வேண்டிய அவசியமிருந்தது. அழிவடைந்த பிரதேசங்களை எந்த அடிப்படையில் மீள் நிலைப்படுத்துவது என்று தமிழ்த்தரப்பு ஒரு போதுமே சிந்திக்கவில்லை. மிகப் பெரிய இது வரலாற்றுத் தவறாகும்.

உண்மையில், அழிவடைந்த - அழிக்கப்பட்ட பிரதேசங்களை மீள்நிலைப் படுத்தும் போது அவற்றின் பண்பாட்டுத் தொடர்ச்சியும் வரலாற்றுத் தொடர்ச்சியும் அறாதவகையில் புதிய வடிவத்தில் அதைச் செய்திருக்க வேண்டும். இதற்கு சமூகவியல், புவியியல், பண்பாட்டியல், வரலாற்றியல், பொருளாதாரத்துறை சார்ந்த அறிஞர்களையும் செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்கியதொரு கட்டமைப்பு உருவாக்கப் பட்டிருக்க வேண்டும். அது நடக்கவில்லை. 'மீள்குடியேற்றம்' என்ற பெயரில் அரசு எதை எண்ணியதோ அதன்படியே மீள் நிலைப்படுத்தல் நடந்தது.

அவ்வாறே சமூகத்தை மீள் நிலைப்படுத்துவதற்கான பொறிமுறைகளும் அதற்குரிய கட்டமைப்புகளும் தமிழ்த்தரப்பினால் மேற்கொள்ளப் படவில்லை. இப்பொழுது போதைப்பொருள் பாவனை, சமூக வன்முறைகள், தொழிலின்மை, இயற்கை வள அழிப்பு - அபகரிப்பு, பண்பாட்டுச் சீரழிவு போன்றன அதிகரித்திருப்பதற்குக் காரணம் சமூகத்தைக் கை விட்டமையே ஆகும். இங்கும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலே வேலை செய்தது.

இப்படி இரண்டு அவசிய நிலைகளில் செய்ய வேண்டிய பணிகளைச் செய்யாமல், அதை அரசின் கைகளில் விட்டதன் விளைவுகளே இன்றைய பின்னடைவுகளாகும். இவற்றைப் பற்றிய மறு பரிசீலனைகளை தமிழ்ச் சமூகம் (அரசியற்கட்சிகள், அரசியல் அபிலாஷையைக் கொண்டிருக்கும் மத அமைப்புகள் உட்பட அனைத்துத் தரப்பினரும்) செய்வது அவசியம்.

இவ்வாறே மக்களுடைய உளநிலையை மேம்படுத்துவதற்கும் தமிழ்த் தரப்புகள் முயற்சிக்கவில்லை. தமிழ்த்தரப்பின் யுத்தத் தோல்வி, போராட்டத் தோல்வியாக அரசினால் மடைமாற்றம் செய்யப்பட்டது.

அதை மறுதலிக்கும் விதமாக புதிய அரசியற் போராட்ட முறையை மக்களுக்குள் இறக்கவும் இல்லை. அதைத் தமிழ்த் தலைமைகள் கண்டறியவும் இல்லை.

பலவீனப்படுத்தப்பட்ட தமிழ்ச் சமூகத்தைப் பலப்படுத்துவதற்கு பல வழிகளிலும் முயற்சிகளை எடுத்திருக்க முடியும். முக்கியமாக அரசியல் காரணங்களால் பிளவுண்ட முஸ்லிம்களுடனான உறவை வலுப்படுத்தி

> தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்துக்கு அப்பாலான அரசியல் தீர்மானங்களிலும் செயற்பாடுகளிலும் மேற்சொன்ன இருவகை நிலைப்பாடே இனி வரும் காலத்திலும் செல்வாக்குச் செலுத்தப் போகிறது. இந்தப் போக்கு வரவரத் தீவிரமடையும். இது தவிர்க்க முடியாத அடிப்படையான குணாம்ச வேறுபாடாகும். இதற்குள் சில உப பிரிவுகள் - சிறு கட்சிகள், தனியாளுமைகள் உண்டு. அவை இந்த இரண்டு பெரும் போக்குகளுக்குள்ளும் அடங்கக் கூடியன



யிருக்க வேண்டும். கூடவே முடிந்தளவுக்கு மலையக மக்களோடும் சிங்களத் தரப்பிலுள்ள ஜனநாயக - முற்போக்கினரோடும் இணைந்து செயற்பட விளைவதன் மூலமாக பரந்தளவிலான அரசியற் திரட்சியை உருவாக்கியிருக்க முடியும்.

சமவேளையில் சர்வதேச சமூகத்தோடும் பிராந்திய சக்திகளாகிய இந்தியா, சீனா போன்றவற்றோடும் உறவை வலுப்படுத்தியிருக்க வேண்டும். அந்த உறவு சம்பிரதாயமானவையாக அமையாமல், அரசியல், பண்பாட்டு, பொருளாதார உறவாக வளர்த்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கு புலம்பெயர் சமூகத்தின் வாய்ப்பு பெரிதாக இருந்தது.

ஆனால், குழுக்களாகவும் அணிகளாகவும் பிளவுண்டு, ஆளையாள் சந்தேகிப்பதிலும் வசை பாடுவதிலும்தான் கடந்த 15 ஆண்டுகளையும் தமிழ்ச் சமூகம் கழித்தது. உள்நாட்டிலும் வெளியே புலம்பெயர் சூழலிலும் இதுதான் நிகழ்ந்தது.

கடந்த 15 ஆண்டுகால நிலவரங்களை அறிய வேண்டுமானால், தமிழ்ச் சமூகம் எப்படிச் செயற்பட்டிருக்கிறது? அதனுடைய சிந்தனைப் போக்கு எப்படி இருந்திருக்கிறது? அதற்குள் என்ன நிகழ்ந்திருக்கிறது? என்பதை அறிய இணைய வெளியிலும் ஊடகப் பரப்பிலும் தேடினால், அதிகமாகக் கிடைப்பது குப்பைகளேயாகும். ஆக்கபூர்வமான - விஞ்ஞான பூர்வமான விளைவுகள் மிக மிகக் குறைவு. மக்களுக்குத் தலைமை தாங்குவதென்பது கட்சித் தலைமை, கூட்டணிகளின் தலைமை போன்ற பெயரை வைத்திருப்பதில் நிகழ்வதல்ல. அதொரு தகுதியுமல்ல. அது அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு, மானுட, வரலாற்று அடிப்படைகளில் இதயமும் மூளையும் இணைந்து நிகழ்த்தும் ஒரு ஆழமான செயலாகும்.

பரந்த மனப்பாங்கோடும் கூர்மையான அறிவுத்திறன், உணர்திறன் போன்றவற்றோடும் செயற்படுமிடத்தே இதன் வெற்றியை எட்ட முடியும்.

> பலவீனப்படுத்தப்பட்ட தமிழ்ச் சமூகத்தைப் பலப்படுத்துவதற்கு பல வழிகளிலும் முயற்சிகளை எடுத்திருக்க முடியும். முக்கியமாக அரசியல் காரணங்களால் பிளவுண்ட முஸ்லிம்களுடனான உறவை வலுப்படுத்தியிருக்க வேண்டும். கூடவே முடிந்தளவுக்கு மலையக மக்களோடும் சிங்களத் தரப்பிலுள்ள ஜனநாயக - முற்போக்கினரோடும் இணைந்து செயற்பட விளைவதன் மூலமாக பரந்தளவிலான அரசியற் திரட்சியை உருவாக்கியிருக்க முடியும்.

போர்க்காலத்தில் ஒரு தொகுதி மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தனர். ஏனைய மக்கள் அரச கட்டுப்பாட்டில் வாழ்ந்தனர். இருநிலைகளில் மக்கள் வாழ நேர்ந்தாலும் அரசுக்கு எதிரான உளநிலையையே கொண்டிருந்தனர். போரின் முடிவுக்குப் பிறகு இந்த உளநிலை மேலும் தீவிரமடைந்தது.

அதாவது, அரசும் சிங்களப் பேரினவாதமும் தம்மைத் தோற்கடித்து, நிர்க்கதியாக்கியுள்ளது என்ற கோபம் மக்களிடமிருந்தது. இதனைத் தமது அரசியலுக்கான முதலீடாக மாற்றுவதிலேயே தமிழ்த் தலைமைகள் தீவிர கரிசனையைக் கொண்டிருந்தன. பதிலாக மக்களைப் பலப்படுத்துவதிலும் பிரதேசங்களை வளர்த்தெடுப்பதிலும் கரிசனை கொள்ளவில்லை.

மக்கள், தங்கள் வாழிடங்களில் வாழ்க்கையைத் தொடர்வதற்கு அங்கே கல்வி, மருத்துவம், போக்குவரத்து, தொழில் வாய்ப்பு, நீர்வசதி உள்ளிட்ட உட் கட்டுமானங்களை விருத்தி செய்ய வேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் மக்கள் அந்தந்தப் பிரதேசங்களில் நம்பிக்கையோடு வாழ்வர். இல்லாதபோது மக்கள் வாய்ப்பான சூழலை நோக்கிப் பெயரவே முற்படுவர். இது உயிரியல் இயல்பு.

இதை உணரத் தவறியது தமிழ்த்தலைமை. பதிலாக அது அரசை விமர்சிப்பதன் மூலம் மக்களின் கோபத்தையும் கவலைகளையும் திசைமாற்ற முற்பட்டது.

இதற்கு எண்ணெய் விடுவதிலேயே கவனம் கொண்டிருந்தனர் தமிழ்த் தேசியக் கருத்து நிலையாளர்களான பத்தியாளர்களும் ஊடகர்களும் எழுத்தாளர்களும். பதிலாக எதையும் ஆய்வு ரீதியாகப் பார்ப்பதற்கும் உணர்வதற்கும் தவறினர்.

அதன் விளைவுகளே தமிழ்த் தேசியம் என்ற கருதுகோளும் அதனுடைய கட்டமைப்பும் இன்று பலவீனப் பட்டிருப்பதாகும். இதற்கு தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற ஒற்றை முடிச்சு ஒருபோதும் நிரந்தரப் பயனைத் தராது. அதற்கப்பால் செய்யப்பட வேண்டிய பணிகளிலேயே அதனுடைய பயனும் விளைவும் உண்டு.

இதைப் புரிந்து கொண்ட அணி ஒன்றாகவும் புரிந்து கொள்ள மறுதலிக்கும் அணி இன்னொன்றாகவும் உள்ளது. ஒன்று வரலாற்றை முன்னோக்கித் தள்ள முயற்சிக்கிறது. மற்றது பின்னிழுத்துக் கடந்ததிற்குள் சென்று சேரத் துடிக்கிறது. ஒன்று எதிர்காலத்துக்கு நீரூற்றுவதில் அக்கறைப்படுகிறது. மற்றது, இறந்த காலத்தை உயிர்ப்பிக்க உடுக்கடிக்கிறது. ■

# நசுக்கப்படும் உரிமைகள்

வி.எஸ்.சிவகரன்



## ஏதிலிகளின் எதிர்காலம்?

எந்தச் சமூகம் மூலதன குவியலை எதிர்த்துப் போராடவில்லையோ அந்தச் சமூகம் தனது சந்ததிகளையும் சேர்த்து அடிமைப்படுத்துகிறது என்கிறார் மார்க்ஸ்.

வல்லோன் மட்டுமே வாழலாம் எனும் எழுதப்படாத மரபு பெருவளர்ச்சி அடைந்து வருகிறது. அதனை தடுக்கக்கூடிய ஆற்றலோ, வல்லமையோ எளியோனுக்கு இல்லை.

அவன் தங்கி வாழும் நிலையையே இந்த ஆதிக்க சமூகம் கட்டமைத்துள்ளது. சமய ரீதியாகவும், சாதிய ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும், கல்வி ரீதியாகவும் வகைப்படுத்தி மேலெழும்ப விடாமல் தொடர்ந்து நசுக்குகிறது.

மேட்டுக்குடி சிந்தனையாளர்கள் தமது சுகபோக இருப்பிற்கு குந்தகம் ஏற்படாதவாறு எழுகுழாம் உறவைத் தமக்குள் ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

அதனால்தான் உலகம் முழுவதும் சமூக சம நீதி என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. நிர்வாகப் பொறிமுறை யாவும் பொருளாதார நலனியலாளர்களின் கைப்பாவையாகவே காணப்படுகின்றன.

இந்த முறைமையை (சிஸ்டத்தை) மாற்றுவது என்பது இலகுவான விடயம் அல்ல. இது ஒரு பெரிய மாபியாக்களின் நெட்வொர்க்.

சமனற்ற நீதிப் பொறிமுறை என்பது தற்போது நடைமுறை நிர்வாக இயலில் சர்வசாதாரணமாகிவிட்டது. இதை எதிர்த்து கேள்வி கேட்பவர்கள் இந்தக் களத்தில் நின்று நிலைக்க முடியாமல் காணாமல் போக வேண்டி வரும். இல்லையேல் இந்தக் கும்பல் காணாமல் ஆக்கிவிடும்.

பணமும் பதவியும் வந்துவிட்டால் பலரிடம் இயல்பாகவே போக்கிலித்தனம் குடிகொண்டு விடும். சகல அநீதிகளும் அதிகாரத்தின் மமதையால் அரங்கேறும். இதில் பாதிக்கப்படுவது சாமானியனே.

அவனைத் தொடர்ந்தும் ஏதிலியாக பயன்படுத்தவே இந்த கூட்டம் விரும்பும். வறுமையும், சார்பு நீதியும் இருந்தால்தான் தொடர்ந்தும் முதலாளித்துவத்தைத் தக்கவைக்க முடியும்.

இதற்கு எதிராகத்தான் கம்யூனிசம் வீறுகொண்டு எழுந்தது. பொருளாதார அடியாள்களே சமூக இருப்பு நிலைத் தீர்மானங்களை மேற்கொள்கின்றமையால் அறப்பிறழ்வு ஏற்படுகிறது எனப் பெரும் ஜனநாயகப் போர் தொடுத்தார்கள்.

ஆனால் தற்போதைய பொருளாதாரக் கூட்டு மாபியாக்களுக்கு முன் கம்யூனிச



சித்தாந்தம் காலாவதியாகிக் கரையத் தொடங்கிவிட்டது. ஆதிக்க வர்க்கம் எப்போதும் பாட்டாளி வர்க்கத்திற்கு நேசக்கரம் நீட்டியதில்லை. சமத்துவ நீதி என்பது அரசமைப்பு நூல்களில் அலுமாரியில் நீள் உறக்கம் கொள்கிறது.

எங்கும் நீதி இல்லை. நீதி தேடிய ஆயுதப் போராட்டங்களையும் சரி, ஜனநாயகப் போராட்டங்களையும் சரி, வலுவிழக்க வைத்து இல்லாமல் செய்து விடுகிறார்கள்.

பாவிகளுக்கு நீதி பாதி என்றார் அறிஞர் அண்ணா. நீதிப் போராட்டங்களை கால நீட்சி ஏற்படுத்தி, மன வலிமையைக் குன்றவைத்து, மடை மாற்றம் செய்து விடுகிறார்கள்.பொருளாதாரத் தரகர்களுக்கு ஆதரவாகவே அதிகார வர்க்கம் கட்டமைக்கப்பட்டுள்ளது. சுரண்டல் அடிமைத்தனத்தை ஒழிக்காத வரைக்கும் சமூகக் கட்டமைப்பில் மாற்றம் என்பது கானல் நீராகவே காணப்படும்.

இதற்கு எதிரான அணி திரட்டல்களை தவிர பாட்டாளி வர்க்கத்திற்கு வேறு என்ன இருக்கப் போகிறது?

வர்க்க நிலை கடந்தாலும் இனவாதமும் ஏகாதிபத்திய அடக்குமுறையும் இலங்கையில் தமிழர்கள் மீது குறையவில்லை. அது காலத்திற்குக் காலம் புதிய வடிவங்களில் உருமாற்றம் பெற்று, மீளெழுகிறது.

அதை தடுப்பதற்கு எந்த வழியும் இருப்பதாகத் தெரியவில்லை. சகல விடயங்களிலும் அடக்குமுறையும் நீதியின்மையும் புறக்கணிப்பும் இனப்பாகுபாடும் தொடர்கின்றன. யுத்தம் முடிவுற்று 15 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் கூட மனோநிலை ரீதியாக கொழும்பு அரசியலும் சரி நிர்வாக நிலைப்பாடுகளிலும் சரி மாற்றங்கள் ஏற்பட்டனவாக இல்லை.

அதனால்தான் வடக்கு, கிழக்கு பகுதியில் தொடர்ந்தும் புறக்கணிப்புகளும் ஏமாற்றங்களும் வலிகளும் தொடர்கதையாகவே இருக்கின்றன.

இதில் அரசியல் சார்பு நிலைப்பாடுகளும், பொருளாதார ரீதியான சார்புகளும் யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் மேலோங்கி வருகின்றன. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கொண்டு வந்த காணி உச்சவரம்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழு 1972 ஆம் ஆண்டில் 50 ஏக்கருக்கு மேலதிகமாக காணி வைத்திருந்த தனிநபர்களிடமிருந்து காணிகளை சுவீகரிப்பு செய்தது.

இதில் வடக்கில் கிளிநொச்சி மாவட்டம், மன்னார் மாவட்டம் ஆகியவற்றில் அதிக காணிகள் உள்ளீர்க்கப்பட்டன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களில் குறைந்த அளவான காணிகளே பெறப்பட்டன.

நீண்ட காலம் யுத்தம் நடைபெற்ற பிரதேசம் என்பதால் சிவில் நிர்வாக நடைமுறைகள் காணப்படவில்லை. அதனால் காணியற்ற குடும்பங்களைப் பிரதேச செயலகங்களே குடியேற்றின. ஆனால் பிரதேச செயலகங்களுக்கும் சரியான தகவல் இல்லை. யாவும் அரச காணி என்பதே அவர்களது நிலைப்பாடாக இருந்தது.

2009ம் ஆண்டு யுத்த முடிவுக்கு பின்னர் அரசின் ஒவ்வொரு திணைக்களமும் தமது அதிகாரத்தை ஏதிலிகளாக உள்ள வடக்கு, கிழக்கு மக்கள் மீது செலுத்த ஆரம்பித்தன. அதன் விளைவே ஆயுத மோதல் முடிவுக்கு வந்தாலும், ஜனநாயக யுத்தம் வியாபித்து, அசுர குணம் கொண்டு பல வகைத் தாக்குதல்கள் நடக்கின்றன.

அதனால்தான் நாளாந்த வாழ்வாதாரத்துக்காக போராடும் ஏழைகளை அதிகார வர்க்கம் நசுக்க முனைகிறது. இந்தக் காணிகளில் பலர் 30 ஆண்டுகளுக்கு மேலாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர்.

குடியேற்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீண்ட கால பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனப் பல நிலைகள் காணப்படுகின்றன.



பாவிகளுக்கு நீதி பாதி என்றார் அறிஞர் அண்ணா. நீதிப் போராட்டங்களை கால நீட்சி ஏற்படுத்தி, மன வலிமையைக் குன்றவைத்து, மடை மாற்றம் செய்து விடுகிறார்கள்.பொருளாதாரத் தரகர்களுக்கு ஆதரவாகவே அதிகார வர்க்கம் கட்டமைக்கப்பட்டுள்ளது. சுரண்டல் அடிமைத்தனத்தை ஒழிக்காத வரைக்கும் சமூகக் கட்டமைப்பில் மாற்றம் என்பது கானல் நீராகவே காணப்படும்.



குடியிருப்பவர்களுக்கே காணி ஆவணங்கள் வழங்க வேண்டும் என்பதே நியதி. ஆனால் வழமையான அரச காணிகளை போல் இலவசமாக அல்ல, காணிகளுக்கு வருடாந்தம் குத்தகை செலுத்த வேண்டும். இந்த ஆணைக்குழு சாதாரண குடியிருப்பாளர்களுக்கு காணி ஆவணம் வழங்குவதில் தயக்கம் காட்டி வருகிறது. கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடியேறியவர்களுக்கு இதுவரை ஆவணங்கள் வழங்கப்படவில்லை. வெளி மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு காணி வழங்க முன்வந்தமையால் கடந்த காலத்தில் பெரும் வாதப் பிரதிவாதங்கள், போராட்டங்கள் எழுந்தன. அதனால் இதுவரை அவ்விவகாரம் முடிவுறுத்தப்படவில்லை.

உள்ளூரில் காணியற்ற குடும்பங்கள் பல ஆயிரம் உள்ள போதும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க மறுக்கிறார்கள். அவ்வாறே மன்னார் மாவட்டத்திலும் மன்னார் நகரப் பிரதேச செயலாளர் பிரிவிலும் இந்த நிலை பல தசாப்தங்கள் கடந்தும் நீள்கிறது. மாந்தை மேற்கு இலுப்பைக்கடவை பகுதியிலும் மூன்று தசாப்தத்திற்கு மேலாக அப்பகுதி மக்கள் அக்காணிகளில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு ஆவணம் வழங்குவதை தவிர்த்து வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பெரு வணிகர்களுக்கு காணி வழங்கியுள்ளனர்.

அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடந்த வாரம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஜனநாயகப் போராட்டத்தை நடாத்தியிருந்தனர். இலஞ்சம் பெற்றுக் கொண்டே எமது காணியை வெளியாள்களுக்கு வழங்கியுள்ளனர் என அதிகாரிகள் மீது பகிரங்கமாகவே அந்த மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அவ்வாறான நிலைமைதான் காணப்படுகிறது எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணியைப் பெறுவதற்கு அரசியல் செல்வாக்கும் பொருளாதார வலிமையும் முதன்மையாகத் தேவைப்படுகின்றன. பணமும் அதிகாரமுமே யாவற்றையும் தீர்மானிக்கின்றது.

சாமானியனின் ஜனநாயகக் குரல் என்பது காற்றோடு காற்றாகக் கலந்து விடுகிறது. அது எந்த வல்லாதிக்கர்களின் காதுகளுக்குள்ளும் போவதில்லை என்பதே பரிதாபகரமான ஜனநாயகத் தோல்வி. அரசிறைமையின் ஜனநாயக படுகொலை. இதுவே தொடர்கிறது.

வனத்திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், முப்படையினர் ஆகிய தரப்புகளின் நில அபகரிப்பு, பௌத்த கோயில்களுக்கான நிலஆக்கிரமிப்பு, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தான்தோன்றித்தனமான அடாவடித்தனம், பொருளாதார நலன் சார்ந்தவர்களது அபகரிப்பு என தமிழர்கள் மீது கூட்டு வன்மம் அரசின் ஆசீர்வாதத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது.


இதில் தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் பிரச்சினைகளுக்கு ஆதரவாக முன்வருவதில்லை. அதற்காக போராடவும் தயாராக இல்லை. அரச விசுவாசத்துடன் நழுவி விடுகிறார்கள்.

வாக்களித்த மக்கள் ஒவ்வொரு தடவையும் ஏமாந்தே போகிறார்கள். இப்போது தமிழ் அரசியல்வாதிகளும் வணிகர்களாகிவிட்டனர். ஊழலும், லஞ்சமும் இந்தியாவை மிஞ்சும் அளவுக்கு விஞ்சி விட்டன.

இந்த உரிமை இழந்த மக்கள் தங்களின் உரிமைக் குரலை வல்லாதிக்க ஆட்சிப் பீடம் செவிமடுத்து நீதியை வழங்குமா என ஏங்கி நிற்கின்றனர். இவர்களது வாழ்விடங்களையும் வாழ்வாதாரத்தையும் காப்பதற்கு முன்வர வேண்டியது இந்த சமூகத்தின் கூட்டுப் பொறுப்பும் தார்மீக கடமையும் ஆகும். ஏழை வீட்டிலும் ஒளி பிரகாசிக்க வழி விடுங்கள்.



இதில் தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் பிரச்சினைகளுக்கு ஆதரவாக முன்வருவதில்லை. அதற்காக போராடவும் தயாராக இல்லை. அரச விசுவாசத்துடன் நழுவி விடுகிறார்கள். வாக்களித்த மக்கள் ஒவ்வொரு தடவையும் ஏமாந்தே போகிறார்கள். இப்போது தமிழ் அரசியல்வாதிகளும் வணிகர்களாகிவிட்டனர். ஊழலும், லஞ்சமும் இந்தியாவை மிஞ்சும் அளவுக்கு விஞ்சி விட்டன.



# காற்றிலே கரைந்தவர்

அவனா.? அவளா.?
அது சரியாகத் தெரியவில்லை.
சிலவேளை 'அவர்கள்' ஆகவும்
இருக்கலாம்.
பிற்பகலில் வரும்
விசேட பதிப்பில்
வெளிவரக்கூடும்.

சமயங்களில்.
தரவுகள் மட்டுமே வெளிவரும்.
எதிரிகளில் அத்தனைபேர்
தொலைந்தார்கள் என்று
விண்ணதிர ஆர்ப்பரித்திருப்போம்!

கொள்ளை ஆயுதங்கள்
கொத்தாக வந்து சேர்ந்தன
என்ற
வெற்றிச் செய்தி
காற்றிலும் கடுகி பரவியிருக்கும்!!

காற்றோடு கரைந்தவர் பெயர்கூட
சமயங்களில் தெரியவராது.
அதை நினைக்க
நெஞ்சே வெடித்துவிடும் போல
ஒரு வலி கிளர்ந்தெழும்!
வெற்றிச் செய்தி அதை மேவ
அந்த வாரம் பூராவும்
அதுதான் பேசுபொருளாயிருக்கும்!

மனதிற்கு தெரியும்.
ஏதோவொரு ஊரில்
ஒரு தாய்க்கோ சகோதரிக்கோ
தகவல் போயிருக்கும்.
'ஓ..!' வென்று கதறியழ முடியாமல்
வெங்காயம் வெட்டியோ
ஈரவிறகு அடுப்பினுள்
குனிந்திருந்தோ
அழுது தீர்த்திருப்பார்கள்.

தந்தையர்க்கும் சகோதரனுக்கும்கூட
தகவல் போயிருக்கும்.
கண்ணில் தூசு விழுந்து
கலங்குவதாக
கண்ணைக் கழுவி
அவன் அழுது தீர்த்திருப்பான்.
அப்பாவோ!
வெளியேயிருக்கும்
கயிற்றுக் கட்டிலில்
மிடுக்கிழந்து உட்கார்ந்திருப்பார்.
இடையிடை 'செருமி'
தன் துயரை ஆற்ற முனைவார்.
அப்பாவுக்கு தொண்டை சரியில்லை
என்று 'பாவலா' பண்ணும் அம்மா
மூக்குப் பேணியில்
சுடுநீர் கொடுத்துவிட்டு
சேலைத் தலைப்பால்
தன் கண்ணை ஒற்றிக்கொள்வாள்.

அன்றைய சாப்பாடு
அநாதையாகக் கிடக்கும்.
அத்தனை வலியும் வேதனையும்
ஒரு குடும்பத்துக்கே
உரியதென்று ஆகிவிடும் - பதிலுக்கு
ஈகத்தின் விளைவினால்
பூரித்துப் போயிருக்கும் தாயகம்.

இன்னொருவனும்கூட அந்த
வலியைச் சுமப்பான்!!
நூற்றுக்கணக்கில்
சீராளர்களைக் கொடுத்த
சிறுத்தொண்டன் அவன்!!
அவனின் வலி..!!
மரியானாவைவிட ஆழமானது.
வேதனைகளை நெஞ்சிருத்தி
தன்னைக் கொடுத்து
தேசத்தின் செயல்களை
முன்னெடுக்க
அளப்பரிய நெஞ்சுரம் வேண்டும்.
அது அந்தப் புனிதனுக்கிருந்தது!!

நூற்றுக்கணக்கில்
தாயகக் காற்றிலே
கரைந்து போனவர்
இன்றும் என்றும்..
தாயக வான்பரப்பில்
விரவிக் கிடக்கிறார்.

எமக்காக மட்டுமே
தமையழித்து
தற்கொடை செய்த
அத்தனை புனிதர்களின்
பாதங்களையும்
அவர்களை
ஈன்று எமக்களித்த
பெருந்தகைகள்
பாதங்களையும்
வணங்கித் துதிக்கிறோம்!
உமதீகம் வாழும்! வெல்லும்!!

**பொழில்**



நவின்

# வெலிக்கடை படுகொலையும் கறுப்பு ஜூலையின் இனவாதமும்



கறுப்பு ஜூலை ‘இனக்கலவரம்’ என்ற போர்வைக்குள் நடைபெற்றதே தமிழர் மீதான இனப் படுகொலை’ நிகழ்வாகும். ஆனால் கறுப்பு யூலை படுகொலைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட முறையும் அளவும், அதற்கு அரச தரப்பில் இருந்த ஆதரவும் அதனை வெறும் இன வன்முறையாகக் கருத முடியாது.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை செயற்பாடாகவே ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நாற்பத்தொரு ஆண்டுகளைக் கடக்கின்றன கறுப்பு ஜூலையும், வெலிக்கடை சிறைப் படுகொலையும். ஆனால் இவற்றின் சூத்திரதாரிகள் இது வரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த பாரிய இனப் படுகொலையான ‘கறுப்பு ஜூலை’ யின் கோர நிகழ்வுகள் தமிழரின் வரலாறுகளிலும், மனங்களிலும் ஒருபோதும் நீங்காத வடுக்களை பதித்துள்ளது.


சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எந்த ஒரு அரசாங்கங்களினாலும் மேற்கொள்ளப் படவில்லை என்பதே உண்மையாகும். நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலைப் படுகொலை ஓர் இனத்திற்கு எதிரான அழிப்பு நடவடிக்கையாகவே தமிழ் மக்களால் கருதப் படுகிறது.

தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த இனப் படுகொலை நீதி மறுக்கப்பட்டு, சர்வதேசத்தால் மறக்கப்பட்டாலும் அதிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை போராடும் இனங்கள் தெளிவாகக் கற்று அறிய வேண்டும்.

**1983, ஜூலை 23:**

1983, ஜூலை 24, 25 காலப் பகுதியில் யாழ்ப் பாணம் திருநெல்வேலியில் சிங்கள படைத் துறையால் 100 பேர் வரையான தமிழர்கள்





படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுடன் ஆரம்பமாகி, வெலிக்கடை சிறைப் படுகொலை, பின்னர் தென்னிலங்கை இனப் படுகொலையாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன.

1983 கருப்பு யூலையில் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்தமை மானுட வரலாற்றில் துன்பவியல் நிகழ்வாகும்.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட படுகொலைச்செயற்பாடாகவே நம்பப்படுகிறது. கறுப்பு யூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப் படுகின்றது.

## இனப்படுகொலை திட்டமிடப்பட்டதா?

மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டம் தோற்றுப் போக, தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையைகறுப்புஜூலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள் என்பதும் உண்மையே.

ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபடி கொழும்பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கட்டவிழ்த்து விட்டது. உண்மையில் இக் கோர கறுப்பு யூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட தூண்டியது என்றும் கூறலாம்.

ஈழத் தமிழினம் டீ.எஸ். சேனநாயக்கா போன்ற சிங்களப் பேரினவாதத் தலைவர்களால் காலத்துக்குக் காலம் பொருளாதார ரீதியாகவும், நில உரிமை ரீதியாகவும், மொழி ரீதியாகவும் நயவஞ்சகமாகவும் நேரடியாகவும் நசுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவற்றுக்கெதிராக அவ்வப்போது சில அரசியல் தலைவர்களது குரல் ஒலிப்பதும், சில அற்பசொற்ப சலுகைகளுக்காக அடங்கிப்போவதும் நாம் கண்ட வரலாறாகும்.

## தரப்படுத்தலும் மாணவர் எழுச்சியும்:

தமிழினத்தை தன்னிலை பற்றிச் சிந்தித்து, தனக்கென ஒரு நாடு தேவை என்ற தீர்வைக் கொடுத்தது என்னவோ, சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட ‘தரப்படுத்தல்’ என்ற தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல் தான் என்பதை எவராலுமே மறுக்கமுடியாது.

தரப்படுத்தல் சிவகுமாரன் போன்ற மாணவர்களை அகிம்சை வழியிலிருந்து விலகி ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியது. அரச பயங்கரவாதச் சுரண்டல்களுக்குப் பரிகாரம் ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் பல இளைஞருள்ளும் அக்காலத்தில் எழுந்தது.

அரச படை இயந்திரங்களை எதிர்த்துப் போரிட முடியுமா என்ற கேள்வியே ஈழத் தமிழினத்தால், குறிப்பாக தமிழின அரசியல் மேடைப்பேச்சுத் தலைவர்களால் நினைத்துப் பாராததொன்றாக இருந்தது. ஈழத்தமிழனின் கல்வியில் திணிக்கப்பட்ட தரப்படுத்தலானது இளைஞர்களை ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியதும் வரலாற்று உண்மையாகும்.

திருநெல்வேலித் தாக்குதலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரச பயங்கரவாத ஆதரவுடன் இடம்பெற்ற இனக்கலவரமும் ஈழப் போராட்ட அமைப்புகளின் பாரிய வளர்ச்சிக்கு வழிவகுத்தது.


ANTI-TAMIL POGROM — JULY 1983
State pogrom against Tamils
Mass murder in Sri Lanka
Beirut echoes for the Tamils in torment
Anti-Tamil riots claim more dead
33 killed in fresh Colombo violence
Army on rampage in Lanka, over 300 gunned down
SECOND SLAUGHTER OF TAMILS IN COLOMBO JAIL
Britons flee as army goes berserk
Britons tell of holiday terror in Sri Lanka
BRITISH TAMILS MOURN
Who will help the Tamils?
Colombo acts to appease mobs
Colombo rioting wrecks 20,000 Tamil businesses
TRAIL OF DEATH SPREADS
Tragic cargo aboard 'Train of Tears'
Tamil homes in Colombo set on fire
37 die in Colombo prison attack
Army 'took part in killings'
17 more inmates killed in Walikada jail
TORTURE OF TAMILS
Sri Lanka: Island of terror
Troops killed many in Jaffna much before riots
Racism in Sri Lanka
BLOOD IN THE STREETS
Sri Lanka forces Red Cross men to leave
37 TAMIL PRISONERS MASSACRED IN JAIL
Tormenting the Tamils








ஜூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை நிகழ்வுகளின் போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வே வெலிக்கடை சிறைப் படுகொலையாகும்.

இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் எவரும் இன்று வரையில் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப் படவில்லை.

வெலிக்கடை சிறைப் படுகொலை இரண்டாம் தடவையாக ஜூலை 28ம் திகதி மீண்டும் இடம் பெற்றது. இதில் 18 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிறைச்சாலை அதிகாரிகளே அறைக்கதவுகளின் திறப்புகளை சிங்களக் கைதிகளுக்கு கொடுத்ததாக தெரிவித்தனர். ஆனால் சிறை அதிகாரிகளின் கூற்றுப்படி,


(Pic credit: AP)

சிங்களக் கைதிகள் தம்மிடம் இருந்து திறப்புகளைக் களவெடுத்ததாகத் தெரிவித்தனர்.


இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிங்கள இனவெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன்பு கொல்லப்பட்ட குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது.




காட்டுமிராண்டித் தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர்.

சிங்கள இன வெறியர்கள், தமிழிளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர். இப்படுகொலைகள் நடைபெற்ற தினத்திற்கு முதல் நாள் புத்தர்களின் புனிதநாளான போயா தினமாகும். போயா தினத்தில் உபவாசம் இருந்து 'சில்' அனுஷ்டித்தவர்கள் மறுநாள் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





தங்கதுரை குட்டிமணி ஜெகன்

ஈழத் தமிழ் மண்ணில் எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!

தங்கதுரை - குட்டிமணி - ஜெகன் உட்பட

37 பேர் படுகொலை!

சிறைக்குள் சிங்களவர் வெறியாட்டம்!



அதிரவைத்த ஒரு கவிதை

# விலைமாது விடுத்த கோரிக்கை..!

கவிஞர் தமிழ்தாசன்

ராமன் வேசமிட்டிருக்கும்
பல ராட்சசன்களுக்கு
என்னைத் தெரியும்.

பெண் விடுதலைக்காக போராடும்
பெரிய மனிதர்கள் கூட
தம் விருந்தினர் பங்களா
விலாசத்தை தந்ததுண்டு.

என்னிடம்
கடன் சொல்லிப் போன
கந்து வட்டிக்காரகளும் உண்டு.

சாதி சாதி எனச் சாகும்
எவரும் என்னிடம்
சாதி பார்ப்பதில்லை.

திருந்தி வாழ நான் நினைத்தபோதும்
என்னை தீண்டியவர்கள் யாரும்
திருந்தவிட்டதில்லை.

பத்திரிக்கையாளர்களே!
விபச்சாரிகள் கைது என்றுதானே
பத்திரிகை விற்பனையாகிறது.
விலங்கிடப்பட்ட ஆண்களின்
விபரம் வெளியிடப்படாதது ஏன்...?

பெண்களின் புனிதத்தை விட
ஆண்களின் புனிதம்
அவ்வளவு பெரிதா?

காய்ந்த வயிற்றுக்கு
காட்டில் இரை தேடும்
குருவியைப் போல்

என்னை யாரும் பரிகசிக்கவில்லை.

கட்டில் மேல் கிடக்கும்
இன்னொரு கருவியைப் போலத் தான்
என்னைக் கையாளுகிறார்கள்.

நான் இருட்டில் பிணமாக
மாறினால்தான்
பகலில் அது பணமாக மாறும்.
பின்தான்
என் குடும்பத்தின் பசியாறும்.

நிர்வாணமே என்
நிரந்தர உடையானதால்தான்
சேலை எதற்கென்று
நினைத்ததுண்டு.
சரி!
காயங்களை மறைப்பதற்காவது
கட்டுவோமே என்று
கட்டிக்கொண்டு இருக்கிறேன்.

என் மேனியில் இருக்கும்
தழும்புகளைப் பார்த்தால்
வரிக் குதிரைகள் கூட
வருத்தம் தெரிவிக்கும்.

எதையும் வாங்க வசதியில்லாத
எனக்கு
விற்பதற்காவது இந்த
உடம்பு இருக்கிறதே!
நாணயமற்றவர் நகங்கள்
கீறிக் கீறி என்
நரம்புகள் வெடிக்கிறதே!

அதிரவைத்த ஒரு கவிதை



# விலைமாது விடுத்த கோரிக்கை..!

வாய்திறக்க முடியாமல்
நான் துடித்த இரவுகள் உண்டு!

எலும்புகள் உடையும் வரை
என்னை கொடுமைப் படுத்திய
கொள்கையாளர்களும் உண்டு!

ஆண்கள்
வெளியில் சிந்தும் வேர்வையை
என்னிடம் ரத்தமாய்
எடுத்து கொள்கிறார்கள்.

தூறல் சிந்தாத வான் மேகமில்லை.
கீறல் படாத வேசி தேகமில்லை.

என்னை வேசி என்று
ஏசும் எவரைப் பற்றியும்
கவலைப் பட்டதே இல்லை..

ஏனெனில்
விதவை - விபச்சாரி
முதிர்கன்னி - மலடி
ஓடுகாலி - ஒழுக்கங்கெட்டவள்
இதில் ஏதேனும்
ஒரு பட்டம்
அநேக பெண்களுக்கு
அமைந்திருக்கும்.

இது இல்லாமல் பெண்கள் இல்லை.
எப்போதும்
இழிவு சொல் ஆண்களுக்கு இல்லை.

முதுமை என்னை
முத்தமிடுவதற்குள்
என் மகளை மருத்துவராய்
ஆக்கிவிட வேண்டும்.
என் மீது படிந்த தூசிகளை
அவளைக் கொண்டு
நீக்கி விட வேண்டும்.

இருப்பினும்,
இந்த சமூகம்
இவள்
மணிமேகலை என்பதை மறந்துவிட்டு
மாதவியின் மகள் என்பதை மட்டுமே
ஞாபகம் வைத்திருக்கும்.

இறுதியாக
இரு கோரிக்கைகள்.

என்னை
மென்று தின்ற ஆண்களே!
மனைவியிடமாவது கொஞ்சம்
மென்மையாக இருங்கள்.
எங்களுக்கு இருப்பது
உடம்பு தான்
இரும்பல்ல.

என் வீதி வரை
விரட்டிவரும் ஆண்களே!
தயவு செய்து விட்டுவிடுங்கள்.
நான் விபச்சாரி என்பது
என் வீட்டுக்கு தெரியாது.

**(மறுபிரசுரிப்பு)**

# வட்டுவாகல் பாலம்



# பயத்தோடு பயணிக்கும் பயணிகள்



சி.கதீசனா
3ம் வருடம்
ஊடகக் கற்கைகள்
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்

வட்டுவாகல் பாலம் முன்னோர்களின் கருத்துக்களின் படி 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்டது. முல்லைத்தீவு நகரத்தின் நுழைவாயிலாக வட்டுவாகல் பாலம் அனைவரையும் வரவேற்கின்றது. சுமார் 40 மீட்டர் தூரம் கொண்ட வட்டுவாகல் பாலம் வரலாற்றுத் தொன்மை யான முல்லைத்தீவு மாவட்டத்தின் ஓர் சின்னமாகும். சுமார் 70 வருடங்கள் தொன்மையானதாகும்.

இலங்கைப் போரின் முடிவில் தமிழீழ விடுதலை புலிகளிடம் இருந்த மக்கள் வட்டுவாகல் பாலத்திலே இலங்கை படையிடம் ஒப்படைக்கப் பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த வட்டுவாகல் பாலத்தின் ஒரு பக்கத்திலும் இலங்கைப் படையினர் இன்னொரு பக்கமும் நின்றிருக்க தமிழ் மக்கள் குழந்தைகளோடு தண்ணீரில் நீந்தி பாலத்தைக் கடந்து வந்த வரலாற்றை இவ் வட்டுவாகல் பாலம் கூறுகின்றது.

முல்லைதீவு நகரத்திற்கான பிரதான பாதைகளில் ஒன்றாக காணப்படுகின்ற ஏ 35 தர வீதியின் வட்டுவாகல் பாலம் ஆனது எந்தவித புனரமைப்புகளும் இன்றி சில வருடங்களாக மோசமான நிலையில் சேதம் அடைந்து காணப்படுகின்றது.

இவ் வட்டுவாகல் பாலத்தின் வழியே முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய பயணமும், யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிய பயணமும், முல்லைத்தீவிலிருந்து கிளிநொச்சி நோக்கிய பயணமும் கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவுக்கான பயண செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

இவ் வட்டுவாகல் பாலத்தின் வழியே பெரிய வாகனம் முதல் சிறிய வாகனம் வரை பயணத்தை மேற்கொள்கிறது. அத்தோடு குறித்த பாலத்தின் போக்குவரத்தில் ஒரே நேரத்தில் பெரிய வாகனம் ஒன்றே பயணம் செய்து கொள்ள முடியும் என்பதோடு, வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திச் செல்ல முடியாது என்ற நிலையும் காணப்படுகிறது.

அத்தோடு இரண்டு வாகனங்கள் ஒரே நேரத்தில் வருகின்ற போது வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு குறித்த வாகனம் வீதியை கடந்ததன் பின்னரே பயணம் மேற்கொள்ள முடியும். அதுமட்டுமன்றி ஒரு வாகனத்தை மற்றைய வாகனம் முந்திச் செல்ல முடியாத ஒடுக்கமான நிலை காணப்படுகிறது.



இப்பாலத்தின் வீதியில் இரு பக்கங்களிலும் சமிஞ்ஞை விளக்குகள் அமைக்கப்படாமையினால் வாகன சாரதிகள் பெரும் இடர்களை எதிர் கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பாலத்தின் அடியில் நீரேரி காணப்படுகின்றதனால் பாலத்தின் கரைகளில் மீனவர்கள் மீன் பிடித்தலையும்,இறால் பிடித்தல், வலை வீசுதல் போன்ற செயற்பாடுகளை மாலை வேளையிலும் அதிகாலை வேளையிலும் மேற்கொள்வதை எம்மால் அவதானிக்க முடியும். இக்காட்சியானது இப்பாலத்தின் அருகில் இடம்பெறுகின்ற அருமையான காட்சியாகும்.

இப் பாலமானது வெவ்வேறு இடங்களுக்கு செல்வதற்கு உதவியாக அமைந்துள்ள நிலையில் மழைக்காலத்தில் பல தடவைகள் சேதமடைந்திருக்கிறது. அதாவது பாலத்தின் பல்வேறு இடங்களில் வெடிப்புகள் காணப்பட்டமை, வீதி பாதுகாப்பு அற்றதாக சில இடங்களில் தாழிறங்கி காணப்பட்டமை, இவற்றோடு பாலத்தில் அடிக்கடி உடைவுகள் ஏற்படுகின்றமை போன்றன.

இது தொடர்பில் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும் நிரந்தர புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப் படாமல் தற்காலிக புனரமைப்பு மாத்திரமே செய்யப்பட்டு வருகின்றன. இப்பாலத்தின் வழியே பிரயாணிகள் பயணம் செய்ய வேண்டிய கட்டாய நிலை காணப்படுவதால் குறித்த பாலத்தை சீரமைத்து தரும்படி அப்பாலத்தின் ஊடாக பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் தெரிவித்துள்ளனர். இப்பாலத்தினை திருத்துவதற்கான கோரிக்கைகள் பல தடவைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அதனை திருத்துவதற்கான நிதி கிடைக்கவில்லை என தற்காலிகமாக புனரமைப்பு பணிகள் இடம் பெற்றுள்ளன.

கடந்த ஆண்டின் மழைக்காலப் பகுதியில் நீர்மட்டம் உயர்ந்து பாலத்தை மேவிச் சென்றதோடு அதனால் பிரயாணத்தை மேற்கொள்கின்ற கனரக வாகனங்களும், சிறிய வாகனங்களும் பல பிரச்சனைகளை எதிர்நோக்கியிருந்தன. கடந்த ஆண்டில் பாலத்தில் நீர்மட்டம் உயர்ந்ததில் பிரச்சனையை எதிர்நோக்கியுள்ள ஒருவரில் நானும் ஒருவர் எனும் ரீதியில் இதனை எழுதியுள்ளேன்.

இன்றும் கூட வழமை போல் வாகனங்கள் அப்பாலத்தின் ஊடாகவே பயணிக்கின்றன. ஒவ்வொரு மழைக்காலங்களிலும் நீர்மட்டம் உயர்வதால் அப்பாலத்தினூடாக பயணத்தினை மேற்கொள்ளும் பயணிகள் அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இப்பாலத்தில் மழைக்காலங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் பல தடவைகள் அப்பாலத்தின் ஊடாக போக்குவரத்து நடவடிக்கைகள் தடைபட்டுள்ளன.

ஒவ்வொரு மழைக் காலங்களிலும் பிரயாணிகள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு பயணம் செய்ய வேண்டிய இக்கட்டான நிலை காணப்படுகிறது எனத் தெரிவித்துள்ளனர்.

2017 ஆம் ஆண்டு இவ் வட்டுவாகல் பாலப் பகுதியில் கனரக வாகனம் ஒன்றை ஏற்றிய நிலையில் பாரவூர்தி ஒன்றின் டயர் காற்று போனதால் அந்த வீதி ஊடாக போக்குவரத்து பல மணிநேரம் தடைப்பட்டிருந்தது. குறித்த பாலம் ஒடுங்கியதாகவும் ஏனைய வாகனம் விலத்திச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாலும் பாலத்தின் நடுப்பகுதியில் குறித்த வாகனம் பழுதடைந்தமையினால் இந்த பாலத்தின் வீதியூடாக சேவையில் ஈடுபடும் பஸ்கள் முதல் ஏனைய கனரக வாகனங்களும் மாற்று வழியை பயன்படுத்த முடியாத நிலையில் பாலத்தின் இருமருங்கிலும் நீண்ட வரிசையில் மாலை 5 மணியிலிருந்து பல மணி நேரம் காத்து நின்ற செய்தி பதிவாகியுள்ளது.

இவ்வாறாக இப் பாலத்தின் பிரச்சினையால் போக்குவரத்து தடைப்பட்டு இருந்தது. வட்டுவாகல் பாலத்தின் வீதி போக்குவரத்து மேற்கொள்ள கட்டாயமான வீதியாகும். அப் பாலத்தின் சேதங்கள் பல இடங்களுக்கான போக்குவரத்து மேற்கொள்வதற்கு தடையாக உள்ளதோடு அப்பாலத்தின் சேதங்கள் குறித்து உரிய அமைப்பு கவனத்தில் எடுத்து அதனை நிரந்தர புனரமைப்பு செய்து கொடுக்க வேண்டும். அப்பாலத்தின் வழியே பயத்தோடு பயணம் செய்யும் பயணி என்னும் வகையில் இக்கட்டுரை அமைய பெற்றுள்ளது. இனிவரும் மழை காலங்களிலாவது பயணிகளுடைய போக்குவரத்து தடைப்படாது குறித்த பாலமானது புனரமைப்பு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.





# வாழ்க்கை கற்றுக்கொடுக்கும் பாடம்

தந்தை இறந்த பின் தன் தாயை கவனிக்க முடியாமல் முதியவர் இல்லத்தில் சேர்த்து விட்டார் மகன். மனைவியும் வேலைக்குப் போவதால் தன் தாயை வீட்டில் கவனிக்க யாருமில்லை என்ற காரணத்திற்காக முதியவர் இல்லத்தில் சேர்த்து விட்டார் அவர்.

மாதத்திற்கு ஒரு முறை தன் தாயை அங்கு சென்று சந்தித்து வந்தார். பல வருடங்கள் கடந்தன. ஒருநாள் அவருடைய தாய் மிகவும் முடியாமல் இருப்பதாக தகவல் வந்தது. மகனும் உடனடியாக தன் தாயை சந்திக்கச் சென்றார்.

தாய் சாகும் தறுவாயில் இருந்தார்.

அம்மா! உங்களுக்கு ஏதாவது வேண்டுமா? என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் செய்கிறேன் என மகன் கேட்டார்.

அம்மா தயங்கித் தயங்கி கேட்டார்.



இந்த முதியவர் இல்லத்தில் மின் விசிறிகள் எதுவும் இல்லை. காற்று இல்லாமலும், கொசுக் கடித்தும் நிறைய நாட்கள் தூங்காமல் இருந்திருக்கிறேன். இங்கு தரும் கெட்டுப் போன சாப்பாட்டை சாப்பிட முடியாமல் பல நாட்கள் சாப்பிடாமல் தூங்கியிருக்கிறேன்.

எனவே, இந்த இல்லத்திற்கு சில மின் விசிறிகளும், சாப்பாட்டை கெடாமல் பாதுகாத்து வைத்திருக்க ஒரு குளிர்சாதனப் பெட்டியும் வாங்கிக் கொடுப்பாயா? என மெல்லிய குரலில் தாய் கேட்டார்.

மகன் ஆச்சரியப்பட்டான்.

அம்மா..! பல வருடங்களாக நான் உங்களைப் பார்க்க வருகிறேன். ஒருநாள் கூட இப்படி ஒரு குறையை நீங்கள் சொன்னதேயில்லை.. இப்போது இந்த நிலைமையில் மட்டும் ஏன் இதை கேட்கிறீர்கள்? எனக் கேட்டார் மகன்.

அவன் முகத்தை மெல்ல ஏறெடுத்துப் பார்த்தார் தாய்.

மகனே இங்கு மின் விசிறி இல்லாமல் கொசுக்கடியை தாங்கிக் கொண்டு உறங்குவதற்கு நான் பழகிக் கொண்டேன். இங்குள்ள பசியையும், துன்பங்களையும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியும்.

ஆனால், உனது குழந்தைகள் உன்னை இந்த இல்லத்திற்கு அனுப்பும் போது. உன்னால் அவற்றை தாங்கிக்கொள்ள முடியாது. இதை நினைத்து நான் வருந்துகிறேன். அதனால் தான் இப்போது கேட்கிறேன் என்றார்.

மகன் விக்கித்துப் போனான்.

வாழ்க்கையில் காயப்படுத்தும் விஷயங்களே கற்றுக் கொடுக்கவும் செய்கின்றன.

# காற்றாலையும் கனிம அகழ்வும்



வி.எஸ்.சி.

# மன்னார்த்தீவு மயான பூமி ஆகப் போகின்றதா?

இலங்கையின் மேற்கு மூலையில், இந்தியாவுக்கு மிகவும் அண்மித்த - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - இயல்பான இயற்கை சூழமைவுகளைத் தன்னகத்தே கொண்ட சுதேசிய குடிமக்கள் செறிந்து வாழும் மாவட்டம் மன்னார் ஆகும்.

இது நீர் வளமும், நிலவளமும், கடல் வளமும், கனிம வளமும் கொண்ட அழகிய வரலாற்று அம்சங்களையும், வரலாற்றுப் படிமங்களையும் தன்னகத்தே கொண்டதாகும்.




இது, 2002.25 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பைக் கொண்டது. ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியது. 48,129 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 62,129 பேர் இங்கு சீவிக்கின்றனர்.

இதில் 67,376 இஸ்லாமியர்களும், 65,929 கத்தோலிக்கர்களும், 27,796 இந்துக்களும், 855 பௌத்தர்களும் அடங்குகின்றனர்.

இலங்கையில் எங்கும் இல்லாத வகையில் அதி தீவிர மத உணர்வு உடையவர்களையும், வாழ்வியலின் சகல அம்சங்களையும் மத கோட்பாட்டுடன் இணைக்கும் அடிப்படைவாதிகளையும் உள்ளடக்கி, பகுத்தறிவை சற்றும் உணர்ந்து பார்க்காத சமூக கட்டமைப்பை செறிவாகக் கொண்ட - மத முரண்பாட்டுக்குப் பெயர் போன - மாவட்டமும் இதுவாகும். அரசியல் தலைமைத்துவம் என்பது இங்கே மிக நீண்ட காலமாக வெற்றிடமாகவே உள்ளது. இராயப்பு சோசப் ஆண்டகையின் மறைவுக்கு பின்னர் உரிமைக்குரலும் நலிவுற்றே காணப்படுகின்றது.

கனிம படிமங்கள், எரிபொருள் ஆய்வுகள் என பல வளமுள்ள இடத்தை பொருள்முதல்வாத உறவில் உள்ள பல சர்வதேச கோப்பரேட் நிறுவனங்கள் வளச் சுரண்டலுக்கான



தமது கழுகு பார்வைக்குள் மன்னாரைப் புகுத்தி பல வருடங்கள் ஆகி விட்டது. தற்போது அதற்குரிய காலம் கனிந்து விட்டது.

மன்னார்தீவு என்பது புவியியல் கட்டமைப்பு ரீதியாக மிகவும் பலவீனமான தீவு ஆகும். சாதாரண தரைத் தோற்ற நில அமைப்பை விட மன்னார்த்தீவு மிகவும் தாழ்வானது. ஒரு பேசின் போன்றது.

ஐம்பது ஆண்டுகளில் அழியும் தீவுகளில் மன்னாரும் ஒன்று என யுனஸ்கோ நிறுவனத்தால் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டதன் காரணத்தால்தான் மன்னார்த் தீவில் மூன்று மாடிக்கு மேல் கட்டடங்கள் அமைப்பதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படுவதில்லை.

மிகவும் பலவீனமான தீவு என்பதால் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் வலிமை குறைந்த தீவாகும்.

மிகக் குறுகிய நிலப்பரப்பை கொண்ட தீவு என்பதால் இயற்கைப் பேரிடர்களான நில அதிர்வு, சுனாமி, புயல், பெருவெள்ளம் போன்றவற்றை எதிர் கொள்ளக் கூடிய வலிமையற்ற தீவாகவே காணப்படுகிறது என பல துறை சார்ந்த வல்லுனர்களால் காலத்துக்கு காலம் எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. இதற்கு மாறாக அரசு தான்தோன்றித் தனமாக செயல்பட்டு வருகிறது.

நிலை பெறுதகு வலு அதிகார சபை 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி 1852/2 இலக்கமுடைய வர்த்தமானி மூலம் 202 ஹெக்டேயர் நிலப்பரப்பு கையகப்படுத்த அறிவித்தல் வெளியாகி இருந்தது.

இதற்கு முதலில் இலங்கை மின்சார சபையால் தம்பவனி என்னும் பெயரில் காற்றாலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு காற்றாலைக்கு ஏழு ஏக்கர் நிலம், கையகப் படுத்தப்படுகிறது. 30 காற்றாலைகள் தாழ்வுபாட்டில் இருந்து நடுக்குடா வரை அமைக்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு காற்றாலையிலிருந்து 3.4,5 மெகாவாட் மின்சாரம் நாளொன்றுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது. 30 காற்றாலையிலும் இருந்து 102.5 மெகாவாட் மின் உற்பத்தியாகிறது.

இதன் இரண்டாவது பகுதி 21 காற்றாலை 50 மெகாவாட் மின்சாரம் பெறுவதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஆனால் மக்களின் எதிர்ப்பாலும், கரையோர மீன்பிடி பாதிக்கப்படுவதாக மீனவர்களின் தொடர்ச்சியான குற்றச்சாட்டும் போராட்டத்தாலும் 11 காற்றாலை அமைப்பதிலிருந்து இலங்கை மின்சார சபை பின்வாங்கியுள்ளது. எஞ்சிய 10 காற்றாலை மாத்திரமே அமைக்க உள்ளது.

இதில் சௌத்பார் மற்றும் தோட்டவெளி பகுதியில் LTL தனியார் கம்பனி நான்கு காற்றாலைகள் அமைக்க அனுமதி கோரி உள்ளது.

இதேபோல் மன்னார் சிலாவத் துறையில் இருந்து முள்ளிக்குளம் வரை 34 காற்றாலையில் இருந்து 100 மெகாவாட் மின்சாரம் பெறுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறே நறுவிலிக்குளம் பகுதியில் வின்போஸ் தனியார் நிறுவனம் ஆறு காற்றாலைகள் அமைத்து 2.5 மெகாவாட் மின்சாரம் வீதம் 15 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி நடைபெறுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை பகுதியில் வின்போஸ் தனியார் நிறுவனம் 16 காற்றாலைகளை அமைத்து 2.5 மெகாவாட் வீதம் 40 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது.

தனங்கிளப்பில் LTL தனியார் நிறுவனம் எட்டுக் காற்றாலைகளை அமைத்து 2.5 மெகாவாட் மின்சாரம் வீதம் 20 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாக்குகிறது.

பூநகரிப் பிரதேசத்திலும் அதானி கிரீன் எனர்ஜி சிறிலங்கா நிறுவனம் 250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய காற்றாலை அமைக்க உள்ளது.

தலைமன்னார் வடக்கிலிருந்து எருக்கலம்பட்டி மேற்கு வரை அதானி கிரீன் எனர்ஜி சிறிலங்கா நிறுவனம் 52 காற்றாலைகளை அமைத்து 250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யவுள்ளது.

ஏறக்குறைய 442 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்யவுள்ளது. எந்தக் கேள்விக் கோரலும் இன்றி அதானி நிறுவனத்துக்கு இந்த ஒப்பந்தங்களை அரசு

**அமைக்கப்பட்ட காற்றாலைத் திட்டத்திற்கு இல்லாத எதிர்ப்பு அதானி திட்டத்திற்கு ஏன் எழுகிறது என இந்தியத் தரப்பு ஆராய்கிறது. இங்கு கத்தோலிக்கர்கள் செறிந்து வாழ்வதால், வருவது இந்திய நிறுவனம் என்பதால் குடியேற்றம் ஏதாவது வந்தால் அது இந்துத்துவ கோட்பாட்டை மேலோங்க செய்துவிடும் என மன்னாரில் உள்ள கத்தோலிக்கர்கள் அஞ்சுகிறார்கள் என இந்தியத் தரப்பில் கூறப்படுகிறது. இதில் பெரிய உண்மை இருப்பதாகத் தெரியவில்லை.**



வழங்கியுள்ளது. இவர்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை ஒரு யூனிட் எட்டு அமெரிக்க டொலருக்கு வாங்குவதாகவும் ஒப்பந்தமாகியுள்ளது.

ஆனால் சந்தையில் அதன் பெறுமதி மிகவும் குறைவானது. அதனால் அரசுக்கு ஆண்டு தோறும் 3369 மில்லியன் இழப்பு ஏற்படலாம் என கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் அதானி நிறுவனம் பல ஆயிரம் கோடி ரூபா இலாபம் ஈட்டவுள்ளது.

இதில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வறிக்கை உள்ளூர் எதிர்ப்புகள் பற்றி கிஞ்சித்தும் சிரத்தை கொள்ளவில்லை.

முறையாக கள ஆய்வுகளும் மேற்கொள்ளப் படவில்லை. அதானி நிறுவனத்துக்கு சார்பாகவே இதன் அறிக்கைகள் வெளியிடப் பட்டுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பது ஒரு ஊழல் அதிகார சபை. இதன் இரண்டு முன்னாள் தலைவர்கள் லஞ்சம் பெற்றமையால் சிறையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே அவர்களது அறிக்கையின் நம்பகத்தன்மை எப்படி இருக்கும் என்பது ஊரறிந்த உண்மை.

இந்த அறிக்கையும் தகவல்களும் முற்றிலும் முன்னுக்குப் பின் முரணானவையும், தவறானவையும், பொய்யானவையும், ஒரு பக்க சார்புடையவையுமாகும்.

மாற்றுக் கருத்துக்களையோ, மாற்று இடம் பற்றிய முன்மொழிவையோ, முறையாகப் பேணவில்லை. விலை மனுவும் கோரவில்லை. ஆகவே இது பாரிய முறைகேடான - சட்டவிரோதமான - செயல்பாடாகும் என்கிறார் கலாநிதி ஜகத் குணவர்த்தன.

இலங்கைக்கு வரும் புலம்பெயர் பறவைகளால் 10 இலட்சம் வரையான பறவைகள் அக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப் பகுதியில் தங்கி இருக்கின்றன.

ஆகவே புலம்பெயர் பறவைகள் வராத காலப்பகுதியில் ஆய்வறிக்கைகளை மேற்கொண்டு விட்டு, புலம்பெயர் பறவைகளுக்கு இடையூறு இல்லை என்று கூறியுள்ளனர்.

இது பெரும் தொழில்நுட்ப தவறாகும். அத்துடன் இவர்கள் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பகல் பொழுதில் நடந்து சென்றே ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆனால் ஆயிரக்கணக்கான புலம்பெயர் பறவைகள் இரவு நேரத்தில் பறக்கின்றமையை செய்மதி தொழில் நுட்பத்தினூடாக விஞ்ஞான ரீதியில் சுட்டிக்காட்டி உள்ளோம் என்கிறார் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறை பேராசிரியர் சம்பத் செனவிரத்தின.

இவற்றில் இரண்டரை இலட்சம் தொடக்கம் 4 இலட்சம் வரையான பறவைகள் காணப்படுகின்றன. அவை பகலில் வனப்பகுதியில் தங்கி இருந்து, இரவு நேரத்தில் பறக்கும் பறவைகள்.

அவை தொடர்பில் இவர்களது ஆய்வறிக்கையில் எங்கும் கோடி காட்டப்படவில்லை எனவும், அது ஏன் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

வான் பரப்பில் பறவைகளுக்குப் பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் மிகவும் வேடிக்கையான - நகைச்சுவையான- முறையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் காணப்படுகிறது.

அதானி நிறுவனத்திற்கு காற்றாலை திட்டத்தை வழங்க வேண்டும் எனும் நோக்கிலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதா எனவும் பேராசிரியர் சம்பத் செனவிரத்ன கேள்வி எழுப்புகிறார்.


காற்றாலைகளில் பறவைகள் மோதுவதை தடுப்பதற்கான சுற்றாடல் பாதிப்புகள் தொடர்பான அறிக்கையை ரமணி எல்லே பொல தலைமையில் ஒரு குழு ஆய்வு செய்து அறிக்கையை தயாரித்தது.

அதில் பறவைகள் மற்றும் மிருகங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தேவக்க வீரக்கோன், மூலிகைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக கலாநிதி ஹிமேஸ் ஜயசிங்க, நீர் நிலைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பாக டி.ஏ.ஜே. ரண்வல ஆகியோர் ஆராய்ந்தனர்.

ஆனால் முறையான தகவல்களை வழங்கவில்லை எனும் குற்றச்சாட்டும் உண்டு. இதில் தாம் இரவு வேளைகளில் புலம்பெயர் பறவைகள் தொடர்பில் ஆராயவில்லை என்கிறார் கலாநிதி தேவக்க வீரக்கோன்.

பறவைகள் காற்றாலையில் மோதுவதை முழுமையாக தடுக்க முடியாது, குறைக்கவே முடியும் எனவும் கூறுகிறார். காற்றாலை அமைக்கும் பகுதியில் வீதிகள் அமைப்பதால் இயற்கை நீர்நிலைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு மன்னார் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்கிறார் சுற்றாடல் நீதிக்கான நிலையத்தின் மூத்த ஆலோசகர் ஹெமந்த விதானகே.

கடந்த வருடங்களில் பேசாலை பகுதி நீரில் மூழ்கியது குறிப்பிடத்தக்கது. ஆகவே காற்றாலை அமைப்பதற்கு எதிரான மன்னாரில் உள்ள பொது அமைப்புகளின் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதி





உட்பட பல அதிகாரிகளுக்கு முறையீடுகள் செய்யப்பட்டன.

இது தொடர்பில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பல கூட்டங்களில் முழுமையான எதிர்ப்புகளை காட்டப்பட்டன.

இருந்த போதும் இவை அனைத்தையும் அரசு கண்டு கொள்ளவில்லை. தன் திட்டத்தைச் செயல்படுத்த அது முனைப்பு காட்டி வருகிறது.

உலகின் புவி வெப்பமயமாதல் காரணத்தால் இயற்கையின் மாறுபாடு உலகம் முழுவதும் ஏற்பட்டு வரும் சூழ்நிலையில், அவற்றை தடுப்பதற்குரிய வழிகள் இல்லாமல் உலகம் தடுமாறுகின்ற நிலையில், மன்னார் தீவுப் பகுதி அதனை தாக்குப்பிடிக்க கூடிய வலிமை எதுவும் இல்லை என்பதே சமூகவியலாளர்களின் எதிர்ப்புகளுக்கு காரணம் ஆகும்.

உலகளாவிய ரீதியில் பல ஆய்வாளர்களும் பாதிப்புகளைச் சுட்டிக்காட்டி உள்ளனர். ஆனாலும் அரசாங்கம் செவி சாய்ப்பதாக இல்லை.

பொருளாதார ரீதியாக இந்திய நலன்களை அதிகம் பெற்றுக் கொண்டதாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்திய அதிகார வர்க்கத்துக்கும் அதிக நல்லுறவு இன்மையாலும், ரணில் ஜனாதிபதியாகத் தொடர்வதை அவர்கள் ரசிக்கவில்லை எனும் விமர்சனமும் உண்டு.

இந்தப் பின்னணியில், இலங்கையில் தேர்தலை எதிர்கொள்ள உள்ள சூழ்நிலையில், ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் முரண்பட விரும்பமாட்டார் என்றே தோன்றுகிறது.

இக் காற்றாலை விவகாரம் சம்பந்தமாக ஜனாதிபதி எவருடனும் உரையாடுவதற்குக் கூட தயாராக இருக்கிறார் எனத் தெரியவில்லை.

ஏனெனில் இந்தியாவுடன் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டு, அவ்விதமாக முரண்பட்டால் தன்னை வேறு விதமாக அதிகாரத்தில் இருந்து அகற்றி விடுவார்கள் என அரசியல் கணக்கு அவர் போடலாம். எல்லாமே பதவி நலன் சார்ந்த செயற்பாடுகளும் தீர்மானங்களுமே. இதில் ஏலவே அமைக்கப்பட்ட காற்றாலைத் திட்டத்திற்கு இல்லாத எதிர்ப்பு அதானி திட்டத்திற்கு ஏன் எழுகிறது என இந்தியத் தரப்பு ஆராய்கிறது.

இங்கு கத்தோலிக்கர்கள் செறிந்து வாழ்வதால், வருவது இந்திய நிறுவனம் என்பதால் குடியேற்றம் ஏதாவது வந்தால் அது இந்துத்துவ கோட்பாட்டை மேலோங்க செய்துவிடும் என மன்னாரில் உள்ள கத்தோலிக்கர்கள் அஞ்சுகிறார்கள் என இந்தியத் தரப்பில் கூறப்படுகிறது. இதில் பெரிய உண்மை இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனாலும் இவ்விடயத்தை ஒட்டி பல ஏக்கர் காணிகள் முன்னாள் அமைச்சர் ஒருவரின் பின்னணியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன எனவும், சில இடங்களை அடாத்தாக அபகரித்துள்ளனர் எனவும் உள்ளூர் வாசிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

மன்னாருக்கு வெளியே காற்றாலை அமைக்க வேண்டும் என்பதே பொது அமைப்புகளின் கோரிக்கையாகும். அவர்கள் காற்றாலை திட்டத்தை எதிர்க்கவில்ல. மாறாக மன்னார்த் தீவுப் பகுதியில் அமைப்பதையே எதிர்க்கின்றனர்.

இதேபோல்தான் கனிம மண் அகழ்வும். கடந்த 2018 டிசம்பர் முதல் ஓரியன் மினரல்ஸ் ஹில் சித்த இன்வெஸ்ட்மென்ட் பிரைவேட் லிமிடெட் அதன் நிதி பங்குதாரர் ஆன டைட்டானியம் சாண்ட்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் - இந்த நிறுவனங்களும் அதானியுடையவையே என கூறப்படுகிறது.

500 ஹெக்டேயர் நிலப்பகுதியில் சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட துளையிட்டு மாதிரிகளை ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளனர். இதில் டைட்டானியம் உட்பட பல கனிம தாதுக்கள் உள்ளன எனக் கூறப்படுகிறது. ஆழமான துளையிடுவதன் மூலம் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதுடன் நிலக்கீழ் தட்டுக்களும் அதிர்வடையலாம். அதனால் இயற்கை அனர்த்தங்கள் இயல்பாக நிகழலாம். வறட்சி அதிகரிக்கலாம். விவசாயம் முழுமையாக பாதிக்கப்படலாம். இவை எவையும் கருத்தில் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

இதை அனுமதிக்கும் புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் இலங்கையில் உள்ள ஊழல் நிறுவனங்களில் உச்சம் தொட்டது ஆகும். அதன் வழிகாட்டுதல் நம்பகத்தன்மையை இழக்க வைக்கும் செயற்பாடு ஆகும்.

இதில் அரசியல் நலன் மற்றும் இலஞ்சமே முதன்மை பெறுகின்றன. இதிலும் கனிம மண் உள்ள பகுதியில் பல இடங்களில் அரசியல்வாதிகளின் பினாமிகள் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தை போலி உறுதிகள் மூலம் அபகரித்துள்ளனர்.

இதனால் மன்னார் தீவுக்கு பேராபத்து ஏற்படலாம். அதனை தடுப்பதற்குரிய போராட்டத்தின் பயன் என்பது பெரும் சவாலாகவே உள்ளது.

காற்றாலை, கனிம அகழ்வுத் திட்டம் போன்ற விடயங்களில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் மௌனம் காக்கின்றனர்.

அவர்களின் எஜமானர்கள் கோபித்து விடுவார்கள் என்பதால், அந்த மக்களின் வாக்கு பெற்று நாடாளுமன்றம் போனவர்கள் பானிப் பூரிக்காரர்களுக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த இரண்டு திட்டங்களையும் சிங்களப் புத்தி ஜீவிகள் எதிர்க்கிறார்கள். தமிழ் புத்திஜீவிகள் என சொல்லப்படுபவர்கள் அரசின் ஏக விசுவாசிகளாக மௌனம் காக்கிறார்கள்.

ஆனாலும் அந்த மக்களோ, போராட்ட அமைப்புகளோ இத்திட்டத்தை செயல்படுத்த இலகுவாக அனுமதிக்க மாட்டார்கள் என்றே தோன்றுகின்றது.

இயற்கையை சுரண்டுவதிலும் இயல்பை கெடுப்பதிலும் ஆதிக்க வர்க்கம் அதிதீவிர முனைப்பு காட்டுகிறது. பாதிக்கப்பட போவது சாமானிய மக்களே. இவர்களை காப்பது யார்?




# செல்லாக் காசிலும் செப்பு இருக்கும்

ஒருநாள் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே கடுமையான சண்டை. வாக்குவாதம் முற்றிவிட்டது.

நீயெல்லாம் இருந்து என்ன ஆகப்போகிறது.. ஒரு வேலைக்கும் லாயக்கில்லாமல் இருப்பதைவிட ஒழிந்து தொலை! என்று ஆவேசமாகத் திட்டிவிட்டு, அலுவலகத்துக்குச் சென்று விட்டார்.

இத்தனைக்கும் இருவரும் காதல் மணம் புரிந்தவர்கள். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்லக் கூடியவர்கள்தான். கணவனின் மனக்குழப்பம் அப்படிப் பேச வைத்துவிட்டது. தேவையற்று வார்த்தைகளை விட்டு விட்டார் அவர். வீட்டில் நடக்க இருக்கும் விபரீதம் புரியாமல் பின்னர் அவர் பணியில் ஆழ்ந்து விட்டார்.

அலுவலகத்திலிருந்து மாலையில் வீடு திரும்பினார். தெருவில் இருக்கும் சிறுவர்கள் பலர் அவர் வீட்டு வாசலில் அமர்ந்து கொண்டு மண்ணைக் கொட்டி விளையாடிக் கொண்டிருந்தனர். அவரின் வீட்டுக் கதவு ‘ஆ’வெனத் திறந்து கிடந்தது. வீட்டில் இருக்கும் நாய்க்கூண்டு காலியாக இருந்தது.

இப்படி ஒருநாளும் இருந்ததில்லையே! திகைப்போடு வீட்டுக்குள் நுழைந்தால், களேபரம் நிகழ்ந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டன. தொலைக்காட்சியில் ஏதோவொரு கார்ட்டூன் நிகழ்ச்சி சத்தமாக அலறிக் கொண்டிருந்தது. விளக்கு ஒன்று கீழே தள்ளி விடப்பட்டிருந்தது. தரை விரிப்பு ஒன்று சுவரின் அருகே ஒழுங்கின்றி கிடந்தது.

அறை முழுவதிலும் விளையாட்டு பொம்மைகளும் பல்வேறுபட்ட துணிகளும் இறைந்து கிடந்தன.

என்ன இது? சமையலறைக்குள் மெதுவாக எட்டிப் பார்த்தார். கழுவும் தொட்டியில் பாத்திரங்கள் கழுவப்படாது நிறைந்திருந்தன. மேடையில் காலைச் சிற்றுண்டி சிந்திக் கிடந்தது.

மறுபுறத்தில் குளிரூட்டும் பெட்டியின் கதவு அகலமாகத் திறந்திருந்தது. அதில் இருந்த நாய்க்கான உணவு தரையில் சிந்தியிருந்தது. மேஜையின் அடியில் ஓர் உடைந்த கண்ணாடி தம்ளர் இருந்தது.

பின்கதவின் அருகில் ஒரு மணல் மேடு காணப்பட்டது. ஏதோ நடத்திருக்கிறது. மதிய உணவு வேளைக்கு முன்பே தன் மனைவிக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று உள்மனம் சொன்னது. கணவருக்குப் படபடப்பு அதிகமானது. திகில் பற்றிக்கொண்டது.

ஹாலை ஒட்டி இருந்த குளியலறையை நோக்கித் திரும்ப. அங்கும் அதிர்ச்சிக் காட்சிகள். உள்ளே தண்ணீர் சொட்டும் சப்தம் நிசப்தத்தை மேலும் திகிலாக்கியது.



கதவைத் தாண்டி வெளியே வந்த தண்ணீர் குட்டை போல தேங்கிக் கிடந்தது. ஈரத் துண்டுகளும், தண்ணீரில் ஊறிப் போயிருந்த சோப்புக் கட்டியும், மேலும் பல விளையாட்டு பொம்மைகளும் குளியலறைத் தரை முழுவதும் சிதறிக் கிடந்ததைக் கண்டார் அவர். மைல் கணக்கில் நீளமான டாய்லட் காகிதம் ஓரத்தில் குவியலாகக் கிடந்தது. கண்ணாடியின் மீதும் சுவர்கள் மீதும் பற்பசை பூசப் பட்டிருந்தது.

அப்பா..! டாடி.! என்ற குரல் கேட்டு, திடுக்கிட்ட கணவர் தனது ஒன்றரை வயது மகன் பேஸ்ட்டைப் பிதுக்கி விளையாடிக் கொண்டிருப்பதைக் கவனித்து அவனை அவசரமாகத் தூக்கி ஆழ்ந்த முத்தம் கொடுத்து அணைத்துக் கொண்டார்.



கண்களில் நீர் பொங்கியது. மனைவிக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற பீதியுடன் அவளைத் தேடினார்.

படுக்கையறையை நோக்கிப் பார்வை திரும்பியது. அவசரமாக அதன் கதவைத் திறந்தார். உள்ளே.. முதுகுக்கு தலையணையை முண்டு கொடுத்து, ஒய்யாரமாக சாய்ந்திருந்தாள் அவரது மனைவி. ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

'ஸ்வீட்டி!' என்றார் உலர்ந்த நாக்குடன்.

திரும்பி அவரைப் பார்த்து புன்னகை புரிந்தாள் மனைவி.

எப்போ வந்தீங்கள்? என்று கேட்டாள். அதிர்ச்சியிலிருந்து மீளாத கணவரோ இன்று வீட்டில் என்னதான் நடந்தது? என்று கேட்டார்.

மறுபடியும் சிரித்தாள் மனைவி.

வீட்டிலே என்னதான் வெட்டி முறிச்சியோ.. என்று அலுவலகம் முடிந்து வந்தவுடன் நீங்கள் கேட்பது தானே வழக்கம். இன்றைக்கு நான் ஒன்றும் வெட்டி முறிக்கவில்லை! அதுதான் நடந்திருக்கிறது என்று கூறினாள்.

செல்லாத காசிலும் செப்பு இருக்கும் என்பார்கள். யாரையும் குறைத்து மதிப்பிடக்கூடாது. வீட்டிலும் வெளியிலும் இயல்பாகச் சில விஷயங்கள் நடந்து கொண்டிருப்பதாலேயே அவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளாதவர்களுக்கானது இந்தக் கதை. தயவுசெய்து உங்கள் குணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.

# இரணைமடுக்குள விவகாரம்;



திருநாவுக்கரசு தயந்தன்

# ‘தகுதி’ அற்றவர்களின் தேவைகளை நிறைவேற்ற நினைத்து ‘உதவி’ செய்யப் போன கதை



ஒரு கிராமத்தில் குடியானவன் குடும்பமாக வாழ்ந்து வந்தான். அந்த ஊரில் நீர் முகாமைத்துவம் என்பது பிரமாண்ட பானைகளில் நீரை சேமித்து வைத்தது பாவித்துக் கொள்வதாக இருந்தது.

அந்த வகையில் இந்த குடியானவனிடமும் ஒரு பிரமாண்டமான பானை இருந்தது. அவன் மழை காலங்களில் மழை நீரை அந்த பானையில் தேக்கி வைத்துக் கொள்வான்.

மழைகாலத்தில் தனது வீட்டு வளவிலும் கூரையிலும் பல்வேறு வழிகளில் நீரை கவனமாக சேகரித்து பானையை நிரப்பிக் கொள்வான்.

மேலதிக நீரைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. வருடம் முழுவதும் தனது குடிநீருக்கும் ஏனைய தேவைகளுக்கும் தனது வளவில் விவசாயம் உள்ளிட்ட தேவைகளுக்கும் தான் வளர்க்கும் கால்நடைகளுக்கும் அந்த நீரை கொஞ்சம் கொஞ்சமாக அள்ளி எடுத்துப் பயன்படுத்திக் கொள்வான்.

அவன் பயன்படுத்தும் காலத்தில் பானையில் நீர்மட்டம்



குறைந்து செல்லும். நீர் மட்டம் குறைவாக இருக்கும் காலங்களில் பானையின் மேற்பகுதிகளை சுத்தப்படுத்தி கவனமாக பேணிக் கொள்வான்.

இதையே மற்றவர்களும் பலகாலமாக செய்து வந்தனர்.

காலம் உருண்டோடியது. அவனது பிள்ளைகளும் வளர்ந்தனர். அவன் நீர் சேகரிப்பிலும் பானையை சுத்தமாக வைத்திருப்பதிலும் காட்டும் அக்கறையை அவனது பிள்ளைகள் காட்டுவதில்லை.

அவனுக்கும் வயசாகி இருந்தது. ஆனால் தேவைகள் அதிகமாக இருந்தன. அவனால் முன்னரைப் போல நீரை அள்ளி எடுத்துப் பாவிக்க முடியவில்லை.

பிள்ளைகளில் சிலர் வெளியூர் (நாடு) சென்றிருப்பதால் பொருளாதாரா வசதியும் மேம்பட்டிருந்தது. ஆதலால் பிள்ளைகளின் அறிவுரைப்படி தேவையான தண்ணீரை அள்ளி எடுப்பதற்கு மோட்டார் பூட்டிக் கொண்டான்.

தண்ணீர் இப்போது காலடியில் கிடைப்பதால் காலப்போக்கில் பானையை அதிகமாக கவனிப்பதில்லை. அத்துடன் தேவைக்கு அதிகமாகவும் பல சூழ்நிலைகளில் நீரை உறிஞ்ச ஆரம்பித்தான்.

பானையில் சிறு ஓட்டைகள் ஏற்பட்டு நீர் மட்டம் முன்னரைவிட வேகமாக இறங்க ஆரம்பித்தது. அதாவது பானையில் நீர்மட்டம் அசாதாரணமாக குறையக்கூடய செயல்களை ஓட்டைகளாக உருவாக்கிக் கொண்டான்.

சுத்தம் செய்வதில்லை என்பதால் கொஞ்சம் மாசுகளும் படிய ஆரம்பித்தன. அவன் வேறு விடயங்களில் அதிகமாக கவனம் செலுத்த ஆரம்பித்ததால் மழை காலங்களில் நீரை பானையில் முன்னரைப் போல சேமிப்பதில்லை.

அதற்காக அவன் செய்துவைத் திருந்து பொறிமுறைகளும் காலப் போக்கில் சிதைவடைந்து இருந்தன. பானை நிரம்பாத வருடங்கள் ஆரம்பித்திருந்தன.

அதிக பாவனையும் ஓட்டைகளால் ஏற்பட்ட கசிவுகளும் பானையில் நீர் மட்டத்தை வெகுவாக குறைக்க ஆரம்பித்திருந்தது. பானையின் அடியில் இருக்கும் மண்டி (blackish water) யும் அவ்வப்போது வர ஆரம்பித்தது.

விவசாயி என்ன செய்யலாம் என்று யோசித்தான். சிலரின் அறிவுரையைக் கேட்டு விவசாயம் செய்வதைக் குறைக்க ஆரம்பித்தான். கால்நடைகளையும் கொஞ்சம் கொஞ்சமாக விற்றுவிட்டான்.

அவன் வீட்டைச் சுற்றியிருந்த பசுமையும் குறைந்து போனது. காய்ந்த பூமி காற்றுடன் மண்ணையும் வாரி இறைத்தது. வீட்டின் முற்றத்தை சீமெந்தால் மெழுகினான்.

இப்போது ஈர நிலம் கொடுத்த குளிர்மையை சீமெந்து நிலம் கொடுக்கவில்லை! பானையில் இருந்து சீமெந்து நிலத்துக்கு தினம் தோறும் தண்ணீர் அடித்து குளிர்மைப் படுத்தினான்.

பானையில் நீர்மட்டம் இன்னும் வேகமாக குறைய ஆரம்பித்தது. அதாவது அவனது செயல்களால் பானையில் நீர்மட்டம் குறைவதற்கான ஓட்டைகள் பெரிதாகின. நீர்த்தேவை அவனை பயமுறுத்த ஆரம்பித்தது.

ஒரு நாள் அவன் ஊருக்கு வெளிநாட்டு நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவனுக்கு ஊரையும் தனது சுற்றத்தையும் சூழலையும் சுற்றிக் காட்டிவிட்டு நீர் பற்றாக்குறை பற்றியும் சொன்னார்.

அந்த வெளிநாட்டுக்காரன் ஒரு ஐடியா கொடுத்தான்.

பக்கத்து வீட்டுக்காரன் ஒரு பெரிய கிடாரத்தில் நீர் வைத்து தனது மிகப்பெரிய காணியில் விவசாயத்துடன் செழிப்பாக இருக்கிறானே. மழை காலத்தில் அவன் கிடாரம் முட்டி ஏராளமான நீர் வெளியே தானே போகிறது. ‘நீ அவனிடம் கொஞ்சம் நீரை கேட்டு பெற்று பாவிக்கலாமே’ என்றான்.

இவனுக்கும் அந்த ஐடியா பிடித்திருந்தது. பக்கத்து வீட்டுக்காரனிடம் தனக்கு கொஞ்சம் நீர் தரும் படி கேட்டான். அவனும் சரி பக்கத்து வீட்டுக்காரன் தானே.. நம் ஊர்க்காரன்.. உறவுக்காரன் என்று கொஞ்சம் கொடுக்க ஆரம்பித்தான்.

அதற்கு சிறு தொகைப் பணத்தையும் செலுத்தி வந்தான். பக்கத்து வீட்டின் கிடாரத்தில் இருந்து ஒரு குழாய் இணைப்பை ஏற்படுத்தி தன் பானையுடன் இணைத்துக் கொண்டான்.

பக்கத்து வீட்டில் இருந்து நீர் கிடைக்கிறது தானே என்ற மகிழ்ச்சி அவனின் கொஞ்சநஞ்ச





சேமிப்பு பழக்கத்தையும் முற்றாக அழித்தது.

இப்போதெல்லாம் அவன் தன் பானையில் நீர் சேகரிப்பதையோ, பானையை சுத்தப்படுத்துவதையோ முற்றாக மறந்திருந்தான். இவனது மற்றப் பிள்ளைகளும் வெளியூருக்கு செல்ல இவனது பண பலம் அவனது கடந்த காலத்தின் கண்ணை மறைக்கும் அளவு வளர்ந்தது.

அதனால் பணத்தை செலுத்தி எவ்வளவு தண்ணீரை வேண்டுமானாலும் பக்கத்து வீட்டுக்காரனிடம் வாங்கிக் கொள்ளலாம் என நினைத்தான்.

காலம் செல்லச்செல்ல இவனது நீர்ப்பாவனை பக்கத்து வீட்டுக்காரன் கிடாரத்தின் நீர் மட்டத்தையும் கணிசமாக இறக்க ஆரம்பித்தது.

அவன் இந்த குடியானவனுடன் முரண்பட ஆரம்பித்தான். ஆனாலும் இவனது பணலத்துக்கு பயத்தில் சற்று அடங்கியே போக வேண்டி இருந்தது. அந்த வருடம் மழை பிழைத்தது.

கிடாரம் நிரம்பவில்லை. கிடாரத்தின் நீர்மட்டம் கணிசமாக குறைந்து அவனது வாழ்வாதாரமான விவசாயத்துக்கே போதாமல் போனது.

ஆனால் இவனோ தனக்கு நீர் வந்தாக வேண்டும் என்பதில் மட்டும் குறியாக சண்டையிட ஆரம்பித்தான். இவன் தன்னிடம் இருந்த பானை பற்றியே முற்றாக மறந்திருந்ததால் அது முற்றாக இனிமேல் சேமிக்க முடியாத அளவுக்கு பாழடைந்து போயிருந்தது.

இவனிடம் பக்கத்து வீட்டுக்காரனின் கிடாரத்து நீருக்கு சண்டையிடுவதைத் தவிர வேறு வாய்ப்புகள் இருக்கவில்லை. அந்த வருடம் தனது வாழ்வாதாரத்தை சுருக்கி சமாளிக்க முயன்றார்கள்.

ஆனால் அப்போது கூட ஓட்டைப் பானையை சரிசெய்து அவசரத்துக்கு பாவிக்கவாவது தயாராக வைக்கவேண்டும் என்ற சிந்தனை அவனுக்கு வரவே இல்லை.

தொடர்ச்சியாக இரண்டாவது வருடமும் மழை பிழைத்து வரட்சி நிலை பிரகடனப்படுத்தப்பட, சில காலத்தில் கிடாரமும் காலியானது. பானையும் காலியானது.

இந்த கதையில் யாழ் குடாநாட்டின் Aqufier ( நிலத்தடி நீர்த்தேக்க அமைப்பு) ஐ ஒரு பிரமாண்ட பானையாகவும், யாழ்ப்பாணத்திற்கான நன்நீர் உத்தரவாதம் என்பது தொடர்ந்து பேசுபொருளாகும் போது அதற்கான தீர்வுகளாக இரணைமடு, பாலியாறு திட்டம் என பல்வேறு திட்டங்களை பக்கத்து வீட்டுகாரனின் கிடாரமாகவும் கற்பனை செய்து பாருங்கள்.

பொருளாதார/ தொழில்நுட்ப வளர்ச்சிகள் பல்வேறு திட்டங்களின் சாத்தியப்பாடுகளை கொண்டுவரலாம். நமக்கு நீர்த் ‘தேவை’ இருக்கும் போது அதற்கு பக்கத்து வீட்டுக்காரன் உதவுவது தவறில்லை.

ஆனால் அந்த ‘தேவை’ யை கொண்டிருப்பதற்கான ‘தகுதி’ நம்மிடம் உள்ளதா என்பது மிக முக்கியமானது. அதாவது குறித்த தேவையை நியாயப்படுத்துவதற்கு போதிய அளவு உள்ளக சாத்தியப்பாடுகளை நாம் முயற்சித்துள்ளோமா?

அந்த தேவை எழுவதற்கான அடிப்படைகள் நியாயமானவையா? அநியாயமான செயல்களால் அந்த தேவை எழுகின்றதாயின் அந்த அநியாயங்களை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோமா? முயற்சித்திருக்கிறோமா? என்ற விடயங்கள்தான் தேவைக்கான ‘தகுதி’ யை தீர்மானிக்கின்றன.

‘தகுதி’ அற்றவர்களின் ‘தேவை’ களை நிறைவேற்ற நினைத்து ‘உதவி’ செய்யப் போனவர்களும் மாட்டிக்கொண்டது போலதான் கிடாரம் காலியானது.

‘தேவை’களுக்கு அடுத்தவன் கிடாரத்தில் கண் வைக்க முன் நமது பானைகளில் ஓட்டைகளை அடைக்க வேண்டும். இல்லாவிட்டால் கிடாரத்தில் இருந்து கிடைக்கும் தண்ணீரும் நமது பானையில் இருக்கும் ஓட்டைகளால் விரயமாகி கிடாரம் காலியாகும்.

இது தான் யாழ் குடாநாட்டின் நீர் உத்தரவாதம் சார்ந்த பிரச்சினைகளுக்கும் இரணைமடு போன்ற தீர்வுகளுக்குமான என் நிலைப்பாடு.

தவிர, இது இரணைமடுவில் இருந்து சிறு அளவு நீரை பெற்று நியாயமான தேவைகளுக்கு பாவிப்பதற்கு எதிரான நிலைப்பாடு என்று அர்த்தமில்லை.

யாழ் குடாநாட்டின் நீர் முகாமைத்துவத்தின் பெரிய ஓட்டைகளாக நான் கருதுபவை:

1) நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பொறிமுறைகள் சிதைவுற்று வருகின்றன. போதிய சட்டங்கள் இருந்தும் பின்பற்றப் படுவதில்லை. சிலர் அளவுக்கு அதிகமாக நீரை உறிஞ்சி சமநிலையை குழப்புவதும், பலர் தேவைக்கு அதிகமாக நீரை உறிஞ்சி விரயமாக்குவதும் ஊற்றுமாறி உவர்நீர் உட்புக காரணமாகிவிடுகிறது.

2. கணிசமான/ நெருக்கமான சீமெந்து தரைகளும், சீமெந்து வாய்க்கால்களும் நிலத்தடி நீர்த்தேங்கங்களுக்கு மழைகாலங்களில் (குறிப்பாக மாரி தவிர்ந்த காலங்களில் பெய்யும் மழைகள்) நீரை சேமிக்க தவறுகின்றன. (மூடப்படும் அல்லது தூர்வாராமல் கொள்ளளவு குன்றிவரும் குளங்களும் அதில் அடக்கம்.)

3. மலக்கழிவுகள், கிருமிநாசினிகள், உரம், வாகனம் கழுவும் கழிவுகள் உள்ளிட்ட பல கழிவுகள் நிலத்தடி நீருடன் கலத்தல். (போதிய சட்டங்கள் இருந்தாலும் நடைமுறையில் பலர் பின்பற்றுவதில்லை.)

4. நீரின் முக்கியத்துவம் சார்ந்த புரிதல் பலருக்கும் இல்லை. நீர். இயற்கை கொடுத்த வரம். அது நம்மண்ணில் வாழும் எல்லா உயிர்களுக்குமானது. மனிதனுக்கு மட்டுமானதல்ல என்ற புரிதல் உருவாக வேண்டும்.

5. கட்டுப்பாடற்ற முறையில் அடிக்கப்பட்டு கட்டுப்பாடற்ற முறையில் குழாய்க் கிணறுகளில் உறிஞ்சி வேறு பிரதேசங்களுக்கும் சென்று சேரும் நிலை ஒட்டுமொத்த நீரியல் சமநிலையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

அது சார்ந்த புரிதல் இன்மை மேலும் பல பிரச்சினைகளுக்கு வித்திடும்.

யாழ்ப்பாணத்தில் நீரை குளங்கள் மூலம் தேக்கி வைக்க முடியுமா? ஆம்! ஆனால் கிட்டத்தட்ட 10 - 11 மாதங்கள் வரை இப்போது சாத்தியமாகிறது!

கடந்த வருடமும் (2023) பினாக்கை குளம், கந்தரோடை குளம் போன்ற பகுதிகளில் செப்டெம்பர் மாதம் வரை குளங்களில் நீர் இருந்தது. அது கடலுக்குள் ஓடிவிடவில்லை!



## குடாநாட்டின் Aqufiers பற்றி:

மாரிகாலத்தில் நிலத்தினுள் செல்லும் நீரின் ஒரு பகுதி நீர்மட்டம் உயர உயர ஒரு கட்டத்தில் நிலப்பகுதியில் உள்ள நீரில் உள்ள அழுத்தம் அதிகமாகி நிலத்தடி நீரோட்டமாக கடலினுள் செல்ல ஆரம்பிக்கும்.

ஆனால் ஒரு கட்டத்தில் அந்த நீரோட்டம் ஒரு சமநிலை அடைந்து அழுத்த வித்தியாசம் குறைந்த நிலையில் அந்த சமநிலை பேணப்படும்.

கோடை காலத்தில் நமது நீர்ப் பாவனை காரணமாக நிலத்தடி நீர்மட்டம் தொடர்ந்து குறைய அழுத்த வித்தியாசம் மறுபடி எதிர் மறையான திசையில் அதிகரிக்க கடல் நீர் உட்புக ஆரம்பிக்கும்.

கரையோரப் பிரதேசங்களில் மிக வேகமாக அதிக நீரை உறிஞ்சினால் ஏனைய நன்னீர் உள்ள பகுதிகளில் இருந்து நன்னீர் அந்த பகுதிகளுக்கு சென்று அழுத்த சம நிலைக்கு கொண்டுவர முதல் கடல் நீர் வேகமாக செல்லக்கூடும்.

ஆதனால்தான் கரையோரப் பகுதிகளில் கோடை காலங்களிலும் அல்லது நீர் அளவுக்கு அதிகமாக வேகமாக உறிஞ்சப்படும் காலங்களிலும் உவர்த்தன்மை உணரப்படும்.

## குளங்களை தூர் வாருவது பற்றி:

குளங்கள் பொதுவாக கழி மண்ணை கொண்ட பகுதிகளில் இருக்கும். எங்கள் வயல் நிலங்கள் கழிமண்ணை கொண்டவை. அவை மிக நுண்ணிய மண்துகள்களால் ஆனவை. அத்துடன் அவை நெருக்கமாக பிணைந்திருக்கும்.

அவற்றினூக நீர் கசியும் தன்மை குறைவானது. குளங்ளின் அடித்தட்டு இவ்வாறான படையைக் கொண்டிருக்கும். அதன் மேல் ஒவ்வொரு வருடமும் வெள்ளத்துடன் வரப்படும் வண்டல் மண் உள்ளிட்ட ஏனைய திண்மங்கள் இருக்கும். அதேவேளை யாழ்குடாநாட்டின் பெரும்பகுதி சுண்ணாம்புக் கற்பாறைகளை நிலத்தின் கீழே கொண்டது. அவற்றின் வெடிப்புகள் இணைக்கப்பட்டே நிலத்தடி நீர்த்தேக்க அமைப்பில் Aqufier உள்ளன.

அந்த வெடிப்புகளினூடான நீரோட்டத்தை தான் நமது கிணறுகளின் ஊற்றுகள் என்கிறோம். 'குளம் தூர்வாரல்' என்பது குளத்தின் மேற்தட்டில் வருடா வருடம் படியும் வண்டல் மண் உள்ளிட்ட படிவுகளை அப்புறப்படுத்தி குளக்கட்டை சீர் செய்து குளத்தின் கொள்ளளவு குறையாமல் பேணிக் கொள்வது. குளத்தின் அடித்தட்டில் உள்ள கழிமண் படிகளை எந்த சந்தர்ப்பத்திலும் சேதப்படுத்தக் கூடாது. அவ்வாறு சேதப்படுத்தப் படும் பட்சத்தில் நீர் வேகமாக கீழே உள்ள சுண்ணாம்புக் கற்படிமங்களின் வெடிப்புகளுக்குள் இறங்கி ஓட ஆரம்பித்துவிடும்.

*யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீர்த் தேக்கங்களில் (Aqufier) இருந்து கடலுடன் கலப்பது போக மீதமாக தேக்கி வைக்க கூடிய நீரின் அளவு பற்றி:*

யாழ் குடாநாட்டில் 830000+ மக்கள் வாழ்ந்த காலத்தில் அவ்வாறு தேக்கி வைத்த நீர் கொள்ளளவிலும் தரத்திலும் போதுமானதாக இருந்திருக்கிறது.

இப்போது 725000+ மக்களே வாழ்கின்றனர். தேவைகள் அதிகரித்திருப்பது உண்மை. ஆனால் அதைவிட நாங்கள் நீரை மாசுபடுத்துவதும் வேகமாக அதிகரித்துள்ளது. அந்த இரண்டையும் கவனமாகக் கையாண்டு எங்கள் Aqufier ஐ பாதுகாத்தால் இன்னும் பலகாலம் எங்கள் நீர் கணிசமான காலப்பகுதிக்குப் போதுமானது. வரண்ட காலங்களில் வெளியிடங்களில் இருந்து நீரை கொண்டு வரக்கூடிய தற்காலிக பொறிமுறைகள் போதுமானவை.

அதிலும் குறிப்பாக இரணைமடு, பாலியாறு போன்றவை யாழ்ப்பாணத்திற்கு மாரி காலத்தை கொடுக்கும் அதே காலமான வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை காலத்திலேயே மழையை பெறுகின்றன.

அதாவது நமக்கு நீர் அதிகமாக கிடைக்கும் காலத்தில்தான் அங்கும் நீர் மேலதிகமாக இருக்கும். நமக்கு வரண்ட காலத்தில் தான் அங்கும் நீர் குறைவாக இருக்கும். அந்த யதார்த்தத்தையும் நாங்கள் புரிந்து நடக்க வேண்டும்.

ஆனால் நிரந்தரமாக இன்னொரு நீர் மூலத்தில் தங்கியிருக்க முயல முதல் நமது நீர் மூலத்திற்கு நாம் செய்யும் அநீதிகளை சீர்படுத்திக் கொண்டு மற்றவன் கிடாரத்தில் உதவி கேட்பதே நியாயமானது. அதுவே அனைத்து ஜீவராசிகளுக்குமான தர்மம்.

உலகளாவிய ரீதியில் நீர் சார்ந்த பிரச்சனைகளுக்கு முக்கிய காரணிகளாக கருதப்படுவன வற்றில் மனித செயற்பாடுகள், மாசடைதல், அதிகரித்த தேவைகள் (அதில் நியாயமற்ற தேவைகளும் உள்ளடக்கம்) முதன்மையானவை.

அத்தோடு எதிர்காலத்துக்கான நீரை உறுதிப்படுத்துவதில் நிலத்தடி நீரை பாதுகாப்பதும் முக்கியமானது. மாகாணங்கள், மாவட்டங்கள், மாநிலங்கள் நாடுகளுக்கிடையில் நீர்ப் பகிர்வு சார்ந்த பிரச்சினைகளும் அதிகரித்து வருகின்றன.

இந்த நீண்ட கட்டுரை யாழ்ப்பாணத்தின் நீர்ப்பிரச்சினை தொடர்பான புரிதலை ஓரளவு கொடுத்திருக்கும் என நம்புவதோடு ஏனைய மாவட்டங்களோடு நீரைப் பகிர்வதற்கான அணுகுமுறையில் நீண்டகாலத் தீர்வை நோக்கி எவ்வாறான செயற்பாடுகளை முதலில் நாம் கருத்தில் எடுத்து நமது ஓட்டைகளை அடைத்துக்கொள்ள அல்லது குறைத்துக் கொள்ளவேண்டும் என்ற புரிதலையும் கொடுத்திருக்கும் என நம்புகிறேன்.






# கே. எம். பஞ்சாபிகேசன் நூற்றாண்டு விழா

(இசைப் பேரொலியான நாதஸ்வரப் பெருமேதை)
நாத இசைப் பேரொலி
கே.எம். பஞ்சாபிகேசன் அவர்களின்
நூற்றாண்டு விழா ஜூலை முதலாம்
திகதி நடாத்தப்பட்டது. அதனையொட்டி
இக்கட்டுரை பிரசுரமாகிறது.

*1974 உலகத் தமிழாராட்சி மாநாட்டில் இசை வழங்கிய சரித்திரப் பெருமை பெற்றவர் இவர். வாழ்வின் முதுமையிலும் கம்பீரம் குறையாமல் இறுதிவரை நாதஸ்வரம் வாசித்த மேதையான கே.எம். பஞ்சாபிகேசன் 26.06.2015 அன்று தன் மூச்சாகிய ஏழு ஸ்வரங்களுக்குள் மூழ்கிப்போனார்.)*

ஏழு விரல்களினால் வாசிக்கப்படுவதால் 'ஏழில்' என்றழைக்கப்பட்ட நாதஸ்வரக் கலையின் தனித்துவ ஆளுமையாக விளங்கியவரே கலாநிதி கே.எம்.பஞ்சாபிகேசன்.

காற்றிசைக்கருவி வகையைச் சார்ந்த இந்த 'நாதஸ்வரம்' மக்களின் அன்றாட வாழ்க்கையில் தினசரி இடம்பெறும் வகையில் மிகவும் சிறப்பாக ஈழத்தில் இசைக்கப்படுகின்றது. தமிழர் கலாசாரத்தில் மிகவும் புகழ் பெற்ற இசைக் கருவியாக விளங்குவது இந்த நாதஸ்வர இசைக்கருவியாகும்.

தமிழ் மக்கள் பெருமையோடு சொந்தம் பாராட்டுகிற வாத்தியமான நாதஸ்வரம் திருவிழாக்களிலும், திருமண வைபவங்களிலும், திருக்கோயில் வழிபாடுகளிலும், இறைவனின் திருவீதி உலாக்களிலும், உறுமி மேளம், நையாண்டி மேளம் போன்ற கிராமிய இசை நிகழ்ச்சிகளிலும் மிகவும் சிறப்பாக இசைக்கப்படுகிறது.

## இராஜ வாத்தியமான நாகஸ்வரம்:

இராஜவாத்தியம் என்றும், மங்களகரமான வாத்தியம் என்றும் சிறப்பிக்கப்பட்டு, தமிழர்கள் கொண்டாடும் விழாக்கள் யாவற்றிலும் நாதஸ்வர இசையை நாம் இனிதே கேட்கலாம். நாதஸ்வரம் துளைக்கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக் கருவியாகும். இது நாதஸ்வரம், நாதசுரம், நாகசுரம், நாகஸ்வரம், நாயனம் என்று பலவாறு அழைக்கப்படுவது உண்டு.

ஈழத்து இசைப் பாரம்பரியத்தில் செழுமையாகத் தொடரும் பண்பாட்டின் அடையாளமாக நாதஸ்வரக் கலை விளங்குகின்றது. இந்தக் கலையின் தனித்துவ ஆளுமையாக விளங்கியவரே தென்மராட்சி மண் பெற்றெடுத்த கே.எம்.பஞ்சாபிகேசன்.



ஐங்கரன்

தெய்வீகமான இசையை இன்றளவும் பட்டிதொட்டி முதல் இசைவிழா வரையும் போற்றிக் காப்பவர்கள் நாதஸ்வரக் கலைஞர்களே.

இது திறந்த வெளியில் இசைப்பதற்கு மிகவும் ஏற்ற கருவி. அத்துடன் நெடுந்தூரம் வரையில் இதன் ஓசையைக் கேட்கலாம்.

## உலகத் தமிழாராட்சி மாநாட்டில் இசை முழங்கியவர்:

1974 உலகத் தமிழாராட்சி மாநாட்டில் இசை வழங்கிய சரித்திரப் பெருமை பெற்றவர் கே.எம்.பஞ்சாபிகேசன். பாரம்பரிய பேணுகை, கலை வாழ்வை ஆன்மீகமாக கொண்ட பக்குவம் அவரது உயர்தனிப்பண்புக்களை தன்னகத்தே கொண்ட பெருமைக்குரியவர்.

பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆஸ்தான வித்துவானாக கௌரவம் பெற்றவர். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்த வாசிப்பு, சபை அறிந்த கச்சேரி ஒழுங்கு, சாஸ்திரிய இசை நுணுக்கம், எல்லையில்லாத மனோதர்மம் அவரது இசையின் தனித்துவங்கள் ஆகும்.

கோயில்களில் நாகஸ்வர இசையோடுதான் இறைவனின் நித்திய காலப் பூசைகள் நடைபெறும். ஒவ்வொரு காலப் பூசைகளிலும் என்ன என்ன ராகங்கள் வாசிக்கப்பட வேண்டும் என்பது தொன்றுதொட்டு மரபாகவும் பூசை விதிமுறைகளுக்கு அமையவும் அமைக்கப்பட்டுள்ளது.

புலருமுன் நான்கு மணி தொடங்கி பூபாளம், பௌளி, மலையமாருதம் வாசிக்கப்படும். உச்சி வேளை எனில் முகாரியும் பூரண சந்திரிகாவும் மாலை ஆறு மணிக்கு மேல் சங்கராபரணமும் பைரவியும் இசைக்கப்படும். அதே போல விழாக் காலத்தில் இறைவன் உலா வரும் இடத்திற்கு ஏற்பவும் ராகங்கள் வாசிக்கப்படுகின்றன.

## தமிழகத்தில் இசை பயிற்சி:

உலகளாவிய ரீதியில் புகழடைந்த பஞ்சாபிகேசன் அவர்கள் 01.07.1924 ஆம் ஆண்டு தென்மராட்சியில் பிறந்தவர். தனது இசையாற்றலை வளர்த்துக் கொள்வதற்காக தமிழகம் சென்று நாதஸ்வர இசை மாமேதைகளான திருவாவடுதுறை ராஜரட்ணம்பிள்ளை 'கக்காயி' நடராஜசுந்தரம் பிள்ளை ஆகியோரிடம் இசை பயின்றவர்.



பின்னர் ஐயம்பேட்டை வேணுகோபால் பிள்ளையிடம் பயிற்சி பெற்று பாரம்பரிய மரபுவழிக் கச்சேரி செய்யும் முறைமையினை நன்கு பயின்று கொண்டார்.


ஈழமண் தந்த நாதஸ்வர, தவில் இசைக் கலைஞர்கள் தங்களது பெயர்களை இசையுலகில் மிக ஆழமாகவே பதித்துள்ளார்கள். கலைகளின் தாயகம் என நினைக்கின்ற தமிழகக் கலைஞர்கள் வியந்து நிற்கும் அளவுக்கு எங்கள் தேச இசை வேளாளர்களின் மரபும் வளர்ச்சியும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவிற்கு வியாபித்து இருக்கிறது.

## 14வது வயதில் முதல் நாதஸ்வரக் கச்சேரி:

தனது 14வது வயதில் முதல் நாதஸ்வரக் கச்சேரியை நிகழ்த்திய இவர் அன்று தொட்டு படிப்படியாகப் பெரும் புகழ்கொண்டார். தமிழகத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான்களான திருவாரூர் இலட்சியப்பா திருநெல்வேலி பிச்சையப்பா கம்பர், மாசிலாமணி போன்றோரோடும் நம் நாட்டின் பிரபல கலைஞர்களான நல்லூர் சிவசாமி, அளவெட்டி பத்மநாதன் போன்றோரோடும் இணைந்து பல கச்சேரிகளை இவர் வாசித்துள்ளார்.

உலகப்புகழ்பெற்ற தவில்மேதை தட்சிணாமூர்த்தி அவர்களுடன் இணைந்து இவர் செய்த கச்சேரிகள் மறக்க முடியாதவை.





வள்ளல் நாதஸ்வர கலாமணி' எனும் பட்டமும், கல்வி அமைச்சினால் 'நாதஸ்வர கானவாரிதி' எனும் பட்டமும், இந்து கலாசார அமைச்சினால் 'ஸ்வரஞான திலகம்' எனும் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டன.

மலேசியா, சிங்கப்பூர், பாங்கொக், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் இவரது இசைக்கச்சேரிகள் பல நிகழ்ந்துள்ளன.

## யாழ் பல்கலைக்கழக கலாநிதிப் பட்டம்:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2010ம் ஆண்டு ஒக்ரோபர் 6ம் திகதி 'கௌரவ கலாநிதி' பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்தது. வாழும் போதே ஒரு கலைஞன் கௌரவிக்கப்படுவதும் அங்கீகரிக்கப்படுவதுமே அவன் கலைக்கு ஆற்றிய சேவையை உணர்ந்து கொள்ளப் போதுமானது.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக அமைந்தது, இவரது வித்துவத் திறமையையும் தனியொழுக்க மாண்பையும் கருத்தில் கொண்டு கௌரவ கலாநிதிப் பட்டம் கிடைத்தமைக்காக இசைக் கலைஞர்கள் சேர்ந்து நடாத்திய ஒரு கௌரவிப்பு விழா. இவ் விழாவில் பஞ்சாபிகேசன் அவர்கள் இணுவில் கந்தசுவாமி கோவிலில் இருந்து ஊர்வலமாக இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துவரப்பட்டார்.

இணுவில் கலாமண்டபத்தில் பெரும் விழா நடந்தது. கல்விமான்கள், கலைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள் என அனைவரும் ஒன்றுகூடி வாழ்த்தி மகிழ்ந்தனர். இது ஒரு கலைஞன் வாழ்ந்ததற்கான அடையாளமாகக் கொள்ளலாம். வாழும் போதே கௌரவிக்கப்பட்ட ஒரே ஒரு நாதஸ்வரக் கலைஞர் அவராவார்.

## தென்மராட்சி பெருவிழா:

சாவகச்சேரியூர் பெற்ற இசைப் பேறறிஞர் திரு. பஞ்சாபிகேசன் போற்றுதலுக்கு உரிய ஒப்பற்ற கலைஞன் ஆவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமைக்கு தென்மராட்சியில் நடைபெற்ற பராட்டுவிழா பெருமெடுப்பில் நிகழ்ந்தது.

2011 பெப்ருவரி மாதம் 27ம் திகதி சாவகச்சேரி மண் பஞ்சாபிகேசனுக்கு பெருவிழா எடுத்து கௌரவித்தது. சாவகச்சேரி சிவன் கோவில் கலாசார மண்டபத்தில் தென்மராட்சி கல்விமான்கள், கலைஞர்கள், வணிகர்கள், கலாரசிகர்கள் என அனைவரும் திரண்டிருந்து வாழ்த்தினர். நாத இசைக்காக தன்னை அர்ப்பணித்த ஏந்தலை உள்ளத்தில் ஏற்றி வைத்து வணங்கி மகிழ்ந்தார்கள்.

பெரும் திரளாகத் திரண்டு தங்கள் பிதாமகரை வாழ்த்தியும் வணங்கியும் மகிழ்ந்தனர். வாழ்வின் முதுமையிலும் கம்பீரம் குறையாமல் இறுதிவரை நாதஸ்வர மேதையாக விளங்கிய இசைப் பேறறிஞர் சாவகச்சேரியூர் கே.எம்.பஞ்சாபிகேசன் அவர்கள் 26.06.2015 அன்று தன் மூச்சாகிய ஏழு ஸ்வரங்களுக்குள் மூழ்கிப்போனார்.



## இசைப்பேரறிஞர் விருது:

எம் மண்ணின் அரும் பெரும் சொத்தான நாதஸ்வர, தவில் இசைக் கலைஞர்களான மறைந்த தவில் மாமேதை வி.தெட்சணாமூர்த்தி, நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதன் வரிசையில் சாவகச்சேரி தந்த எம்.பஞ்சாபிகேசன் அவர்களும் முக்கிய இடம் பெறுகிறார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் 'இசைப்பேரறிஞர்' விருதினையும், கலாசார அமைச்சின் 'கலாபூஷணம்' விருதினையும், யாழ். இந்து கலாசார சபையின் 'சிவகலாபூஷணம்' விருதினையும் பெற்றவராவார். 1998 இல் வடகிழக்கு மாகாண சபையினால் இவருக்கு ஆளுநர் விருதும் வழங்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்ததும் அறிந்ததே. திருக்கேதீஸ்வர தேவஸ்தானத்தினால் 'இசை



# பழந்தமிழர்களும் உணவும்

தமிழர்கள் எங்கே வாழ்ந்தார்கள் என ஆராய்வதை விடவும், அவர்கள் ஐந்து வகையான நில அமைப்பில் பரந்து வாழ்ந்திருந்தனர் எனக் கொள்ளலாம். ஆதியில் வேட்டை சமூகமாய் புலால் உண்பவர்களாய் இருந்தாலும், காலப் போக்கில் சமவெளி மற்றும் ஆற்றங்கரை நாகரீகமாய் தலையெடுத்த பின்னர் காய், கனி மற்றும் கிழங்குகளை தங்கள் உணவில் இணைத்துக் கொண்டதற்கான குறிப்புகளைக் காண முடிகிறது.

மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் மூங்கிலரிசி, தினை, தேன், காடும் காடு சார்ந்த முல்லை நிலத்தில் சாமை, வரகு, வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் செந்நெல், வெண்நெல், கடலும் கடல் சார்ந்த பகுதியில் மீன் என்பன முக்கியமான உணவாக இருந்திருக்கின்றன. இந்த தகவல்களை நாம் தொல்காப்பியத்தின் வழியே அறிய முடிகிறது.

இவை தவிர கால்நடைகளில் இருந்து கிடைத்த பாலில் இருந்து வெண்கட்டி, ஏடு, தயிர், மோர், நெய், ஆகியவற்றை தயாரித்து பயன் படுத்தியதற்கான குறிப்புகளும் உள்ளன.

உணவை சமைக்க ஆரம்பித்த காலத்தில் தமிழர்களின் உணவு அவித்தல், வேகவைத்தல், வறுத்தல் என்பதாகவே இருந்தது. பிற்காலத்தில் நெய் சேர்த்து பொரித்ததாக குறிப்புகள் கூறுகின்றன. இறைச்சியில் நெய் சேர்த்து மிளகு தூவி பொரித்து உண்டதாக ஒரு பாடல் கூறுகிறது.

முதன்மையான உணவாக அரிசியே இருந்திருக்கிறது. நெல்லை வேக வைத்து புழுங்கல் அரிசியாக பயன்படுத்தியதாகவும் தெரிகிறது. தொன்று தொட்டு பயிரிட்டு வந்த பாரம்பரிய நெல் வகைகள் பலவும் இன்று முற்றாக அழிந்து விட்டதை இந்த இடத்தில் குறிப்பிட்டாக வேண்டும். சோறுடன், குழம்பு, கூட்டு, பொரியல் என உணவை பல ருசிகளில் சமைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது.

உணவை இலையில் வைத்து உண்ணும் பழக்கம் ஆதியில் இருந்து இன்று வரை தொடர்வது தமிழர்களின் தனிச் சிறப்பு. தாமரை இலை, மந்தாரை இலை, வாழை இலை என பல்வேறு இலைகளை இதற்குப் பயன் படுத்தியிருக்கின்றனர். உண்வை எல்லோரும் கூடியிருந்து உண்ணும் வழக்கமும் இருந்திருக்கிறது. இதனை 'சிறுஞ்சோற்று நிலை', 'பெருஞ்சோற்று நிலை'என குறிப்பிட்டிருக்கின்றனர்.

இவை தவிர கள் போன்ற மது வகைகளும் பழந்தமிழரின் வாழ்வில் இருந்திருக்கிறது. பிற்காலத்தில் பக்தி இயக்கம் எழுச்சி பெற்ற போதுதான் பிற இனக் குழுக்களின் உணவுக் கலாச்சாரம் தமிழர்களிடையே ஊடுருவி இருக்கின்றது.



பவானி

# இடப்பெயர்வும் நானும்

பாகம்: 06

தொடர்ந்து ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விடியலும் இழப்புக்களுடனும் வெடியோசை அதிர்வுகளுடனும் தொடங்கின. மக்களுக்கு அன்றாடம் உயிரிழப்புக்கள் ஏற்பட்டன. எங்கள் கூட்டுறவு சங்கத்தில் இரண்டு பணியாளர்கள், வேறு இருவரின் மனைவிகள், இதைத்தவிர ஆரம்பப் காலத்தில் பொது முகாமையாளராக இருந்த ஒருவர், நம் சங்க வளர்ச்சிக்காக பாடுபட்ட உறுப்பினர்கள் என்று பலரையும் நாம் இழந்து நின்றோம்.

அங்கு நாம் சுமார் இரண்டு மாதங்கள் இருந்திருப்போம். இனி என்னால் என் பிள்ளைகளை பாதுகாப்பாக வைத்து இருக்க முடியாது எனும் எண்ணத்தை ஏற்படுத்துவதுபோல ஒரு சம்பவம் நடந்தது.

ஒரு நாள் விடிகின்ற வேளையில் பேரிரைச்சலுடன் நான்கு கிபிர் விமானங்கள் குண்டுமழை பொழிந்து போக, அடுத்த நொடி தாழப்பறந்த பைற்றர் ஹெலி ஒரு தரப்பாள் கொட்டிலை நோக்கி சுடத் தொடங்கியது. அதனுள் என்ன இருந்தது? யார் இருந்தார்கள்? எதுவும் தெரியாது. முற்று முழுதாக அழித்து விட்டுப் பறந்தது.

தமிழீழ வான் பரப்பில் தாழப்பறக்க பயப்படும் சிறிலங்கா விமானப்படை இன்று ஆணவத்தோடு ஒரு கொட்டிலை அழித்து விட்டுப் பறக்கிறது. இது எனது கொட்டிலிருந்து கூப்பிடு தொலைவிலேயே நடைபெற்றது. இதன் பிறகு எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஏற்கனவே இதயம் பலவீனமான எனது மகள் மிகவும் சோர்ந்து போனாள். எனது நண்பி தாங்கள் இராணுவத்திடம் செல்லப் போவதாக கூறினாள். என்னாலும் இதற்கு மேல் சமாளிக்க முடியாது எனத் தோன்றியது. அவர்களுடன் நானும் வருவதாகச் சொன்னேன்.

ஏனெனில் உயிரைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் நான் இருந்தேன். தனி மனுசியாக இருந்திருந்தால் நான் போயிருக்க மாட்டேன். நம் சூழ்நிலைக்கு ஏற்ப மாற வேண்டிய நிலையில் நான் இருந்தேன்.

பிள்ளைகள் இருவருக்கும் இரண்டு சோடி உடைகள், எனக்கு ஒரு சோடி உடை, எனது கணவன் எனக்கு முதன் முதலாக வாங்கித் தந்த சேலை, எதற்கும் பயன்படும் என வேறு இரண்டு சேலைகள், நமக்கு தேவையான அத்தாட்சிப் பத்திரங்கள், அடையாள அட்டை, இவற்றுடன் கடந்த கால வாழ்வை





நினைவூட்டக் கூடிய புகைப்பட அல்பங்கள் போன்றனவற்றை எடுத்துக் கொண்டேன்.

இவைகள் நீரில் நனையா வண்ணம் பொலித்தீன் பையினால் சுற்றி இரண்டு வயர் கூடையில் போட்டுக் கொண்டேன். இவற்றை எடுக்கும் போது விரக்தியில் என்னையறியாமல் சிரிப்பும், கண்ணீரும் ஒன்றாய் வந்தன. இதனை ஆரம்பத்திலிருந்து படிப்பவர்களுக்கு தெரியும் ஒரு பாரவூர்தி நிறைய ஆரம்பத்தில் ஏற்றிய பொருட்கள் இன்று இரண்டு வயர் கூடையுடன் முடியப் போகிறது.

கூடுதலான மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டினுள் சென்று விட்டார்கள். நாமும் இராணுவக் கட்டுப்பாட்டினுள் செல்வதற்காக மீண்டும் மாத்தளன் நோக்கி 2,3 நாட்கள் தங்கி சாப்பிடத் தேவையான பொருட்கள், தரப்பாள் என்பவற்றுடன் பயணமானோம். மாத்தளன் பகுதியில் ஓரிடத்தில் தரப்பாள் போட்டு இருந்தோம். அந்த இடம் ஒரு வித மணம் வீசிய, கறுப்பு நிறத்துடன் கூடிய மண். எனக்கு அந்த இடம் நரகமாகத் தெரிந்தது. அதனுள் சமைத்து சாப்பிடுவது என்பது மிகவும் கஷ்டமாக இருந்தது.

இவ் இடப்பெயர்வில் நாம் பெற்ற வலியை மறக்க முடியாது. எறிகணை வீச்சின் மத்தியிலும் நாம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சரணடைவதற்காக வந்திருக்கும் அவலநிலையை எண்ணி உள்ளம் உடைந்தது. என்னையறியாமலே கண்ணீர் வழியத் தொடங்கியது.

நான் என் கணவனை இழந்து, இரண்டு குழந்தைகளோடு நின்ற பொழுதில் கூட என் எதிர்காலம் எப்படி அமையப் போகிறதோ என்ற எண்ணம் தோன்றியதில்லை. பிரிவின் வலி இருந்தாலும் எப்படி வாழப் போகிறோம் என்ற எண்ணம் தோன்றியதில்லை.

அதற்குகாரணம் என்னதெரியுமா? எமக்காக அங்கே ஒரு தாயுமானவர் இருந்தார். அவருடைய வழிநடத்தலில் கட்டுக்கோப்பாக வழிநடத்த போராளிகள் இருந்தார்கள். போராளிகளால் நிர்வாகங்கள் பல பிரிக்கப்பட்டு, பொதுமக்கள் நிறைவாக வாழ்வதற்கான வழிமுறைகள் பல செயல்படுத்தப்பட்டன. பெண்கள் அச்சமின்றி நடு இரவிலும் நடமாடக் கூடிய வகையில் பாதுகாப்பாக தமிழீழத் தேசம் இருந்தது. அத்தியாவசிய பொருட்கள் பங்கீட்டு அட்டை அடிப்படையில் வழங்கப்பட்டன. இவ்வாறான சூழலில் எனது கணவர் உயிருடன் இல்லை என்ற கவலையைத் தவிர எதிர்காலம் பற்றிய பயமில்லை. ஆனால் இன்றைய சூழல் அப்படிபட்டதல்ல. என்ன நடக்குமோ என்று தெரியாத அவலநிலை.

சிங்களம் என்ன பழி தீர்க்கும் என்பது தெரியாது. எம் தேசிய தலைவர் எம் மீது மட்டுமல்ல பிற உயிர்களிடமும் அன்பும் அக்கறையும் கொண்டவர். இதற்கு சான்றாக உள்ள ஒரு சிறிய கதை இது.

தொலைத்தொடர்பு கோபுரம் அமைப்பதற்கான வேலைத் திட்டம் தொடர்பாக உரையாட அத்துறை சார்ந்த தொழில்நுட்ப வல்லுனர்கள் வந்திருந்தார்கள். கலந்தாய்வில் இந் நுண்ணலைகளின் அதிர்வால் பறவைகள் பாதிப்படையும் என்றும், குறிப்பாக சிட்டுக்குருவிகள் இனம் அழிந்து விடும் அபாயம் உள்ளதாகவும் கூறப்பட்டது.

தரைவழி இணைப்பு ஆபத்து குறைவு எனவும், கைபேசி இணைப்பு ஆபத்தானது என தெரிவிக்கப்பட, உடனடியாக அத்திட்டத்தைக் கைவிட்டு மாற்று நடவடிக்கை எடுக்கும் படி கூறினாராம் பெரியவர். அதைவிட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது இரவு நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் தலைவர் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது, காட்டுக் கரையோரமாக, எறிகணை வீழ்ந்து வெடித்து பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியதாம். நிசப்பதமான அந்த சூழலில் மயிலின் அலறல் சத்தம் கேட்டதாகவும், ஒரு கணம் அமைதி காத்த எம் தேசியத் தலைவர் 'நம் சுதந்திரத்துக்காக அவை தம் சுதந்திரத்தை இழக்கின்றன' என கவலையுடன் கூறினாராம் என என் தோழி கூறினாள்.

முல்லைக்கு தேர் கொடுத்த பாரியையும், புறாவுக்காக உயிர்விடத் துணிந்த சிபிச்சக்கரவர்த்தியையும், பசுவின் நீதிக்காக தன் மகனை பலியிடத் துணிந்த மனுநீதி சோழனையும் நாம் கதையில் கேட்டதுண்டு. ஆனால் இவற்றின் மொத்த வடிவமாக எம் தேசியத் தலைவர் திகழ்ந்தார். தமிழீழ மண்ணுக்காய், மக்களுக்காக மட்டும் வாழ்ந்த அந்த பெருந்தகையின் காலத்தில் நானும் வாழ்ந்தேன் என்பதில் எனக்கு அளவற்ற பெருமை.

எம் தேசப் புதல்வர்களின் அரவணைப்பில் வாழ்ந்த நாம், இன்று உயிர்ப்பிச்சை வேண்டி எதிரியிடம் சரணடையப் போகிறோம் என்பதை நினைக்க என் மீதே எனக்கு வெறுப்பாக வந்தது. என்ன செய்வது? இதுவும் காலத்தின் கட்டளையே.

எதிரியிடம் சரணடைய செல்வதில் பெருமகிழ்வு எனக்கில்லை. தமிழீழ மண்ணில் நாம் வாழ்ந்த வாழ்க்கை மிகவும் மன நிறைவானது. எம்மால் ஆன பங்களிப்பை நாம் எமது தேசத்துக்கு வழங்கினோம். எமது வாழ்க்கை தமிழீழத்தில் மிகச்சிறப்பாகவே அமைந்தது. அந்த பொற்காலம் இனி என்றும் வரப்போவதில்லை.

இன்று யுத்த பூமியாக மாறி, தொடர் இடப்பெயர்வுகளும் வலிகளுமாக எல்லாம் தொலைத்து மரணபூமியில் நாம் நிற்கிறோம். கண்மூடி ஒரு கணம் சிந்தியுங்கள். எங்கள் வலி புரியும். முடிந்தவரை இவ் வாழ்வோடு போராடினோம். தன் தேச மக்களையே உலக வல்லரசு நாடுகளின் துணையோடு, முப்படைகொண்டு அழித்த பெருமை சிறிலங்கா அரசை மட்டுமே சாரும்.

எம் உயிரைக் காக்க எதிரியிடம் சரணடையப் போவதில் மரணபயம் மட்டுமே இருந்தது. ஆம்! அன்றிரவு நாம் இராணுவத்திடம் சரணடைய ஆயத்தமானோம். மழை பெய்த வெள்ளத்தில் நிரம்பி வழிந்த தண்ணீர் ஊடாக நடந்து காப்பரண் தாண்டிப் போக வேண்டும். நாம் பயத்துடன் எதிர்பார்த்த இரவும் வந்தது. இரவுப் பொழுதில் நிலவோ, இருட்டோ எதுவென்று இன்று



ஞாபகமில்லை. நான் என் இரு பிள்ளைகளுடன் எனது உடமைகளை இரு வயர்கூடைகளில் நனையாமல் பொலித்தீன் (சொப்பிங் பேக்) பைகளில் போட்டு எடுத்துக் கொண்டோம்.

ஒரு பையில் எமது ஆவணங்கள், புகைப்பட அல்பங்கள், மற்றைய பையில் மாற்ற ஒரு சோடி உடுப்பு, போர்வையாக பாவிக்க இரண்டு சேலைகள் இந்த சொத்துகளோடு நாம் மக்களுடன் சரணடையச் சென்று கொண்டிருந்தோம். அப்போது எங்கும் வெள்ளமாக இருந்தமையால் எம்மால் பள்ளம் மேடு பார்த்து நடக்க முடியவில்லை.

வழியில் ஒரு பெரிய கிடங்கில் விழப் பார்த்த எங்களை பனை வடலிக்குள் நின்ற போராளியொருவர் டோர்ச்லைற் அடித்து, தள்ளி போங்கம்மா அதில் பெரிய பள்ளம்' என்றார். பாருங்கள்! அந்த இறுதிச் சண்டை கணத்திலும் எம் தேசப் புதல்வர்கள் எங்களில் அக்கறை காட்டுவதை நிறுத்தவில்லை. நாங்களோ..! நாம் எதிரியிடம் செல்கிறோம் என்பதைக் கூட பொருட்படுத்தாமல், எம்மைக் காப்பாற்றி அனுப்புவதை என்னவென்பது?

நாம் தள்ளி சென்று, மண் அணையை (காப்பரணை) அடைந்து விட்டோம். நாம் சென்று ஏறிய இடத்தில் முட் கம்பி வேலி போடப்பட்டு தென்னோலையால் அடைக்கப்பட்டு இருந்தது. நான் தென்னோலைகளை அகற்றி கம்பி வேலியை உயர்த்தி பிள்ளைகளை உள்ளே விட்டேன். நானும் ஒருவாறு உள்ளே புகுந்தேன். பாதுகாப்பிற்காக என்று உட்புறம் பெரிய பள்ளம் வெட்டப்பட்டிருந்தது என்பது எமக்குத் தெரியவில்லை.

அப்படியே ஒரு நீர் நிரம்பிய பள்ளத்தில் விழுந்து விட்டோம். விழுந்ததும் பிள்ளைகள் ஒரு முறை மூழ்கி விட்டார்கள். நான் இருவரையும் இழுத்து மேல் ஏற்றினேன். நாம் இப்போது நந்திக்கடலில் நிற்கிறோம். அந்த கிடங்கிலிருந்து பிள்ளைகள் என்னை இழுத்து மேலே விட்டார்கள். உடலளவில் சோர்வும், மனதளவில் பயமும் இருந்ததால் என்னால் நடக்க முடியவில்லை. நந்திக் கடல்அன்னை மடியில் நாம் நின்றோம்.

பிள்ளைகளிற்கு மார்பளவு தண்ணீர், எனக்கு இடுப்பளவு. பிள்ளைகள் ஒரு கையால் பைகளை தலையில் பிடித்தவண்ணம், மற்ற கையால் என்னைப் பிடித்துக் கொண்டனர். நாம் மெதுவாகச் சென்றோம். எங்கள் அக்காவின் மகன் குடும்பமும் எம்மோடு வந்தது. நாங்கள் அவரைத் தவற விட்டு விட்டோம்.

நான் ஒரு விடயம் சொல்ல மறந்து விட்டேன். நாம் மாத்தளன் நோக்கி வந்து கொண்டிருந்த போது இடையில் எறிகணை வீச்சில் அகப்பட்டோம். நான் பிள்ளைகளுடன் வழியில் அப்படியே படுத்து விட்டேன். அது எங்களை தாண்டிச் சென்று வெடித்ததில் ஒரு பெண்ணின் தலை அப்படியே துண்டாகி பறந்து தலைமயிருடன் வேப்ப மரத்தில் சிக்கி தொங்கியது. இதைப் பார்த்து அதிர்ந்த என் மகன் அதன் பின் பேசுவதை முற்றாக நிறுத்தி விட்டான். வெறித்த பார்வை மட்டுமே.

மகள் இதய பலவீனம் உள்ளவள். இருந்தாலும், அவளுக்கு எதுவும் இல்லை. மீண்டும் நந்திக் கடலுக்குள் வருவோம். அக்காவின் மகன் எம்மைக் கூப்பிட்டபடி.. நாமும் அவரை கூப்பிட்ட படி நந்திக்கடல் நீளவும் நடந்தோம். ஆங்காங்கே உடலங்கள் மிதந்தன. நாம் ஒரு சிறிய திடலை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். கிட்ட கிட்ட செல்ல இராணுவம் கறுப்பாக தூரத்தில் தெரிந்தது.

நாம் அத் திடலை நெருங்க நெருங்க துப்பாக்கி ஏந்திய சிங்கள இராணுவம் சிங்களத்தில் ஏதோ சொல்லியபடி கரையில் நின்றார்கள். அப்படியே எங்களை நிற்கும் படியும் சோதித்தே உள்ளே விடுவதாகவும் கத்திக் கூறினார்கள். பின்னால் தள்ளி போகும்படியும் ஒலிவாங்கி மூலம் கத்தினார்கள். முதலில் குழந்தைப் பிள்ளைகளுடன் உள்ளவர்களையும், கர்ப்பிணிப் பெண்களையும் உள்ளே வரும்படி கூறினார்கள். அதன் பின் சிறுவர், சிறுமிகள், பதினைந்து வயதுக்கு உட்பட்டவர்களை வருமாறு கூறினார்கள்.

எனது அக்காவின் மகன் குழந்தைப் பிள்ளையுடன் முதலில் சென்று விட்டார். அடுத்து பிள்ளைகளுடன் நானும் உள்ளே சென்றேன். மூன்றாவதாக முதியோரைக் கூப்பிட்டார்கள். அதன்பின் இள வயதுக்காரரைக் கூப்பிட்டார்கள். பின் எல்லோரையும் அச் சிறிய திடலில் இருத்தினார்கள். எங்கள் மனநிலையை எழுத வார்த்தையில்லை. இதயம் 'டிக் டிக்' என அடித்துக் கொண்டது. நானும், பிள்ளைகளும், அக்காவின் மகன் குடும்பமும், என் சிநேகிதியின் குடும்பமும் ஒன்றாக இருந்தோம்.

ஈர உடையுடனும் படபடக்கும் உள்ளத்துடனும் கூனிக் குறுகி நின்றோம் நாம். எம்மைப் போன்ற மனநிலையிலேயே ஏனையவர்களும் இருந்திருப்பார்கள். அந்த நிசப்தமான சூழலில் குழந்தைகளின் அழுகையொலி மட்டுமே கேட்டது. குளிர்காற்றும், ஈர உடைகளும், அச்சுறுத்தும் தொனியிலான இராணுவ கூப்பாடும் குழந்தைகளை அழத் துண்டியதோ என்னவோ.. அதைவிடவும் அங்கு மரண நிசப்தமே குடி கொண்டது. விடியும் பொழுதுக்காக காத்திருந்தோம் நாம்.

தொடரும்.....



# தாய்மையும் மகளும்





அடையாளம் தெரியவில்லை. ஆனால் அதே கருப்பு... கள்ளிப் பாலில் தப்பித்து வந்த அது என் கைகளில் சிக்கிக் கொண்டது. வந்த கோபத்திற்கு அதைத் தூக்கி வீசியெறியவே தோன்றியது.

தூக்கிய நொடிமுதல் சிரித்துக் கொண்டே இருந்தது அது. என்னைப் போலவே கண்களில் மச்சம், என்னைப் போலவே சப்பை மூக்கு. என்னைப் போலவே ஆணாகப் பிறந்திருந்தால்..? இந்நேரம் இங்கிருக்க வேண்டியதில்லை.

பல்லில்லா வாயில் பெருவிரலைத் தின்கிறது. கண்களை மட்டும் ஏனோ சிமிட்டாமல் பார்க்கிறது. ஒரு கணம் விரல் எடுத்தால்.? உதைத்துக் கொண்டு அழுகிறது. எட்டி... விரல் பிடித்து தொண்டை வரை வைக்கிறது, தூரத்தில் அவள் வருவது கண்டு அதைத் தூரமாய் வைத்து விட்டேன். கையெழுத்து வாங்கிக்கொண்டு கடைசி பஸ்ஸுக்கு திரும்பி வருகிறேன்.

முன்சீட்டில் இருந்த குழந்தையொன்று மூக்கை எட்டிப் பிடிக்க நெருங்கியும்... விலகியும் நெடுநேரம் விளையாடிக் கொண்டு இருந்தேன்.

ஏனோ அன்றிரவு தூக்கம் நெருங்கவில்லை. கனவுகூட கருப்பாய் இருந்தது. வெளிச்சம் வரும்வரை காத்திருந்தேன். போட்ட கையெழுத்துப் பொருந்தவில்லை என்ற பொய்த்தனத்தோடு, இன்னொரு கையெழுத்து வாங்க மீண்டும் சென்றேன்,

அதே கருப்பு.. அதே சிரிப்பு. கண்ணில் மச்சம். சப்பை மூக்கு.. பல்லில்லா வாயில் பெருவிரல் தீனி. ஒன்று மட்டும் புதிதாய்...! எனக்கும் கூட சிரிக்க வருகிறது.

கடைசி பஸ். ஆனால் பேருந்தில்... எந்த குழந்தையும் இல்லை. வீடு நோக்கி நடந்தேன். பாதி வழியில் கறிவேப்பிலைக்காரி... கை பிடித்தாள். உதறிவிட்டு நடந்தேன்.

தூக்கம் இல்லை. நெடுநேரம்... பெருவிரல் ஈரம் பட்டதால்... மென்மையாக இருந்தது.. முகர்ந்து பார்த்தேன்....

விடிந்தும் விடியாததுமாய்... காய்ச்சல் என்று சொல்லி... ஊருக்கு வரச் சொன்னேன். பல்கூட விளக்காமல்... பஸ் ஸ்டேண்டுக்கு சென்று விட்டேன்.

பஸ் வந்ததும் லக்கேஜை காரணம் காட்டி 'குழந்தையைக் கொடு' என்றேன்.

பல்லில்லா வாயில் பெருவிரல்!. இந்த முறை பெருவிரலைத் தாண்டி...ஈரம் எங்கோ சென்று கொண்டு இருந்தது. தினமும் என் மீது படுத்துக்கொண்டு... பொக்கை வாயினால் கடிப்பாள்.

அழுக்கிலிருந்து அவளைக் காப்பாற்ற நாளுக்கு நாலைந்து முறை குளிப்பேன். பான்பராக் வாசனைக்கு மூக்கைச் சொரிவாள். விட்டு விட்டேன். சிகரெட் ஒரு முறை சுட்டு விட்டது. விட்டு விட்டேன். சாராய வாசனைக்கு வாந்தியெடுத்தாள்.. விட்டு விட்டேன்.

ஒரு வயதானது.உறவுகளெல்லாம் கூடி நின்று,

'அத்தை சொல்லு'

'மாமா சொல்லு'

'பாட்டி சொல்லு'

'அம்மா சொல்லு' என்று... சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள்.

எனக்கும் ஆசையாக இருந்தது,

'அப்பா சொல்லு' என்று சொல்ல.

முடியவில்லை......! ஏதோ என்னைத் தடுத்தது. ஆனால் அவளை எதுவும் தடுக்கவில்லை. அவள் சொன்ன முதல் வார்த்தையே...

'அப்பா'தான்!

அவளுக்காக எல்லாவற்றையும்... விட்ட எனக்கு, அப்பா என்ற அந்த வார்த்தைக்காக...உயிரைக்கூட விடலாம் என்று தோன்றியது. அவள் வாயில் இருந்து வந்த அந்த வார்த்தைக்காக மீண்டும் பிறந்தேன்,

இந்த சாக்கடையை... அன்பாலேயே கழுவினாள்... அம்மா சொல்லித் திருந்தவில்லை. அப்பா சொல்லித் திருந்தவில்லை. ஆசான் சொல்லித் திருந்தவில்லை. நண்பர்கள் சொல்லித் திருந்தவில்லை. நாடு சொல்லியும் திருந்தவில்லை.

முழுசாய் மூன்று வார்த்தை பேச வராத... இந்த முகத்தை பார்த்து திருந்தி விட்டேன்..

வளர்ந்தாள்.. நானும் மனிதனாக வளர்ந்தேன்...

படித்தாள் என்னையும் படிப்பித்தாள்... திருமணம் செய்து வைத்தேன். இரண்டு குழந்தைகளுக்குத் தாயானாள். இரண்டு குழந்தைகளுமே.. பெரியவர்களாய் வளர்ந்து விட்டார்கள். நானும்கூட தாத்தாவாகி விட்டேன்.என்னை மனிதனாக்க... எனக்கே மகளாய் பிறந்த... அந்த தாய்க்காகக் காத்திருக்கிறது... இந்தக் கடைசி மூச்சு..!

ஊரே ஒன்று கூடி.., உயிர்த் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள், எனக்குத் தெரியாதா என்ன? யாருடைய பார்வைக்கு அப்புறம்... பறக்கும் இந்த உயிரென்று?

வானத்தை பார்த்துக் காத்திருக்கிறேன் வாசலில் ஏதோ சலசலப்பு. நிச்சயம் என் மகளாகத்தான் இருக்கும்.. என் பெருவிரலை யாரோ தொடுகிறார்கள்.


அதோ அது அவள்தான். மெல்ல சாய்ந்து.. என் முகத்தைப் பார்க்கிறாள்...

என்னைப் போலவே... கண்களில் மச்சம். சப்பை மூக்கு. கருப்பு நிறம். நரைத்த தலைமுடி.. தளர்ந்த கண்கள் என் கைகளை முகத்தில் புதைத்துக் கொண்டு, 'அப்பா அப்பா'என்று குமுறிக் குமுறி அழுகிறாள். அவள் எச்சில் என் பெருவிரலில் பட, உடல் முழுவதும் ஈரம் பரவ..., ஒவ்வொரு புலனும் துடித்து அடங்குகிறது.

தாயிடம் தப்பி வந்த மண்ணும் கல்லும்கூட, மகளின்... கை பட்டால் காந்தச் சிலையாகும்!

**(என்றோ வெளிவந்த இந்தக் கதையின் கருத்து மறுபிரசுரம் செய்ய வைத்திருக்கிறது.)**





ஐங்கரன் விக்னேஸ்வரா

# ஈரானின் புதிய அதிபர் மசூத் மேற்குலக உறவை சீர்படுத்துவாரா?

> குர்திஷ் தாய்க்கு பிறந்த ஈரானின் புதிய அதிபர், ஈரானின் சிறுபான்மை இனக்குழுக்களின் விவகாரங்களில் நீண்டகாலம் கவனம் செலுத்துகிறார்.

ஈரான் மேற்கு நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்துவதை விரும்புவதாக புதிய அதிபர் மசூத் பெசெஷ்கியன் தெரிவித்துள்ளார். ஒரு இதய அறுவை சிகிச்சை நிபுணரான இவர், ஈரான் - ஈராக் போரின் போது போராளியாகவும் மருத்துவராகவும் பணியாற்றியுள்ளார்.

அத்துடன் சர்ச்சைக்குரிய ஹிஜாப் தலைக்கவசசட்டத்தை எளிதாக்க விரும்பும் சீர்திருத்தவாதியான புதிய ஜனாதிபதியை ஈரான் பெற்றுள்ளது.

## மேற்கத்திய உறவில் சீர்திருத்தம்:

ஈரானின் அதிபர் தேர்தலுக்கான இரண்டாம் கட்டத் தேர்தலில் கடும்போக்காளரான சயீத் ஜலிலியை 2.8 மில்லியன் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து சீர்திருத்தவாதியான மசூத் பெசெஷ்கியன் (Masoud Pezeshkian) வெற்றி பெற்றுள்ளார்.

அதிபர் தேர்தலில் போட்டியிட்ட 4 வேட்பாளர்களில் மசூத் பெசெஷ்கியன் மட்டுமே மிதவாதி என்று கூறப்படுகிறது. மேற்கத்திய நாடுகளோடு ஈரான் கடும் மோதல் போக்கைக் கொண்டுள்ள நிலையில், மேற்கத்திய நாடுகளோடு நட்புறவை ஏற்படுத்த முயல விரும்புவதாக



தேர்தலுக்கு முன் மசூத் பெசெஷ்கியன் தெரிவித்திருந்தார். 69 வயதான ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் மேற்கத்திய நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்துவதையும், கட்டாய முக்காடு சட்டத்தை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளார். மசூத் பெசெஷ்கியன் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் அதிகாரத்தை மதிக்கிறார். ஈரானின் அரசாங்கத்தில் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்கவில்லை. அவர் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கிறார் எனவும் கூறப்படுகிறது.

மதவாத கடும்போக்காளர்களின் எதிர்ப்பு, இஸ்ரேல் - ஹமாஸ் மோதல், மற்றும் ஈரானின் அணுசக்தி திட்டம் போன்ற விடயங்களில் மேற்கத்திய கவலைகளை எவ்வாறு தீர்மானிப்பார் என்பதும் கேள்விக்குறியே?

### குர்திஷ் தாய்:

மசூத் பெசெஷ்கியன் செப்டம்பர் 29, 1954 அன்று மேற்கு அஜர்பைஜானின் மஹாபாத்தில் ஒரு அஸேரி தந்தை மற்றும் குர்திஷ் தாய்க்கு பிறந்தவர். அவர் அஸெரி மொழியை பேசுகிறார். மற்றும் ஈரானின் சிறுபான்மை இனக்குழுக்களின் விவகாரங்களில் நீண்டகாலம் கவனம் செலுத்துகிறார்.

ஈரானின் புதிய அதிபர் ஒரு இதய அறுவை சிகிச்சை நிபுணராக, டாப்ரிஸ் மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் தலைவராக பணியாற்றியுள்ளார். அத்துடன் ஈரான் - ஈராக் போரின் போது (1980 -1988) போர்வீரராகவும் மருத்துவராகவும் பணியாற்றி உள்ளார்.

### இதய அறுவை சிகிச்சை நிபுணர்:

மசூத் பெசெஷ்கியன் தனது மனைவி Fatemeh Majidi மற்றும் அவரது மகள்களில் ஒருவரை 1994 இல் ஒரு கார் விபத்தில் இழந்தார். அவர் மறுமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று முடிவு செய்து, தனது மற்ற இரண்டு மகன்கள் மற்றும் மகள்களை தனியாக வளர்த்தார்.

ஜனாதிபதி முகமது கடாமியின் நிர்வாகத்தின் கீழ் சுகாதாரம், சிகிச்சை மற்றும் மருத்துவக் கல்வி அமைச்சராக மசூத் பெசெஷ்கியன் பணியாற்றினார். அவர் ஈரானிய பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்ததுடன், தப்ரிஸ், அசார்ஷாஹர் மற்றும் ஒஸ்குவை பிரதிநிதித்துவப்படுத்தி பல காலகட்டங்களில் 2016 முதல் 2020 வரை முதல் துணை சபாநாயகராக பணியாற்றினார்.

> பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றதன் மூலம், ஈரானின் அடுத்த அதிபராக மசூத் பெசெஷ்கியன் தேர்வானார் என்று உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது. ஈரான் அதிபர் தேர்தலில் வாக்களிக்க 6.10 கோடி வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்த நிலையில், அவர்களில் சுமார் 3 கோடி பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

### பல சர்ச்சைகளில் சிக்கியவர்:

2003 இல் ஈரானிய - கனடிய புகைப்பட பத்திரிக்கையாளர் Zahra Kazemi யின் பிரேத பரிசோதனையில் கலந்து கொண்டார். அவர் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை








செய்யப்பட்டு, காவலில் இறந்தார். மண்டைக்குள் ரத்தக்கசிவுதான் மரணத்திற்குக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார். ஆனால் சிராய்ப்பு அல்லது வெட்டுக்கள் எதுவும் இல்லை என்று கூறினார், இது சர்வதேச கூக்குரல் மற்றும் விசாரணைக்கான கோரிக்கைகளுக்கு முரணானது. மசூத் பெசெஷ்கியன் பல சர்ச்சைகளில் சிக்கியுள்ளார்.

2017 ஆம் ஆண்டில், கட்டாய ஹிஜாப் கொள்கை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பே, 1978 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்குள் பெண்கள் ஹிஜாப் அணியாமல் தடை விதித்தவர்களில் முதன்மையானவர் என்றும் கூறப்படுகிறது.

2022 ஆம் ஆண்டில், மஹ்சா அமினியின் மரணத்திற்குப் பிறகு, ஹிஜாப் அணியாததற்காக கைது செய்யப்பட்டு சிறையில் மரணமானார். அவளது சடலத்தை அவரது குடும்பத்திற்கு திருப்பி அனுப்புவது இஸ்லாமிய குடியரசில் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அவர் கூறியமை சர்ச்சையை உருவாக்கியது.

## அதிபர் தேர்தலில் வெற்றி:

ஈரான் அதிபராக இருந்த இப்ராஹிம் ரெய்சியின் திடீர் மறைவை அடுத்து அந்நாட்டில் அதிபர் தேர்தல் நடந்தது. முடிவுகளின் படி ஈரானில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் சீர்திருத்தங்களை ஆதரிக்கும் வேட்பாளரான மசூத் பெசெஷ்கியன் வெற்றி பெற்றுள்ளார். இந்த தேர்தலில், சீர்திருத்தங்களை ஆதரிப்பவருமான மசூத் பெசெஷ்கியன் வெற்றி பெற்றதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.




பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றதன் மூலம், ஈரானின் அடுத்த அதிபராக மசூத் பெசெஷ்கியன் தேர்வானார் என்று உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது. ஈரான் அதிபர் தேர்தலில் வாக்களிக்க 6.10 கோடி வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்த நிலையில், அவர்களில் சுமார் 3 கோடி பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

50 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இந்த தேர்தலை புறக்கணித்துள்ளனர். பெறப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டதில், மசூத் பெசெஷ்கியன் 1 கோடியே 63 லட்சம் வாக்குகளை (53.70%) பெற்றுள்ளார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்களில் முக்கியமானவரான சயீத் ஜலிலி ஒரு கோடியே 30 லட்சம் வாக்குகளை பெற்றுள்ளார்.

இதையடுத்து, நாட்டின் அடுத்த அதிபராக மசூத் பெசெஷ்கியன் தேர்வாகி இருக்கிறார். தேர்தல் வெற்றியை அடுத்து அரசு தொலைக்காட்சியில் உரை நிகழ்த்திய மசூத் பெசெஷ்கியன், ‘நாட்டின் மீதான அன்பு மற்றும் உதவும் எண்ணத்துடன் வாக்களித்த அனைவருக்கும் நன்றி. அனைவருக்கும் நட்பின் கரத்தை நாங்கள் நீட்டுவோம். நாம் அனைவரும் இந்நாட்டு மக்கள். அனைவரையும் நாட்டின் முன்னேற்றத்திற்காக நாங்கள் பயன்படுத்துவோம்’ என்று தெரிவித்துள்ளார்.

மசூத் பெசெஷ்கியனின் வெற்றியை அடுத்து அவரது ஆதரவாளர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தலைநகர் தெஹ்ரான் மற்றும் பிற நகரங்களின் தெருக்களில் மசூத் பெசெஷ்கியனின் ஆதரவாளர்கள் நடனமாடியும், இனிப்புகளை வழங்கியும் கொண்டாடி வருவதாக செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# ஆசிரியருக்கு ஒரு விண்ணப்பம்

தனது மகனின் ஆசிரியருக்கு லிங்கன் எழுதிய புகழ் பெற்ற கடிதம் இது.

அனைத்து மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்ல, அனைத்து மனிதர்களும் உண்மையானவர்கள் அல்ல என்பதை எனது மகன் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனாலும், மனிதர்களில் அயோக்கியர்களுக்கு இடையில் உண்மையான கதாநாயகர்களும் இருக்கிறார்கள் என்பதையும், சுயநல அரசியல்வாதிகளுக்கு இடையில் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் பகைவர்களுக்கு இடையில் நண்பர்களும் இருக்கிறார்கள் என்பதையும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

அவனுக்குப் பொறாமைக் குணம் வந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். மௌனமாக ரசித்துச் சிரிப்பதன் ரகசியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். எதற்கெடுத்தாலும் பயந்து சுருங்கிக் கொள்வது கோழைத்தனம் என்பதைப் புரியவையுங்கள்.

புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களை அவனுக்குத் திறந்து காட்டுங்கள். அதே வேளையில், இயற்கையின் அதிசயத்தை ரசிக்கவும் அவனுக்குக் கற்றுக்கொடுங்கள்.

வானில் பறக்கும் பறவைகளின் புதிர் மிகுந்த அழகையும், சூரிய ஒளியில் மின்னும் தேனீக்களின் வேகத்தையும் பசுமையான மலை அடிவார மலர்களின் வனப்பையும் ரசிப்பதற்கும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

ஏமாற்றுவதை விடவும் தோல்வியடைவது எவ்வளவோ மேலானது என்பதைப் பள்ளியில் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். மற்றவர்கள் தவறு என்று விமர்சித்தாலும், தனது சுயசிந்தனை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைக்க அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

மென்மையான மனிதர்களிடம் மென்மையாகவும், முரட்டு குணம் கொண்டவர்களிடம் கடினமாகவும் அணுகுவதற்கு அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

கும்பலோடு கும்பலாய்க் கரைந்து போய் விடாமல் எந்தச் சூழ்நிலையிலும் தனது சொந்த நம்பிக்கையின்படி சுயமாகச் செயல்படும் தைரியத்தை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அனைத்து மனிதர்களின் குரலுக்கும் அவன் செவிசாய்க்க வேண்டும். எனினும் உண்மை என்னும் திரையில் வடிகட்டி நல்லவற்றை மட்டும் பிரித்து எடுக்க அவனுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். கண்ணீர் விடுவதில் தவறில்லை என்றும் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

போலியான நடிப்பைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்றுப் புகழுரைகளைக் கண்டால், எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள்.

தனது செயற்திறனுக்கும், அறிவாற்றலுக்கும் மிக அதிக ஊதியம் கோரும் சாமர்த்தியம் அவனுக்கு வேண்டும். ஆனால், தனது இதயத்திற்கும், தனது ஆன்மாவிற்கும் விலை பேசுபவர்களை அவன் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

பெருங்கும்பல் திரண்டு வந்து கூச்சலிட்டாலும், நியாயம் என்று தான் நினைப்பதை நிலைநாட்ட தொடர்ந்து போராடுவதற்கு அவனுக்கு நம்பிக்கை கொடுங்கள்.

அவனை அன்பாக நடத்துங்கள். ஆனால் அதிக செல்லம் கொடுத்து சார்ந்திருக்க வைக்க வேண்டாம். ஏனென்றால் கடுமையான தீயில் காட்டப்படும் இரும்பு மட்டும் தான் பயன் மிக்கதாக மாறுகிறது.

தவறு கண்டால் கொதித்து எழும் துணிச்சலை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அதே வேளையில் தனது வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையை அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்.

அவன் தன்மீதே மகத்தான நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போதுதான் மனித குலத்தின் மீது அவன் மகத்தான நம்பிக்கை கொள்வான்.

இது ஒரு மிகப்பெரிய பட்டியல்தான். இதில் உங்களுக்குச் சாத்தியமானதை எல்லாம் கற்றுக்கொடுங்கள். எனது அன்பு மகன், மற்ற எல்லாக் குழந்தைகளையும் போல அவனும் மிக நல்லவன்.

# வணல்

**கொற்றவை** **அங்கம்: 22**


சுப்பிரமணி ஐயாவும் இராசமணி அம்மாவும் காலங் காலமாக பழமைவாத கருத்துக்களை விடாப்பிடி யாக பிடித்துக் கொண்டிருக்கும் ஒரு சராசரி யாழ்ப்பாண குடும்பத்திலிருந்து வந்தவர்கள். அவர்களால் அவ்வளவு இலகுவில் மனமாற்றம் காண முடியாது என்பது என்னவோ உண்மைதான். மக்கள் எழுச்சியுற்றிருந்த போராட்ட காலங்க ளில், கரைப்பார் கரைக்க கரைக்க கல்லும் கரையும் என்பார் களே. அதுபோல, சுப்பிரமணி ஐயாவில் கொஞ்சம் மாற்றம் தென்பட்டது.

ஆனாலும் இராசமணி அம்மாவின் கிடுக்கிப்பிடி பழக்க வழக்கங்களில் இருந்து முற்றாக மீளவும் முடியாமல் பழமை வாதத்தை விட்ட புதிய மனிதனாக மாறவும் முடியாமல் அவர் தவித்துப் போனதை ஆனந்தன் பார்த்திருக்கிறான். அதனால்தான் அவர் எப்போதும் கொஞ்சம் நழுவல் போக் குடன் நடந்து கொள்வார்.

அம்மாவுக்கு தன்னுடைய உயர் சாதி, தன்னுடைய மதம் என்ற பெருமை அதிகம். அவவுடைய ஆட்கள் வீட்டுக்கு வந்தாலும் கால் கழுவாமல் வீட்டுக்குள் எடுக்கமாட்டா என்றால் பாருங்களேன். போராளிகளுடன்கூட கொஞ்சம் தள்ளித்தான் நடந்து கொள்ளும் இராசமணி அம்மா, அண் மைக்காலங்களில் வாழ்க்கையில் விழுந்த அடிகளால் கொஞ்சம் மாறிப்போயிருப்பதை உணர்ந்து ஆனந்தன் ஆச் சரியப்பட்டிருக்கிறான்.

அதற்காக இப்படியா...? புகைப்படம் கொடுத்த அதிர்ச் சியில் இருந்த ஆனந்தனை கேற்றடியில் கேட்ட குரல் சுயநினைவுக்கு கொண்டு வந்தது.





''அங்க ஐயா மயங்கி விழுந்திட்டார்... ஆராவது வாங்கோ!... உடனை வாங்கோ...!''

''ஐயோ....! அவருக்கு என்ன ஆச்சுது? விதானையிட்டை தானே போனவர். இப்ப எங்கை அவர்...?'' கூக்குரலுடன் கேற்றடிக்கு ஓடிய இராசமணி அம்மாவை பின்தொடர்ந்தான் ஆனந்தன்.

'என்ன நடந்தது என்று தெரியவில்லை. திடீரென்று அங்கு நின்ற ஒருவருடன் வாக்குவாதமாகி விட்டது. சத்தமாகப் பேசியவர் திடீரென்று மயக்கமாகி விட்டார்' என்றார்கள்.

பக்கத்தில் இருந்த 'கிளினிக்'கில இருந்து உடனையே ஒரு வைத்தியர் வந்து பார்த்திருக்கிறார். இரத்த அழுத்தம் அதிக மாகித்தான் மயக்கம் வந்திருக்கு என்று உடனடியா ஒரு ஊசி ஏற்றியிருக்கிறார்.

ஆனந்தன் ஒரு ஆட்டோ பிடித்துக்கொண்டு வந்தான். அவனும் இராசமணி அம்மாவும் அங்கு போனபோது சுப்பி ரமணி ஐயாவுக்கு மயக்கம் தெளிந்திருந்தது. ஒரு வாங்கில் உட்கார்ந்திருந்த அவர் தளர்வாக இருந்தார். அவர் பிளாஸ்ரிக் கவரில் போட்டு கொண்டுபோயிருந்த பத்திரங்கள் அருகில் இருந்தன. அவர் வந்த வேலை முடிந்த பின்னர்தான் இந்தப் பிரச்சனை வந்ததாகச் சொன்னார்கள்.

அவரையும் அம்மாவையும் பத்திரமாக ஆட்டோவில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பினான் ஆனந்தன்.

''அம்மா! நீங்கள் போங்கோ.... பக்கத்திலதானே டொக்டர் இருக்கிறார்...? நான் போய் ஐயாவுக்கு என்ன மருந்து குடுக்கோணும் எண்டு எல்லாம் வடிவாக் கேட்டுக்கொண்டு

வாறன்... தேவையெண்டா இந்த ஆட்டோதம்பியும்... உங்களுக்கு உதவுவார்... நான் அவரட்டை சொல்லியிருக்கிறன்...''

''வயசான காலங்களில கொஞ்சம் கவனமாப் பாத்துக் கொள்ள மாட்டீங்களோ தம்பி...?'' வைத்தியர் அவனைக் கடிந்து கொண்டார்.

''அவருக்கு கொஞ்சம் யோசனையள் கடுமையா இருக்கு.. அதாலதான் 'பிறஷர்' கூடீட்டுது. ஆரும் மனம் விட்டுக் கதைச்சு அவரின்ரை மன அழுத்தத்தைக் குறைக்க வேணும்... வயசு போகுதெல்லே தம்பி! இனி அவையள் குழந்தைப் பிள்ளை மாதிரி.... பிள்ளையள், சொந்த பந்தம் கொஞ்சம் அன்பா நடந்துகொள்ள வேணும்... அதுதான் முதலாவது மருந்து.''

பின்னே, ஒவ்வொரு நாளும் ராவில மட்டும் எடுக்க எண்டு ஒரு குளிசை தாறன். தவறாம போடவேணும்

அவன் வீட்டுக்கு போனபோது ஐயா நன்றாகியிருந்தார்.

''சாப்பிடுங்கோ என்னுறன் நீயும் வரட்டும் என்னுறார். வசந்தன்...! கையைக் கழுவிக் கொண்டு வாங்கோ.. சாப்பாடு எடுத்து வைக்கிறன்... நேரம் பிந்திப் போச்சு...'' வீட்டுக்கு போய் சாப்பிடுவதாக மறுதலித்தும் இராசமணி அம்மா விடுவதாக இல்லை.

''சத்தம் போடாம இரும் வீட்டில ராவைக்கு சாப்பிடலாம்..'' அம்மா முடிவாக சொல்லி விட்டா.

மூவருமாக உணவருந்தினார்கள். மூன்றாவது மகனின் விசயமறிந்த யாரோ அவரை வம்புக்கு இழுத்ததாக ஐயா சொன்னார்.

'என்னவும்...! கிளவியைக் கொணர்ந்திருக்கிறானாம் மோன்..? அதுவும் ஆபிரிக்காக்காறியை...' என்றானாம்.

''எனக்கு என்ன நடந்தது எண்டு தெரியேல்லை... ரத்தம் சூடேறிக்கொண்டு வந்துது பிடிச்சுக் கத்தி விட்டுட்டன்...''

டொக்டர் சொன்னது ஞாபகத்துக்கு வர

''ஐயா! இதில என்ன கிடக்கு? இப்ப ஆர் இனம், மதம் பாத்துக் கட்டுகினம் மனசுக்கு பிடிச்சிருந்தா சரி. அவர் சந்தோஷமா இருக்கிறார்தானே?''

''ஓமோம்..! என்ன கறுமமோ தெரியாது... ரெண்டு பேருக்கும் நல்லா ஒத்துப் போகுது...'' இருவரும் ஒருமித்துச் சொன்னார்கள்.





''அதுதான் விசயம்.... அம்மா...! நாங்கள் இப்பிடி வாழ்ந்து பழக்கப்பட்டனாங்கள்... அதுதான் மற்றவை என்ன சொல்லுவினம் எண்டு நினைச்சு பாதி வாழ்க்கையை அழிக்கிறம்... அததை அதின்ரை போக்கிலையே விடுங்கோ.... எல்லாம் சரியாப்போம்... ஆர் கண்டது? இப்ப அவை வந்து போன துக்குப் பிறகு அவதான் உங்களுக்குப் பிடிச்ச மருமகளாகவும் இருக்கலாம்.... என்ன..? மற்றவை என்ன நினைக்கினம் என்கிறது எங்களுக்கு எதுக்கு? நினைக்கிறது அவையின்ரை சொந்த விருப்பம்.. என்ன?''

ஆனந்தன் பேசியது அவர்களுக்கு ஆறுதலாக இருந்திருக்கிறது.

''அதுதானே...! ஊர் சும்மா கதைக்கும்.. காதில வாங்கக் கூடாது.. . '' என்றா அம்மா.

ஐயாவுக்கு என்ன சாப்பாடு, குளிசையை எப்படி கொடுக்க வேண்டும் என்பனவற்றை விளங்கப்படுத்தி விட்டு வீட்டுக்குப் புறப்பட்டான் ஆனந்தன்.

வெளியே மாமரத்துக்குக் கீழே கயிற்றுக் கட்டிலில் இருந்து பேசிக் கொண்டிருந்தனர் சாந்தியும் வெண்ணிலாவும்.

''இன்னும் சரியாச் சுகம் வரேல்லை... ஏனப்பா இந்தக் காத்துக்கை இருக்கிறாய்...? அது சரி! நாளைக்குச் சோதினை.... அம்மாவோட செல்லம் கொஞ்சுறாவாக்கும் மகள்... படிக்கேல்லையே....?''


''எனக்கு எல்லாம் மாறீட்டுது... பிள்ளை இவ்வளவு நேரமும் படிச்சவள்... நான்தான் காத்தோட்டமா இருக்கட்டும் எண்டு வெளியில இருத்தி வைச்சிருக்கிறன்...'' என்றாள் சாந்தி.

''நான் சும்மா பகிடிக்குத்தான் கேட்டனான்... நெடுகப் படிக்கக்கூடாது. உடம்புக்கும் மூளைக்கும் ஓய்வும் குடுக்கோணும்...'' என்றவனிடம் அன்றைய நாள் பற்றி துளைத் தெடுத்தாள் வெண்ணிலா.

இப்படி மூவருமாக இருந்து கதைத்து, சிரித்து எவ்வளவு நாட்களாகி விட்டன? இருந்தாலும் கலா பற்றி தப்பித் தவறியும் எதுவும் பேசிவிடக் கூடாது என்பதில் அவனும் சாந்தியும் கவனமாக இருந்தார்கள்.

மறுநாள் கணக்குப் பரீட்சை. தன்னுடைய சந்தேகங்களை ஆனந்தனிடம் கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டாள் வெண்ணிலா. அன்றிரவு நிம்மதியாக உறங்கினான் ஆனந்தன்.

அடுத்த இரு வாரங்களுக்கும் அவனுக்கு மூச்சுவிடவே



நேரமில்லாத வேலை. சாந்தியும் படிப்பில் கெட்டிக்காரி. இதனால் மற்ற அனைத்துப் பாடங்களிலும் இருந்த சந்தேகங்களை சாந்தி போக்கி வைக்க ஒருவாறு வெண்ணிலாவின் சோதனையும் முடிவடைந்தது.

இரண்டு நாட்களாக ஒரே கும்மாளம்தான். வேலை முடிந்த கையுடன் ஆனந்தனும் வீட்டுக்கு வந்துவிடுவான். சாந்தி வித விதமாகச் சமைத்து வைத்திருப்பாள். எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து கதைபேசி சாப்பிடுவது நிறைவாக இருந்தது. சமயங்களில் பக்கத்து வீட்டுப் பாட்டியும் சேர்ந்து விடுவார். இரவுப் பொழுதுகள் உண்மையாகவே இனிமையாகக் கழிந்தன.

சனி, ஞாயிறுகளில் வெங்கியும் காவேரியும் பிள்ளைகளுடன் வந்து தங்கினார்கள். எல்லோருமாகச் சேர்ந்து நயினாதீவு கோயிலுக்கு போய் வந்தார்கள். அவர்கள் போகும்போது சாந்தியும் வெண்ணிலாவும் தங்களுடன் வந்து தங்க வேண்டும் என்று அடம்பிடித்ததால், சரி ஒரு மாறுதலாக இருக்கட்டுமே என்று அவர்களை வெங்கி குடும்பத்துடன் அனுப்பி வைத்தான் ஆனந்தன். அவனுக்கும் வேலை கொஞ்சம் அதிகம்.

அவன் 'டெலிவரி' செய்யும் மருந்துக் கடையில் எப்போதும் கூட்டமாக இருக்கும். இதனால் அவன் வாரத்தில் இன்னுமொரு நாள் அதிகமாக டெலிவரி செய்யவேண்டி இருந்தது. ஆனந்தனுக்கு இது எப்போதும் வியப்பாகவே இருக்கும். அரச வைத்தியசாலைகளில் மருந்து கொடுப்பார்களே?

விசாரித்ததில் அவ்வளவும் தனியார் மருத்துவமனைகளில் இருந்து வரும் மருந்துச்சீட்டுகளாம். அரச வைத்தியசாலைகளில் வேலை செய்யும் வைத்தியர்களே 'பின்னேரம் என்ரை கிளினிக்குக்கு வாங்கோ' என்று தங்களிடம் வரும் நோயாளிகளை தனியார் மருத்துவமனைகளுக்கு அனுப்புகின்றனராம். ரத்தம் சோதிக்க, ஸ்கான் எடுக்க, எக்ஸ்ரே எடுக்க என்று எல்லாமே தனியாரிடம் காசுக்கு வேலை நடக்க, அரச வைத்தியசாலை இயந்திரங்கள் பழுதடைந்து, துருப்பிடித்துக் கிடக்கின்றனவாம்.

அதை விடவும் அதிர்ச்சியான விசயம் அரச வைத்தியசாலை வைத்தியர்களின் அலட்சியப் போக்கினால்தான் சிறுமி ஒருத்தியின் கை துண்டிக்கப்பட்டதாம் இரட்டைக் குழந்தைகளை பிரசவித்த தாய் இறந்து போனதும் இதே அலட்சியத்தினால்தானாம். இப்படி பல்வேறு கதைகளின் பின்னால் இந்த 'மருத்துவ மாஃபியாக்கள்' தான் இருக்கிறார்களாம்.

மண்டிக்காரரும் பல மருந்துக் கடைகள் வைத்திருக்கிறார். அவருக்கு கட்சிக்காரருடனும் நல்லுறவு இருக்கிறது. பாடசாலை மாணவர்களுக்கு போதைவஸ்து விநியோகிப்பதிலும் அவரின் பங்கும் இருக்குமோ என்றும் ஆனந்தனுக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. இதேபோல தனியார் மருத்துவமனைகளுடன் அவர் வைத்திருக்கும் தனிப்பட்ட தொடர்புதான் மருந்துக்கடைகளில் கூட்டம் அலைமோதவும் காரணமாக இருக்க வேண்டும்.

டானியல் அண்ணர் எப்படி இருக்கிறாரோ? வேலை முடிந்த கையுடன் அவரைப் பார்க்கப் போனான் ஆனந்தன். பெரிய வீடு. ஒன்றிரண்டு விளக்குகளே ஒளிர்ந்ததால் பாதிக்கு மேல் இருள் மண்டிக் கிடந்தது. பெரிய ஹாலில் கலாவின் படத்தை பெரிதாக்கி மாட்டியிருந்தார்கள். கலா அதில் உயிர்ப்புடன் ஒளிர்ந்தாள். அவளின் சிரிக்கும் கண்களில் குழந்தைத்தனம் விரவிக் கிடந்தது. இன்று இவள் உயிருடன் இல்லை என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

அவனையே பார்த்துக்கொண்டிருந்த டானியல் அண்ணர்,

''நானும் ரெஜினாவும் நிறைய அழுதிட்டம். இதைப்பற்றி அர்த்தமற்ற நிறையப் பேச்சுகளைப் பேசியாச்சு. இப்ப மகளைக் கொடுத்ததுக்குப் பிறகும் பேசினம்... இந்தமுறை... அர்த்தத்தோட... ஓரளவுக்கு தெளிவும் கிடைச்சிட்டுது.... தம்பி...! ஆனந்தன்... வாரும்... இங்க இருப்பம்...'' என்றவர் உள்ளே திரும்பி,....

''இங்க ஆர் வந்திருக்கிறது எண்டு பாரும்...!'' என்று குரல் கொடுத்தார்.

எட்டிப் பார்த்த ரெஜினாக்கா திரும்பவும் உள்ளே போய் மூவருக்குமான தேநீருடன் வந்தா.

''ஆனந்தன், இனி எங்கடை வாழ்க்கையில என்ன இருக்குது...? சொல்லும்? கலாவைப் போல மாட்டுப்பட்ட பிள்ளையளைக் காப்பாத்த எங்களால முடிஞ்சதைச் செய்யிறதுதான் இனி எங்கடை மிச்ச வாழ்க்கை எண்டு முடிவு எடுத்திருக்கிறம். இன்னும் கொஞ்ச நாள்ள பாடசாலைகள், தனியார்கல்வி நிறுவனங்கள் எண்டு இளம் பிள்ளையள் வாற இடங்களில பிரசாரம் செய்யத் தொடங்கிறதா இருக்கிறம்.''

'ஆனா அண்ணை!... நீங்கள் கதைக்கேக்க கலா பற்றியும் சொல்ல வேண்டி வருமல்லோ....? அது உங்களுக்கு ஒவ்வொரு கூட்டத்திலயும் வேதனை தாறதா அமையாதோ...?'

''நானும் இவவும் இதைப் பற்றியும் கதைச்சு ஒரு முடிவு எடுத்திருக்கிறம்... ஒவ்வொரு கூட்டத்திலயும் நாங்கள் கலாவைப் பற்றிச் சொல்லுவம் ஒவ்வொரு நாளும் அவளின்ரை வாழ்க்கை எப்பிடிச் சீரழிஞ்சுது, பெற்றோரா நாங்கள் ஒவ்வொரு நாளும் பட்ட துன்பம் என்ன, அவளை இழந்து அநாதைப் பெற்றோராக இருக்கிற எங்கடை நிலைமை இனி என்னவாகும் எண்டு எல்லாம் கதைக்கப்போறம். அதைக் கேட்டு எண்டாலும் மன மாற்றம் வராதோ..? என்ன?'' டானியல் அண்ணர் உறுதியாக இருந்தார்.

''அது மட்டுமில்லை.... இளம் பிள்ளையளை போதை வஸ்திலயிருந்து மீட்க எண்டு ஒரு 'ட்ரஸ்ட்' கலாவின்ரை பெயரால உருவாக்கிறன். அதை நடத்துற அங்கத்தவர் குழுவில உம்மடை பேரையும் போடுறன். இதுக்கு நீர் மறுப்பு சொல்ல மாட்டீர்தானே?''

மறுநாள். சாந்தியும் வெண்ணிலாவும் வீட்டிற்கு வந்தார்கள். வெண்ணிலா அவனில் கோபமாக இருந்தாள்.

''அப்பா! ஏன் எனக்கு சொல்லாமல் மறைச்சனீங்கள்?''

தொடரும்.....



# பெண்

பெண்களைப் பற்றி 'வில்லியம் கோல்டிங்' என்னும் ஆங்கில நாவலாசிரியர் சொல்லுவது இதுதான்:

★பெண்கள் தங்களை ஆண்களுக்கு சமம் என்று முட்டாள்தனமாக எண்ணிக்

★கொண்டிருக்கின்றனர் என்றே நான் நினைக்கிறேன்.

★பெண்கள் ஆண்களுக்கு நிகரானவர் இல்லை மாறாக, ஆண்களைவிட

★பன்மடங்கு உயர்ந்தவர்கள் பெண்கள்.

★ஒரு பெண்ணிடம் நீ எதையாவது கொடுத்தால், அவள் அதனை பெரிதாக்கி சிறப்பு செய்து விடுவாள்.

★உன் உயிரணுவைக் கொடு, அவள் உனக்கு ஒரு குழந்தையைத் தருவாள்.

★ஒரு வீட்டைக் கொடுத்தால் அதனை அவள் குடும்பமாக மாற்றிக் காட்டுவாள்.

★நீ மளிகைப் பொருட்களைக் கொடுத்தால் அவள் விருந்து படைப்பாள்.

★உன் புன்னகையை அளித்தால் அவள் தன் இதயத்தை உனக்குக் கொடுத்து விடுவாள்.

★நீ கொடுப்பது எதுவாயினும் அதனை பல மடங்கு பெரிதாக்குவது பெண்ணின் குணம்.

எனவே நீ அவளுக்கு சிறிய அளவிலேனும் ஏதாவது தொல்லை கொடுத்தாயானால். அவள் உடனே அதையே 'டன்' கணக்கில் உனக்குத் திருப்பிக் கொடுப்பாள் என்பதையும் புரிந்து கொள்.